ஏப்ரல். 11 - . ஏப்ரல் 17, 2010 April 11 - April 17, 2010 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்

உயிர் வலிக்கும் தருணங்கள்...!



## தெற்கே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு


## வடக்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துகள்

# தேர்தலின் பின் அடுத்து என்ன?

கடந்த ஒரு மாதத்துக்கு மேலாகத் தொடர்ந்த தேர்தல் திருவிழா முடிந்துவிட்டது.

சுவரொட்டிகள், கட்டவுட்டுக்கள், பதாகைகள், கலண்டர்கள், பத்திரிகை விளம்பரம் எனக் கோடிக் கணக்கில் கொட்டித் தீர்த்து நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பதவிக்காக ஆயிரக்கணக்கானவர்கள் களமாடி, ஓய்ந்து போய் விட்டார்கள்.



மறுபுறத்தில் விருப்புவாக்குப் பெறுவதற்காகக் கட்சிகள் சார்பில் போட்டியிட்டவர்கள் தமக்கிடையே மோதிக்கொண்டார்கள். இப்படி மோதிக் கொண்டவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினரே எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மொத்தமான வன்செயல் சம்பவங்களான 326சம்பவங்களில் பொதுமக்கள் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் தமக்குள் மோதிக் கொண்ட சம்பவங்கள் 200 இற்கு மேல் எனப் பதிவாகியுள்ளது.

பெரும்பான்மையைப் பெற வேண்டும் என்று எழுந்த கோஷம் தமிழ், முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அழிக்கும் நோக்கம் கொண்டது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆண்டாண்டு காலமாக இருந்து வந்த இனவாதம் இந்தத் தேர்தலில் மீண்டும் அரங்கேறியுள்ளது.

தமிழ், முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை குலைக்கும் நோக்கம் கொண்டதாகக் கட்டவிழ்க்கப்பட்ட இனவாத அரசியல் கோஷம் பெரிதாக எடுபடவில்லை என்பதையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

இந்த நாடு சிங்கள - பௌத்த நாடு. இந்த நாட்டில் வேறு ஓர் இனமோ, மொழியோ இருக்க முடியாது என்பதற்குக் கட்டியம் கூறும் வகையில் நாடாளுமன்றத் தேர்தல் அமைந்ததை அவதானிக்க முடியும்.

தமிழர் தரப்பின் சார்பில், முஸ்லிம் மக்கள் தரப்பின் சார்பில் கடந்த 30 வருடங்களாக இடம் பெறும் ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டோம் என்று மார் தட்டும் சிங்களத் தலைமைகள், ஒருநாடு, ஓர் இனம் என்ற கொள்கையைப் பலப்படுத்தத் தேர்தலைப் பயன்படுத்தியுள்ளன.

இந்த நாட்டில் இரு இனங்கள் உண்டு. அந்த இனங்களில் சிறுபான்மையாக உள்ள மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண வேண்டும் என்று சர்வதேசம் எவ்வளவுதான் உரத்துக் குரல் கொடுத்தாலும், அதைக் காதில் வாங்காது தனது ஆட்சிக் கதிரையைத் தக்க வைக்கவே போக்கைக் கடைப்பிடிக்க முனைந்தால் நாடு முன்னேற்றப் பாதையில் செல்ல வாய்ப்பே கிட்டாது.

அது நிற்க,

தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ற தீர்வை வரும் அரசு முன்வைக்காவிட்டால் நாடு மீண்டும் மோசமான குழப்ப நிலைக்குத் தள்ளப்படும் என்று ஆய்வாளர்கள் எச்சரிக்கிறனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வென்று ஆட்சியைக் கைப்பற்றுபவர்கள் அதிகளவு சுயாட்சி கோரும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என வலியுறுத்தியுள்ள அரசியல் ஆய்வாளர்கள், இதனை நிறைவேற்றுவதற்கு தவறும் பட்சத்தில் நாடு மீண்டும் மோசமான குழப்ப நிலைக்குள் தள்ளப்படலாம் என்று எச்சரித்துள்ளனர்.

'ஏ.எவ்.பி.' செய்திச் சேவைக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

அவர்கள் 'ஏ.எவ்.பி'க்கு மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

எதிர்க்கட்சிகளைத் துன்புறுத்துகிறார் என்றும் அரசை விமர்சிப்பவர்களை அடக்கி ஒடுக்குகிறார் என்றும் விமர்சகர்களால் குற்றம் சாட்டப்படும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் மூலம் தனது அதிகாரத்தை மேலும் பலப்படுத்திக்கொள்ளவுள்ளார்.

கடந்த ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று மீண்டும் தெரிவுசெய்யப்பட்ட அவரின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் இந்த விடயத்தில் ஐக்கியப்பட வேண்டும் என்கிறார்.

அவர்கள் இந்த விடயத்தில்



தோல்வி அடைந்தால், நாடு பாரிய குழப்ப நிலையை எதிர்கொள்ளும் என மேலும் குறிப்பிட்டுள்ள விக்டர் ஐவன், விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவடைந்துள்ளமை புதிய ஆரம்பம் ஒன்றுக்கான வாய்ப்பை அரசியல் கட்சிகளுக்கு வழங்கி உள்ளது என்கிறார்.

நாடு எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை குறித்து தேர்தல் பிரசாரங்களில் எவ்வித விவாதங்களும் இடம்பெறவில்லை என்கிறார் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்து.

அடுத்த நாடாளுமன்றத்தில் சிறுபான்மைக் கட்சிகளுக்கு கிடைக்கும் ஆசனங்களைப் பொறுத்தே சுயாட்சிக்கான கோரிக்கையின்

## தீர்வு முன்வைக்கப்படாவிட்டால் மோசமான விளைவை நாடு எதிர்கொள்ளும்

தேர்தலில் எமது வெற்றி உறுதி செய்யப்பட்டு விட்டது. இப்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கே போராடு கின்றோம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்த பின்னரே, அவரது கட்சி வேட்பாளர்களிடையே மோதல்கள் வெடித்தன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடும் முஸ்லிம் கட்சிகளை யும், மலையகக் கட்சிகளையும் தலையெடுக்க விடாத வகையில், கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட சிங்கள வேட்பாளர்கள் இனவாதப் பிரசாரங்களை முன்னெடுத்தனர்.

சிங்களக் கட்சிகளுக்கே வாக்களிக்க வேண்டும் என அவர்கள் விடுத்து வந்த மிரட்டல்கள், விருப்பு வாக்கு சம்பந்தப்பட்டதாகவே இருந்தது.

குறிப்பாக, அம்பாறையிலும் மலையகத்திலும் சிங்களக் கட்சிகளுக்கே வாக்களிக்க வேண்டும் என்று எழுந்த கோஷம், தமிழ், முஸ்லிம் வாக்காளர்களை அச்சுறுத்துவதாக அமைந்தது.

மூன்றில் இரண்டு தெற்குத் தலைமை முனைப்புக் காட்டுகிறது.

இந்தப் போக்கு நீடிக்குமானால், நாட்டின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வும் கிட்டாது. நாடு பொருளாதாரத்தில் முன்னேறமுடியாது. இந்த யாதார்த்த நிலையைச் சிங்களத் தலைமைகள் ஏற்கவேண்டும். அப்போது தான் நாடு முன்னேற்றப்பாதையில் நகர முடியும்.

இந்தியாவும், சீனாவும் தமது நலனில் அக்கறை கொண்டு உதவிகளை வழங்கலாம். மேற்கு நாடுகளைப் பகைத்துக் கொண்டு, இந்த நாடுகளின் உதவியைப் பெறுவது, நாட்டின் முன்னேற்றத்துக்கு எந்தவிதத்திலும் உதவியாக அமையமாட்டாது. மேற்குலகத்தின் சொல்லையும் கேட்கவேண்டும். அந்த நாடுகள் கூறும் உபதேசங்களை மதித்துச் செயற்படும் நிலை எப்போது உருவாகிறதோ அப்போதுதான் நாடு முழுமைபெறும்.

மேற்குலகம் குற்றஞ்சாட்டும் மனித உரிமை மீறல் விவகாரத்தில் இருந்து நாடு விடுபடவேண்டும். அதற்கு அந்த நாடுகள் கூறும் விசாரணைக்கு ஒப்புதல் கூறவேண்டும்.

அதைவிடுத்து சண்டித்தனப் நாடாளுமன்றத் தேர்தலில் தெளிவான பெரும்பான்மையைப் பெறும் சூழல் தென்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பின்னால் அணிதிரண்டிருந்த எதிர்க்கட்சிகள் தற்போது பிளவுபட்டதன் காரணமாக ஜனாதிபதியின் கட்சி இலகுவாக வெற்றி பெறும் நிலையில் உள்ளது.

ராவய ஆசிரியரும், அரசியல் விமர்சகருமான விக்டர் ஐவன் தெரிவிக்கையில், பெரும்பான்மையை அதிகரிப்பதே அரசின் முன்னால் உள்ள பிரதான சவால் என்று தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் பிரிவினைப் போராட்டத்துக்கு காரணமாக இருந்த தமிழ் மக்களின் அதிகளவு சுயாட்சிக்கான விருப்பத்துக்குப் புதிய அரசு தீர்வுகாண வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய நல்லிணக்கத்துக்கான பரந்துபட்ட நிகழ்ச்சித் திட்டம் அவசியம் எனத் தெரிவிக்கும் விக்டர் ஐவன், ஜனாதிபதி எதிர்க்கட்சிகள் வேகமும் அமைந்திருக்கும் என்கிறார் அவர் - என்று ஏ.எவ்.பி.குறிப்பிட்டுள்ளது.

அரசியல் ஆய்வாளர்கள் கூறுவதுபோல, தேசி யப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு இணங்காவிட் டால், நிச்சயம் மீண்டும் போராட்டம் வெடிக்கும் என்று எதிர்வு கூறப்படுகிறது.

தேர்தலில் தமிழ்க் கட்சிகள் முன் வைத்துள்ள கோரிக்கைகளுக்குச் சரியான பதிலை அரசுத் தரப்பு வைக்காது விட்டால், சர்வதேசத்தின் நெருக்குதல்களுக்கு அரசு உள்ளாக நேரிடும்.

விடுதலைப் புலிகளை ஒழித்தபின் தீர்வுத்திட்டத்தை முன்வைப்போம் என அரசு கூறியபோதும், யுத்தம் முடிந்து ஒருவருடமாகியும் எந்தவிதத் தீர்வும் முன்வைக்கப்படவில்லை.

இந்தநிலை தொடரும் பட்சத்தில் உள்ளூரி லும், சர்வதேசத்திலும் பெரும் நெருக்கடிகளை இலங்கை சந்திக்க நேரிடும். அது தவிர்க்க முடியாததாகும்.

****

யாழவன்

# பொதுத் தேர்தல் 2010: நல்ல பாடம்!

ஓர் அரசியல் யுத்தம் நடந்து முடிந்திருக்கிறது. அதன் பெயர் பொதுத் தேர்தல். நிஜ யுத்தங்களைப் போலவே, இதிலும் பல மோசமான சேதாரங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அமைச்சர்கள் பலர் படுதோல்வியடைந்திருக்கிறார்கள். சண்டியர்கள் வெற்றி பெற்றிருக்கின்றார்கள். இனவாதம் கக்கும் சிங்களப் பெருந்தேசியவாதிகள் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்கள்.

இருந்தாலும், சில நல்லதுகளும் இந்தத் தேர்தலில் நடக்காமலில்லை.


அதாஉல்லா

சிறுபான்மையினருக்காக குரல் கொடுக்கும் சிங்களத் தலைவர்கள் இம்முறை நாடாளுமன்றம் செல்கிறார்கள். தமது கட்சிக்கும், வாக்களித்த மக்களுக்கும் துரோகம் செய்து விட்டு, கட்சி மாறித் திரிந்த பலரின் அரசியலுக்கு மரண அடி விழுந்திருக்கின்றது.

குறிப்பாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து கட்சி மாறி, ஆளுந்தரப்புக்குச் சென்று அமைச்சர்களானோரில் எக்கச்சக்கமானோர் இம்முறை மக்களால் தூக்கியெறியப்பட்டிருக்கின்றார்கள். அமைச்சர்கள் அமீர் அலி, நஜீப் ஏ மஜீத், பாயிஸ், நிஜாமுத்தீன், பைலா போன்றோர் இம்முறை தமது ஆசனங்களை இழந்திருக்கின்றார்கள்.

மு.காங்கிரஸினூடாக அறிமுகமாகி, பின்னர் அந்தக் கட்சிக்கு எதிராகச் செயற்பட்டவர்களில் - ஏ.எல்.எம். அதாஉல்லா, றிஸாத் பதியுத்தீன் மற்றும் எம்.எல்.எம். ஹிஸ்புல்லா ஆகியோர் மட்டுமே வெற்றியடைந்திருக்கின்றார்கள்.

அதிலும், அமைச்சர் அதாஉல்லா தோற்று விட்டார் என்றுதான் கடைசி வரை நம்பப்பட்டது. ஆனால், வெள்ளிக்கிழமை இரவு 8.00 மணிக்குப் பிறகே அவர் வெற்றியடைந்து விட்டார் எனக் கூறப்பட்டது. இந்த வெற்றிச் செய்தியை அதாஉல்லாக் கட்சிக்காரர்களே எதிர்பார்க்கவில்லை. கடந்த தேர்தலின் போதும், அதாஉல்லாவின் வெற்றிச் செய்தி மிகப் பிந்தி - இரவு நேரத்திலேயே வெளிவந்திருந்தது.

இப்படி ஆயிரமாயிரம் கூத்துக்களும், கும்மாளங்களும் நிகழ்ந்து முடிந்திருக்கும் இந்தத் தேர்தலின் வெற்றி தோல்விகளை பலரும் பலவாறு நோக்குகின்றார்கள். இந்த நிலையில், நீங்கள் எவ்வாறு இதைப் பார்க்கிறீர்கள் என்று மு.காங்கிரஸின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத்திடம் கேட்டோம். பேசினார்.

"முஸ்லிம் தேசிய உணர்வுகளுக்கு எதிராகச் செயற்பட்டவர்களை மக்கள் நிராகரித்திருக்கிறார்கள் என்பதை - இந்தத் தேர்தல் முடிவுகளிலிருந்து மிகத் தெரிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

அதேவேளை, யுத்தத்துக்குப் பின்னரான அரசியலில் - ஆளுந்தரப்பினரோடு அல்லது அதிகாரங்களை வைத்திருப்போரோடு இணைந்திருக்க வேண்டும் என்று முஸ்லிம்களில் ஒரு தரப்பினர் எண்ணுகின்றார்கள். அதன் பிரதிபலிப்புத்தான் அமைச்சர் றிஸாத் பதியுத்தீனின் வெற்றியாகும்.

முன்னரெல்லாம், முஸ்லிம் காங்கிரஸில் இருந்தபோது ஒரு ஹீரோ அந்தஸ்தில் வைத்து மதிக்கப்பட்ட பிரதியமைச்சர் பாயிஸ் போன்றோர் - இன்று ஸீரோ ஆகி விட்டார்கள்.

இன்னொரு புறம், மக்களிடம் செல்வாக்கற்றிருந்த சிலரை - சில அரசியல் காரணங்களுக்காக முஸ்லிம் காங்கிரஸ் - தேசிய பட்டியல் மூலமாக நாடாளுமன்ற உறுப்பினராக்கியது. ஆனால், அவர்களோ - கட்சிக்குத் துரோகம் செய்து விட்டு, ஆளுந்தரப்புக்குத் தாவினார்கள். இப்போது அவர்களின் நிலையோ பரிதாபம். இந்தத் தேர்தலில் தமது சொந்த இடங்களில் கூட போட்டியிட முடியாமல், வேறு வேறு பகுதிகளில் வேட்பாளராகி கடைசியில் மிக மோசமாகத் தோற்றிருக்கின்றார்கள்"- என்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை பஷீர் - ஐ.தே.முன்னணி சார்பில் களமிறங்கி வெற்றியீட்டியிருக்கின்றார். (ஆனாலும், கிழக்கு மாகாண சபையானது, புத்திஜீவித்தனமுள்ள ஓர் எதிரணித் தலைவரை இதனால் இழந்து போகிறது)

**மப்றூக்**

நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளை வைத்துப் பார்க்கும் போது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ், முஸ்லிம் மக்கள் - முறையே தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவைகளை வெகுவாக ஆதரித்திருக்கின்றார்கள். இதை இன்னொரு வகையில் சொன்னால் - பெருந்தேசியக் கட்சிகளை தமிழ், முஸ்லிம் மக்கள் புறக்கணித்திருக்கின்றார்கள். இதை வேறொரு வகையிலும் சொல்லலாம். அதாவது - தமது நல்லது கெட்டதுகளில் தலையிடவும், அவை பற்றிப் பேசவும் தமக்கென்றொரு கட்சியிருக்க வேண்டும் என்று இந்த மக்கள் விரும்புகின்றார்கள்.

அதனால்தான், மு.காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்று, அந்தக் கட்சிக்கெதிராகச் செயற்பட்டவர்களில் மிக அதிகமானோரை மக்கள் தோற்கடித்திருக்கின்றார்கள். அதுபோலவே, தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்றவர்களும் இத்தேர்தலில் நிராகரிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

கடந்த முறை தமிழ் தேசியக் கூட்டமைப்பு 22 ஆசனங்களைப் பெற்றிருந்தது. கூட்டிக் கழித்துப் பார்க்கும் போது, இம்முறை கூட்டமைப்பு 08 ஆசனங்களை இழந்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், கடந்த முறை புலிகளின் ஆதிக்கமும், வடக்கில் பிற கட்சிகள் சுதந்திரமாகச் செயற்படுவதற்குரிய நிலைவரமும் அற்றதொரு சூழ்நிலையில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்படி 22 ஆசனங்களையும் பெற்றது என்கிறதொரு குற்றச்சாட்டு உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.




இருந்தாலும், வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பெரும்பான்மை அபிமானம் இன்னும் கூட்டமைப்பு மீதே உள்ளது. தேர்தல் முடிவுகளும் அதையே சொல்கின்றன.

இந்த நிலையில், உறுதியான அரசாங்கமொன்றை அமைப்பதற்கான ஆசனங்களைப் பெற்றுள்ளதாக அரசு கூறுகிறது. உண்மையும் அதுதான். எனவே, எதிரணிக்காரர்களை விலை கொடுத்து வாங்கவோ அல்லது அவர்களிடம் ஆதரவு கோரவோ அரசாங்கம் ஆர்வம் காட்டாது. காரணம், ஆட்சியொன்றை அமைப்பதில் அரசுக்கு, எதுவித சிக்கல்களும் இப்போதைக்கு இல்லை.

இவைகளெல்லாம் ஒரு புறமிருக்க, இம்முறை இடம்பெற்ற தேர்தலில் மக்கள் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை என்பதை, வாக்களிப்பு வீதத்திலிருந்து விளங்கிக் கொள்ள முடிகிறது. கிட்டத்தட்ட 55 வீதமான வாக்களிப்பு மட்டுமே இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடும் போது, வாக்களிப்பில் 20 வீதம் வீழ்ச்சியேற்பட்டிருக்கிறது. இந்த வீழ்ச்சிக்கான காரணம் ஆராயப்பட வேண்டியது.

மக்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கையிழந்து விட்டார்களா? அல்லது தேர்தல் முடிவுகள் தமது அபிப்பிராயங்களைப் பிரதிபலிக்கவில்லை என மக்கள் நினைக்கின்றார்களா? அல்லது மக்கள் சுயாதீனமாக வாக்களிப்பதற்குத் தடையாக வேறு ஏதேனும் காரணங்கள் உள்ளனவா? இவைகள் ஆழமாகப் பேசப்பட வேண்டிய விடயங்களாகும்.

இவை தவிர, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் செய்திகளால் - ஒரு தொகை வாக்காளர்கள் நமது தேர்தல்


இரா. சம்பந்தன்

முறைமையில் நம்பிக்கையிழந்தமையும் மேற்படி வாக்களிப்பு வீதம் வீழ்ச்சியடையக் காரணமாக இருக்கின்றது.

எது எவ்வாறிருந்த போதும் - 2010 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தல் நல்லதொரு பாடத்தை அனைத்துத் தரப்பினருக்கும் புகட்டி விட்டுச் சென்றிருக்கிறது. இந்தப் பாடத்திலிருந்து இம்முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள சிறுபான்மை உறுப்பினர்களாவது சில விடயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

கற்றுக் கொள்பவர்கள் ஒருபோதும் தமது பரீட்சைகளில் தோல்வியடைவதில்லை!

***

**கூத்து முடிந்தது! இனி...**

பொதுத் தேர்தல் முடிந்த பின்பு எழுதப்பட்ட மற்றும் ஒரு கட்டுரை பக்கம் 26 இல்

சுடர் ஒளி
ஏப். 11 - ஏப். 17, 2010
85, ஜெயந்தவல்லி மாரிச் மாவத்தை, கொழும்பு-14 டெலிபோன்: 0115738005 பக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com

## தேர்தலும் வன்முறைகளும்

பொதுத் தேர்தல் வாக்களிப்பு நடவடிக்கைகள் அமைதியான முறையில் இடம்பெறுவதை உறுதி செய்ய நாடு முழுவதும் பொலீஸாரும் முப்படையினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர் என்று தேர்தலுக்கு முதல் நாள் விடுத்த அறிக்கையில் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்திருந்தார்.

தேர்தல் தினம் நாட்டில் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக 58 ஆயிரத்து 800 பொலீஸாரும் 20 ஆயிரம் படையினரும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். நான்கு வாக்களிப்பு நிலையங்களுக்கு ஒரு பொலீஸ் நடமாடும் பிரிவு விகிதம் 2,560 நடமாடும் பிரிவுகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

புலிகளுக்கும் அரசபடைகளுக்கும் இடையிலான யுத்தம் முடிவடைந்து கடந்த ஒன்பது மாதகாலமாக நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவுவதால் தேர்தல் கடமைகளில் பெரும் எண்ணிக்கையான படையினரை ஈடுபடுத்த அரசாங்கத்துக்கு வசதியாக இருந்தது. அத்துடன் யுத்தம் முடிவடைந்த பின்னர் நடைபெற்ற முதலாவது நாடாளுமன்றத் தேர்தல் என்ற வகையில் இந்தத் தேர்தல் இலங்கையில் மட்டும் அல்ல சர்வதேச அரங்கிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. பெருமளவு பொலீஸாரும் படையினரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததால் தேர்தல் தினமன்று வன்முறைகள் ஏற்படும் வாய்ப்பு குறைவு என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், இந்த எதிர்பார்ப்புகளை எல்லாம் முறியடித்துவிட்டு சாதனை படைத்துவிட்டது. தேர்தல் வன்முறைச் சம்பவங்கள். கடந்த காலங்களில் இல்லாதவாறு மோசமான வன்முறைச் சம்பவங்கள் தேர்தல் தினமன்று பதிவாகி உள்ளன.


இந்த ஏழாவது நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் எண்ணிக்கையான வேட்பாளர்கள், கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் போட்டியிட்டதும் -

விருப்பு வாக்குகள் பெறும் போட்டியில் ஒரே கட்சிக்குள்ளேயே மோதல்கள் ஏற்பட்டதும் - வன்முறைகள் அதிகரிக்க ஒரு காரணமாக இருக்கலாம்.

ஆனால், இவ்வளவு பெரும் எண்ணிக்கையான பொலீஸாரையும் படையினரையும் சேவையில் அமர்த்தியும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த முடியாமல் போனது ஏன் என்ற கேள்வி பிரதானமாக எழுகிறது.

இந்த நேரம் ஐ.தே.க முன்னாள் எம்.பி.ஜயலத் ஜயவர்த்தன நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை நினைவுக்கு வருகிறது. "இந்த நாட்டில் ஜனநாயகம் சவக்குழிக்குள் விழுந்துவிட்டது. பொலீஸ் துறை செயல் இழந்துவிட்டது. நாடு ஏகாதிபத்தியத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது" என்று அவர் தனது நாடாளுமன்ற உரையின் போது தெரிவித்திருந்தார். சிரச வலையமைப்பு மீது குண்டர்கள் நடத்திய தாக்குதல் குறித்து பேசுகையிலேயே மேற்கண்ட சொற்களை அவர் பயன்படுத்தினார். அதாவது பொலீஸ் துறை செயல் இழந்துவிட்டது என்றதன் அர்த்தம் பொலீஸ் துறை சுதந்திரமாக இயங்கும் ஆற்றலை இழந்துவிட்டது என்பது தான்.

அரசியல் செல்வாக்கு பொலீஸ் துறையில் தற்போது ஆழமாக வேரூன்றிவிட்டது. சிரச மீதான தாக்குதலின் போதும், கொழும்பு ஹல்ஸ்டோப்பில் பொன்சேகா ஆதரவாளர்கள் மீதான தாக்குதலின் போதும் இதனை நன்கு அவதானிக்க கூடியதாக இருந்தது. இதன் ஒரு தொடர்தான் தேர்தல் வன்முறைகளும். *



# நளினி

# அந்தரத்தில் அல்லாடும் வாழ்க்கை!



ராஜீவ் கொலையை எவரும் நியாயப்படுத்த முடியாது. ஆனால், அதைக் காரணம் காட்டி நளினியை சிறுகச் சிறுகக் கொலை செய்வது நியாயமாகாது. வாழும் நீதிவான்களில் மிக மூத்தவரான வி.ஆர்.கிருஷ்ணய்யர், 'ஒவ்வொரு புனிதனுக்கும் ஓர் இறந்த காலம் உண்டு. ஒவ்வொரு பாவிக்கும் ஒரு வருங்காலம் உண்டு' என்று தனது தீர்ப்புகளில் அடிக்கடி குறிப்பிடுவார். நீதியரசர்கள் சொல்வதைவிட 'கூட்டணி தர்மங்கள்' தான் இங்கு எல்லாப் பிரச்சினைகளையும் தீர்மானிக்கின்றன. எனவே தான், வீட்டுக்கும் வர முடியாமல் சிறையிலும் நிம்மதியாக இருக்க முடியாமல் அந்தரத்தில் அல்லாடுகிறது நளினியின் வாழ்க்கை!

அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த ராஜீவ் காந்தி, 91-ஆம் ஆண்டு மே மாதம் 21-ஆம் திகதி ஸ்ரீபெரும்புதூரில், உடலில் வெடிகுண்டு தாங்கிய தனு என்ற பெண்ணால் கொலை செய்யப்பட்டார். கைதான 26 பேருக்கும் பூந்தமல்லி தடா நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தது. உச்ச நீதிமன்றத்தில் நடந்த மேல்முறையீட்டில் 19 பேர் விடுதலை செய்யப்பட்டனர். நளினி, அவரது



லட்சுமி நாராயணன்

கணவர் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய நான்கு பேருக்கும் தூக்குத் தண்டனை உறுதியானது. றொபர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகிய மூவருக்கும் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. பின்னர், நளினிக்கு மட்டும் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. 'ஆயுள் தண்டனை என்றால் 14 ஆண்டுகள்தானே! அதன் பிறகும் என்னை விடுதலை செய்ய மறுப்பது ஏன்?' என்று நளினி கேள்வி எழுப்புகிறார். நளினியை விடுவிக்க முடியாது என்று சிறை ஆலோசனைக் குழு சொன்னதை தமிழக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இன்றைய சிக்கலுக்குக் காரணம் இதுதான்!

"அன்னை சோனியா காட்டிய கருணையால்தான் நளினியின் தூக்குத் தண்டனையே ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. அதை மீண்டும் மீண்டும் கிளப்புவது நளினிக்கு அனுதாபம் தேடும் முயற்சியே. ராஜீவ் கொலையை நாங்கள் மறக்கவும் மன்னிக்கவும் முடியாது" என்று சொல்லும் காங்கிரஸ் பேச்சாளர் கோபண்ணா, "சட்டம் தன் கடமையைச் செய்வதற்கு அதன் போக்கிலேயே விட வேண்டுமே தவிர, இதைப் பிரசாரமாக்கக் கூடாது" என்கிறார்.

முன்னாள் டி.ஜி.பி. லட்சுமிநாராயணனிடம் இதுபற்றி செய்தியாளர்கள் கேட்ட போது, "ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு இருந்தால், 14 ஆண்டுகள் இருக்க வேண்டும் என்பது சரியானது. ஆனால், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு அது ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டு இருக்குமானால், ஆயுள் முழுக்கச் சிறையில்தான் இருந்தாக வேண்டும். இது இன்று இருக்கும் சட்ட யதார்த்தம். நளினி தன்னுடைய தரப்பு வாதங்களை உச்ச நீதிமன்றத்தில் வைத்து அவர்களது பரிசீலனைக்கு தனது வழக்கைக் கொண்டு போகலாம்" என்று சொல்கிறார்.

முன்னாள் டி.ஜி.பி-யான வைகுந்தும் இவரது கருத்தையே வழிமொழிகிறார். "ஆயுள் தண்டனை என்றால் 14 ஆண்டுகள்தான் இருக்க வேண்டும் என்று கறாரான வரையறை இல்லை. ஆயுள் தண்டனை என்பதன் அர்த்தம் ஆயுள் முழுக்கத் தண்டனையை அனுபவிப்பது தான். நளினியைப் பொறுத்தவரையில் அவர் ஒரு முக்கியக் குற்றவாளியாக இருப்பதால், இதை உச்ச நீதிமன்றம் விசாரித்து முறையான தீர்ப்பை வழங்கும் வரை காத்திருக்கத்தான் வேண்டும்" என்கிறார் வைகுந்த்.

'நளினி தொடர்புடைய குற்றம் கொடூரமானது. ராஜீவ் உள்ளிட்ட 18 பேர் கொலை செய்யப்படக் காரணமான சதித் திட்டத்தின் ஓர் அங்கமாக அவர் செயல்பட்டுள்ளார்' என்பதை முக்கியக் காரணமாகச் சொல்லி, நளினியின் விடுதலையை நிராகரித்துள்ளது தமிழக அரசு. 'ராஜீவ் கொலை வழக்கு தடா சட்டத்தின் கீழ் வராது. இந்திய அரசைத் திகைக்கச் செய்வதோ அல்லது இந்திய மக்களிடம் அச்சம் உண்டாக்குவதோ சதிகாரர்களின் நோக்கமாக இருந்தது என்பதை நிரூபிக்க ஆதாரம் இல்லாததால் தடா சட்டப் பிரிவுகள் இதற்குப் பொருந்தா. சதிகாரர்களில் எவரும் ராஜீவ் காந்தியைத் தவிர, வேறு எந்த இந்தியரின் சாவையும் விரும்பியதற்குச் சான்று ஏதும் இல்லை' என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் வெளிப்படையாகச் சொன்ன பிறகு, அதே காரணத்தைச் சிறை ஆலோசனைக் குழு கூறுவதும் அதைத் தமிழக அரசு ஏற்பதும் வழக்கை மீண்டும் பின்நோக்கிக் கொண்டுசெல்லும் காரியமாகத்தான் இருக்கிறது.

நளினியின் வழக்கறிஞர் புகழேந்தி, "நளினி விடுதலையானால் குடியிருக்கப் போகும் ராயப்பேட்டை பகுதியின் இன்ஸ்பெக்டர் மட்டும் தான் நளினியை விடுதலை செய்யக் கூடாது என்று உறுதியாக சொல்கிறார். அந்தப் பகுதியில் முக்கியமான அரசியல் பிரமுகர்கள், தலைவர்களின் வீடுகள், அமெரிக்கத் தூதரகம் இருக்கின்றன. அதனால் சட்டம் - ஒழுங்கு பாதிக்கப்படும் என்கிறார். நளினியின் அம்மாவும் தம்பியும் அந்தப் பகுதியில்தான் 12 ஆண்டுகளாக இருக்கிறார்கள். அவர்கள் அங்கு இருப்பதே யாருக்கும் தெரியாத மாதிரி அமைதியாகத்தான் காலத்தைக் கழிக்கிறார்கள். இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் படி, கொலை வழக்கு குற்றவாளிகள் குறைந்தபட்சம் 14 ஆண்டுகள் வரை சிறையில் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. தண்டனை காலம் முடிவதற்கு முன் விடுதலை செய்யும் போது சிறை ஆலோசனைக் குழு, சம்பந்தப்பட்டவர் சிறையில் ஒழுங்காக இருந்தாரா, இவரை வெளியில் விடுவதால் இவரது உயிருக்கு ஆபத்து அல்லது இவரால் மற்றவர் உயிருக்கு ஆபத்து உண்டா, விடுதலை ஆகும் நபரை அவரது குடும்பத்தினர் ஏற்றுக்கொள்கிறார்களா என்பதைத்தான் பார்ப்பார்கள். இறந்து போனவர் யார் என்பது விடுதலைக்கான தகுதி ஆகாது" என்கிறார் புகழேந்தி.



வழக்கறிஞர் புகழேந்தி

**நளினி மகள்!**

நளினி - முருகன் தம்பதியருக்கு ஒரே மகள். பெயர் மேகரா. அரித்ரா என்றும் அழைக்கிறார்கள். ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்படும் போது கர்ப்பமாக இருந்தார் நளினி. வேலூர் மகளிர் சிறையில்தான் பிறந்தார் மேகரா. சில ஆண்டுகள் மட்டும் அம்மாவுடன் சிறையில் இருந்த மேகரா, முருகனின் அம்மாவுடன் இலங்கை அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே இருந்து சில ஆண்டுகள் கழித்து தமிழகம் வந்து நளினியைச் சந்தித்தார். இலங்கை பாஸ்போர்ட் வைத்திருந்ததால், தொடர்ந்து இங்கு தங்குவதற்குத் தடை ஏற்பட்டது. எனவே, முருகனின் சகோதரர் தன்னுடன் ஸ்கொட்லாந்துக்கு அழைத்துச் சென்றுவிட்டார். இன்று அங்குதான் உயர்தர வகுப்பில் படித்து வருகிறார்.

நான்கு ஆண்டுகளுக்கு முன் இந்தியா வந்து நளினியைப் பார்க்க அவர் விரும்பிய போதும் விசா அனுமதி கிடைக்கவில்லை. இலங்கையில் யுத்தம் நடந்துகொண்டு இருப்பதைக் காரணமாகக் காட்டி, அனுமதி மறுக்கப்பட்டதாம். "என்னுடைய அம்மா நிரபராதி. அவர் என்னை அருகில் இருந்து படிக்கவைக்க வேண்டும், வளர்க்க வேண்டும் என்று நினைத்தார். ஆனால், அது நடக்கவில்லை. அவரது கனவை நிறைவேற்றும் வகையில் படித்து வருகிறேன். அவர் விரைவில் வெளியில் வந்து எனக்கு ஆசி வழங்குவார்" என்று தனது உறவினர்களிடம் நம்பிக்கையுடன் சொல்லி வருகிறாராம் மேகரா!

(நன்றி: இணையம்)

அனைவரையும் அழைக்கிறோம்

# JAFFNA International 2010 TRADE FAIR

## யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 2010

2010 ஏப்பிரல் 18 முதல் 20 வரை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்
மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை

## காட்சியாளர்களின் பட்டியல்

| நிறுவனம் | சாவடி இல. |
|---|---|
| ஏ.பி.ஜ. மெஷினரி (பிறைவேட்) லிமிட்டட் | A57 |
| எயிற்கின் ஸ்பென்ஸ் லொஜிஸ்டிக்ஸ் | G1 |
| அலுமெக்ஸ் குரூப் | A93 |
| ஏசியன் சில் இக்விப்மென்ற்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B35 |
| அவிவா NDB இன்சூரன்ஸ் பொலிசி பி.எல்.சி. | A125, A126 |
| பர்ரோ டூல்ஸ் அன்ட் சேவ்ஸ் | A158 |
| பைரஹா ஃபாம்ஸ் பி.எல்.சி. | A123, A124 |
| வெஸ்ட் சீட்ஸ் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் | A118 |
| பூமி டெக் (பிறைவேட்) லிமிட்டட் | B65 |
| பயோ எக்ஸ்ட்ரக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B49, B50, B51 |
| புளூஸ்கோப் லைசாட் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | A4 |
| புத்திக்க பிறஷஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B17 |
| சி. டி. ஏ பொன்சேகா அன்ட் சன்ஸ் கம்பனி லிமிட்டட் | B49, B50, B51 |
| செல்சியஸ் சொலூஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A6 |
| சிலோன் அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் லிமிட்டட் | A55, B69 |
| சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்டட் | B44 |
| இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம் | A83 |
| சிலோன் டிடேர்ஜென்ற்ஸ் சப்ளையர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B47 |
| செவ்ரோன் லூப்ரிகன்ற்ஸ் லங்கா பி.எல்.சி. | B152 |
| CIC அக்ரி பிஸ்னஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A27, B62, B63, B64 |
| CMC எஞ்ஜினியரிங் எக்ஸ்போர்ட் GmbH | A75 |
| கொலோன்ஸ் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டட் | D161 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனை | B15 |
| கொழும்பு ட்ரேடிங் சென்டர் (பிறைவேட்) லிமிட்டட் | B34 |
| கிறிஸ்டல் வெக் (பிறைவேட்) லிமிட்டட் | A12 |
| டெக் ட்ரக்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B43 |
| டேவிட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்டட் | G5 |
| டெல்மேஜ் கம்பனிகளின் குழுமம் | B37, B38 |
| டீசல் அன்ட் மோட்டோர் எஞ்ஜினியரிங் பிஎல்சி | A94, A95 |
| ட்ரெல்கோ (பிறைவேட்) லிமிட்டட் | A79 |
| எமன்ப்ரோ புரடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B22 |
| எட்னா எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | A117 |
| எலீற் இந்தியா அன்ட் எஞ்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் | A58, A59 |
| யூரோ டைல்ஸ் | A61 |
| எக்ஸ்போ லங்கா [illegible] (பிறைவேட்) லிமிட்டட் | D163 |
| ஃபுசோபஸ் டெக் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A127 |
| குட் வல்யு [illegible] (பிறைவேட்) லிமிட்டட் | B31 |
| H.E. எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | A11 |
| ஹெல்மான் வேர்ல்ட்வைட் லொஜிஸ்டிக்ஸ் | D159 |
| ஹொட்டுகொட இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B67 |
| ஹேவா [illegible] கிரபிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A1, A2 |
| HSBC | A84, A85, A86 |
| எச்சேனிட் பிஸ்னஸ் சொலூஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A52 |
| ஹிப்போலிட் என். அன்ரனி அன்ட் சன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A24 |
| ஹன்டர் அன்ட் கம்பனி பி.எல்.சி. | A7 |
| ஹச்சிசன் டெலிகொம்யூனிகேஷன்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | B154 |
| HVA ஃபுட் (பிறைவேட்) லிமிட்டட் | B39 |
| இலங்கை மத்திய இன்டஸ்ட்ரியல் ஒட்டோமேஷன் | 146 |
| இன்டர்நஷனல் கொன்ஸ்ட்ரக்ஷன் கொன்சோர்டியம் (பிறைவேட்) லிமிட்டட் | A26 |
| ஜினசேன (பிறைவேட்) லிமிட்டட் | B41, B42 |
| கமால் PVC இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | D165 |
| களனி கேபிள்ஸ் பி.எல்.சி. | A53 |
| கென் [illegible] அன்ட் மெஷினரி இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டட் | 77 |
| கெவிலியன் இலெக்ட்ரிகல் புரடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A131, A132 |
| கிங்ஸ் அன்ட் [illegible] இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டட் | C156 |
| கூல்பார் (பிறைவேட்) லிமிட்டட் | C174, C175 |
| [illegible] (பிறைவேட்) லிமிட்டட் | A1[illegible] |
| [illegible] (பிறைவேட்) லிமிட்டட் | A1[illegible] |
| L & S எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | B149 |
| லங்கா எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | B70 |

| | |
|---|---|
| லலன் பிரின்டிங் அன்ட் பக்கேஜிங் (பிறைவேட்) லிமிட்டட் | A8 |
| லலங்கா எஞ்ஜினியரிங் கம்பனி | |
| லலன் எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | A147 |
| லங்கா கனரீஸ் லிமிட்டட் | D168 |
| லங்கா பொஸ்பேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A25 |
| லங்காலோகஹ ஹாட்வெயார் லிமிட்டட் | A5 |
| லங்கெம் பெயின்ற்ஸ் லிமிட்டட் | 134 |
| லைஃப் இன்சூரன்ஸ் கோப்பரேஷன் லங்கா | A97 |
| M.C. அப்துல் ரஹீம் அன்ட் பிறதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B13 |
| M/S ஜயார எண்டர்பிறைசஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B45 |
| மெக்டோனல் | B71 |
| மெக்பிளை இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A10 |
| மெக்சன் மெஷ் இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A74 |
| மாஸ் ட்ரொப்பிக்கல் ஃபுட் புரொசெசிங் (பிறைவேட்) லிமிட்டட் | B49, B50, B51 |
| மீடியா சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B178 |
| மெகா ஃபார்மா (பிறைவேட்) லிமிட்டட் | A90 |
| மைக்கிரேஷன் லோயர்ஸ் | D164 |
| மொடிகோன் எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | B16 |
| N.S. ஜெனரல் ட்ரேடிங் கம்பனி | D162 |
| நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் லிமிட்டட் | B135, B136 |
| நியூ ஜீனா இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A128 |
| Ni-Cey இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டட் | B46 |
| ஒமேகா எஞ்ஜினியரிங் அன்ட் ஸ்டீல் ஃபப்ரிகேட்டர்ஸ் | A144 |
| ஒனேஷ் ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டட் | B48 |
| ஓரெல் சொலூஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A92 |
| பேர்ல்கொம் ட்ரேடர்ஸ் | B155 |
| பெற்றஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B148 |
| ஃபோட்டோ டெக்னிகா (பிறைவேட்) லிமிட்டட் | A78 |
| பிரமல் கிளாஸ் சிலோன் பி.எல்.சி. | A54 |
| பொலிடைம் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டட் | A133 |
| புரொமோட்டர்ஸ் எஞ்ஜினியரிங் கம்பனி இன்டஸ்ட்ரியல் ஸ்ரெயின்லஸ் ஸ்டீல் ஃபப்ரிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | C169-172 |
| புவக்கரம்ப ஈஜென்சீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A121, A122 |
| R.S.L. செரமிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A120 |
| ரீன்கோ (பிறைவேட்) லிமிட்டட் | B21 |
| ரேன்கோ பிறைவேட் லிமிட்டட் (கோப்பரேட்) | A60 |
| ரன்சி எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | C173 |
| ரேணுகா அக்ரி ஃபுட்ஸ் பி.எல்.சி. | B36 |
| றைனோ ரூபிங் புரடக்ட்ஸ் லிமிட்டட் | A76 |
| RN கம்பனிகளின் குழுமம் | A56 |
| ரோஸ் எஞ்ஜினியரிங் லிமிட்டட் | A89 |
| ரோஷனி ட்ரேட் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டட் | B150, B151 |
| ரொட்டக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A87, A88 |
| S.M.S. ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B23 |
| சம்சன் இன்டர்நஷனல் பி.எல்.சி. | B32 |
| சம்சன் ரஜரட்ட டைல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A82 |
| சமுதி கம்பனிகளின் குழுமம் | B66 |
| ஷோ வொலஸ் மார்கட்டிங் | B36 |
| சாந்தி பிளாஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B33 |
| ஷெரீப் பிரதர்ஸ் (இறக்குமதிகள்) | A157 |

| | |
|---|---|
| சிலிக்கன் கோட்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A129, A130 |
| சின்சிபரிட்டி செரமிக் (பிறைவேட்) லிமிட்டட் | A29, A3 |
| ஸ்பீட் வோட்டர் சிஸ்டம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | D167 |
| ஸ்டபார்ட் மோட்டோர் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் | G2 |
| ஸ்டார்லைன் எட்டர்பிறைசஸ் | B47 |
| சுமகா எண்டர்பிறைசஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A30 |
| சுரேன் குக் ஏஜென்சீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B20 |
| சுவிடிஷ் ட்ரேடிங் ஒவசீஸ் விஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A96 |
| T.C.I. எண்டர்பிறைசஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A143 |
| திலாங்கே (பிறைவேட்) லிமிட்டட் | B40 |
| த [illegible] SL (பிறைவேட்) லிமிட்டட் | B179 |
| திரேட் வோர்க்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A72 |
| ட்ரான்ஸ் கொன்டினென்டல் பக்கேஜிங் அன்ட் கொமோடிட்டீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B49, B50, B51 |
| ட்ரு வல்யு புரடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B18, B19 |
| யுனிலிவர் ஸ்ரீலங்கா லிமிட்டட் | B177 |
| யுனிடெக் எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | A91 |
| யுனைட்டட் ட்ரக்டர் அன்ட் இக்விப்மன்ற் (பிறைவேட்) லிமிட்டட் | B14 |
| யுனிட்டி ட்ரேடிங் கம்பனி | G4 |
| யுனிட்டி ட்ரேடிங் கம்பனி | B49, B50, B51 |
| உசாமா எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | B153 |
| V.V. கருணாரத்ன அன்ட் கம்பனி | A73 |
| வாயு (பிறைவேட்) லிமிட்டட் | D166 |
| வெஸ்ட்மான் எஞ்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் | B49, B50, B51 |
| விஜய புரடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A3 |
| டீன் பிறதர்ஸ் [illegible] (பிறைவேட்) லிமிட்டட் | B5 |
| IDM கொம்பியூட்டர் ஸ்டடீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | C176 |
| கன்ட்ரி ஸ்டைல் ஃபூட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | |
| கெப் ஸ்ரீனா லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | A28 |
| ஸ்ரீலங்கா டெலிகொம் மொபிடெல் | |
| ஸ்பீட் வோட்டர் சிஸ்டம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | |

| | |
|---|---|
| "நவரஜ" எஞ்ஜினியரிங் வேர்க்ஸ் | A114 |
| அன்னா இன்டஸ்ட்ரி | A109 |
| பிஸ்னஸ் நெட்வேர்க் சொலூஷன்ஸ் - BNS | A110 - B |
| கொர்வ ஷு | A115 - A |
| ஜூஸி ஃபுருட் பேஸ்ட் பக்டரி | A110 - A |
| K.T.M ஒயில் மில் | A115 - C |
| நியூ லங்கா ட்ரேடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A113 |
| சங்கமம் சிறுகைத்தொழில்கள் (தனியார்) நிறுவனம் | A108 |
| சிவன் மாளிகை லிமிட்டட் | A107 |
| ஸ்டார் இன்டஸ்ட்ரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A106 |
| திருமுருகன் கொம்நெட் | A104, A105 |
| வெஸ்டர் இன்டஸ்ட்ரீஸ் | A116 |

## சித்தாரா மற்றும் பிரபல கலைஞர்களின் இசை நிகழ்ச்சி

நவநாகரிகக் காட்சி / கைத்தொழில் கருத்தரங்குகள்
முதலீட்டு அரங்கம் / விசேட உணவுகள், குடிபானங்கள் முதலியன

ORGANISED BY:
LECS
LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
A member of SAES South Asia

FOR INFORMATION CONTACT:
4th Floor, Automobile Association Building,
No. 40, Sir Mohamed Macan Markar Mawatha, Colombo 03
Tel: 2390560-2 Fax: 2390568 E-mail: rizwan@saexhibitions.com
www.saexhibitions.com/jitf

IN ASSOCIATION WITH: CCIY
JOINTLY ORGANISED BY: FCCISL
SUPPORTED BY: SRI LANKA CONVENTION BUREAU
SPONSOR: Sri Lanka Telecom Mobitel — We Care Always.
PARTNER COUNTRY: INDIA
OFFICIAL PRINT MEDIA: சுடர் ஒளி
OFFICIAL RADIO: வெற்றி FM



# அமிதாப் பச்சனை பழிவாங்கும் காங்கிரஸ் கட்சி

ஒரு காலத்தில் அமிதாப்பச்சன் ராஜீவ்காந்தி குடும்பத்தின் உள்வீட்டுப் பிள்ளையாக கருதப்பட்டார். இன்றோ ராஜீவ் காந்தி குடும்பத்தின் முதலாம் நம்பர் எதிரியாக அவர் மாறியுள்ளார். அதற்குக் காரணம் அவரே என்பது கவனிக்கத்தக்கது. கடந்த வாரம் மும்பையில் நடந்த ஓர் அரசு விழாவில் ஆட்சியில் உள்ள காங்கிரஸை உச்சி விட்டு அவர் பிரதம விருந்தினராக கலந்துகொண்டதை அடுத்தே சர்ச்சை பூதாகரமாக வெடித்துக் கிளம்பியுள்ளது.



1984 இல் அன்னை இந்திரா கொல்லப்பட்டபோது அலஹாபாத் தொகுதியின் எம்.பி.யாகவே இறந்திருந்தார். உத்தரபிரதேச மாநிலத்திலுள்ள அலஹாபாத் நகர் இந்திராகாந்தி-நேரு குடும்பத்தின் பூர்வீக வாசஸ்தலமாகும். அங்குள்ள பாட்டன் மோதிலால் நேருவின் வீடு (ஆனந்தபவன்) இந்திய தொல்பொருள் துறைக்கு தானமாக வழங்கப்பட்டது. இந்திரா காந்தி இந்தத் தொகுதியின் எம்.பியாக இருந்து இறந்ததால் முக்கியமான ஒரு நபருக்கே அவரது மரணத்தின் பின் அத்தொகுதி வேட்பாளர் நியமனம் காங்கிரஸால் வழங்கப்பட்டது. அவர்தான் அமிதாப் பச்சன். அவரும் இலட்சக்கணக்கான வாக்குகள் பெரும்பான்மையுடன் முதன்முறையாக எம்.பியானார். பிரதமர் ராஜீவின் கீழ் சக்திவாய்ந்த காங்கிரஸ் எம்.பியாக அவர் இருந்தார். அவரது சகல படங்களுக்கும் அபரிமிதமான வரிவிலக்கு அளிக்கப்பட்டது. இந்தியாவில் நடிகர்கள் பெரும் பிரபல்யத்துக்கு மேலதிகமாக அரசியலில் ஏன் நுழைய வேண்டும் என்ற கேள்விக்கு இதுதான் பதில்: வரிவிலக்கு. வரிவிலக்குடன் நில்லாது இன்னும் பல விலக்குகளுக்கு அடித்தளமிட்டு கோடிகோடியாக சம்பாதித்தார் அமிதாப். ஆனால், 1989இல் காங்கிரஸ் தோற்று ராஜீவ் பிரதமர் பதவியை இழந்ததும் காங்கிரஸில் அட்டை போல் ஒட்டிக்கொண்டிருந்து இரத்தம் உறிஞ்சிய அமிதாப் மெல்ல விலகினார். ராஜீவ் இறந்த பிறகு நேரு குடும்பமே இனி அரசியலுக்கு இல்லை என்றாகியது. எனவே நேரு, இந்திரா,ராஜீவ் நினைவு தினக் கூட்டங்களுக்கு செல்வதையும் அமிதாப் பச்சன் தவிர்த்தார்.

இதற்கிடையில் முலாயம் சிங் யாதவ்வின் சமாஜ்யவாதி கட்சி உத்தர பிரதேசத்தில் முன்னிலை பெற்று வந்தது. வரிவிலக்கு உள்ளிட்ட விடயங்களில் அமிதாப்புக்கு அவர்கள் சலுகை காட்டினர். எலும்புத்துண்டை கண்ட அமிதாப்பும், அவர்கள் பின் செல்ல முடிவெடுத்தார். ஆனால் இம்முறை மனைவி ஜெயா பச்சனை மட்டும் எம்.பியாக்குவது என முடிவெடுக்கப்பட்டது. திரைமறைவு அரசியல்வாதியாக மட்டும் விளங்கினார் அமிதாப். இக்காலத்தில் காங்கிரஸ் அகில இந்திய அளவில் தேய்ந்ததைவிட உத்தர பிரதேசத்தில் வேகமாக தேய்ந்துவந்தது. அதற்கு பிரதான காரணியாக அமிதாப் பச்சன், அமர்சிங், சஞ்சய் தத் உள்ளிட்ட திரையுலகத்தவர்கள் விளங்கினர். கிட்டத்தட்ட காங்கிரஸின் கதை முடிந்தது என்றே அப்போது அமிதாப் பச்சன் மட்டுமன்றி சகலரும் கருதினர்.

சோனியா காந்தி அரசியல் பிரவேசம் செய்த பின்பும் கூட கட்சி தொடர்ச்சியாக தோற்றுக் கொண்டே வந்தது. அப்போதும் அமிதாப் காங்கிரஸுக்கு எதிராக உத்தரப் பிரதேசத்தில் கடும் பிரசாரம் செய்தார். அம் மாநிலத்தில் காங்கிரஸால் தலையெடுக்கவே முடியாமல் போனதற்கு அதுவும் ஒரு காரணம். உதாரணமாக 1998இல் நடந்த லோக்சபா தேர்தலில் காங்கிரஸ் அந்த மாநிலத்தில் 85 இடங்களில் ஒன்றைக் கூட வெல்ல முடியவில்லை. ஆனால், இன்றோ நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. காங்கிரஸ் கட்சி கொடிகட்டிப் பறக்கிறது. அமிதாப் உத்தரப் பிரதேச மாநிலத்தவர் என்றாலும் மும்பையில் தான் வாசம் செய்கிறார். மும்பை உள்ளிட்ட மஹாராஷ்டிரா மாநில ஆட்சி, காங்கிரஸ்-தேசிய காங்கிரஸ் கூட்டணியிடம் உள்ளது. சரத்பவார் தலைமையிலான தேசிய காங்கிரஸுடன் ஒட்டுவதற்கு அமிதாப் பச்சன் சில காலமாகவே முயன்றார். காங்கிரஸ் நலிவுற்று இருந்த காலம் பழைய நட்பின் அடிப்படையில் காங்கிரஸுக்கு திரும்புமாறு சோனியா அழைப்பு விடுத்திருந்தார். ஆனால், மத்தியில் காங்கிரஸ் ஆண்டாலும் மாநிலத்தில் முலாயம் சிங் யாதவ்வின் கட்சி பலமாகவே இருந்தது. உத்தரபிரதேச மாநில அரசியலில் சாதிக்க காங்கிரஸால் முடியவில்லை. இப்போது இந்த நிலையும் மாறத்தொடங்கிவிட்டது. சமாஜ்வாதி கட்சியிலிருந்து அதன் பணமுதலையான அமர்சிங் சமீபத்தில் விலகிவிட்டார். மாநிலத்திலும் ஆட்சியில் இல்லை. மத்தியிலோ காங்கிரஸ் ஆட்சியில் சமாஜ்வாதி கட்சிக்கு அமைச்சர் பதவி கிடைக்கவில்லை. இதெல்லாம் சேர்ந்ததே அமிதாப் பச்சனின் சமீபத்திய

**-எஸ்.சுரேந்திரஜித்**

தடுமாற்றத்துக்கு காரணமாகும். மாநில முதல்வர் மாயாவதிக்கும் அமிதாப் மீது கடுப்பு உள்ளது. எனவே தனதும் மகன் அபிஷேக் பச்சனதும் படங்களுக்கு வரிச்சலுகை பெற காங்கிரஸின் காலடியில் விழும் அவசியம் அவருக்கு உண்டாகியிருப்பது கண்கூடு. இதற்கு பின் கதவைத் தட்டிப்பார்த்தும் காங்கிரஸ் தலைவி கண்டு கொள்ள வில்லை. எனவே வேறு வழியின்றி சரத்பவார் கட்சியூடாகவாவது ஏதாவது சலுகை பெறமுடியுமா என்பதே பச்சனின் ஆசை. இதுதவிர குஜராத் மாநில சுற்றுலாத்துறையின் தூதராக நரேந்திர மோடி அரசு அமிதாப்பை நியமித்தது. இதுவும் வரிச்சலுகை எதிர்பார்ப்பில் அமிதாப் செய்த மற்றொரு அரசியல் குட்டிக்கரணமாகும். மதவாதக்குழு என்பதால் பி.ஜே.பியுடன் தன்னை அடையாளம் காட்ட அவர் விரும்பவில்லை. ஆனால், மோடி அரசு தந்த வரிச்சலுகைக்காக அமிதாப் இணங்கினார்.

காங்கிரஸ் ஆளும் மாநில அரசின் நிகழ்ச்சிக்கு அமிதாப் பிரதம விருந்தினராக எவ்வாறு வரமுடியும் என்பதே தற்போதைய சர்ச்சை. மஹாராஷ்டிரா அரசில் சரத்பவாரின் கட்சியும் காங்கிரஸுடன் பிரதான பங்காளியாகும். வீதி அபிவிருத்தித்துறை சரத்பவாரின் கட்சியிடமே உள்ளது. அந்த அமைச்சரே அமிதாப்பை அழைத்துள்ளார். அதே நிகழ்ச்சியில் காங்கிரஸை சேர்ந்த மாநில முதல்வர் அசோக் சவானும் கலந்துகொண்டார். அவர் அமிதாப் வருவதை அறிந்தே வந்தாரா அறியாமல் வந்தாரா என்பதே இப்போது கேள்வி. தெரிந்தே மேடையை அமிதாப்புடன் பகிர்ந்து கொண்டாராயின் காங்கிரஸ் தலைமையின் கோபத்துக்கு ஆளாவது நிச்சயமாகும். அவரோ தான் இதை அறியவில்லை என கூறியுள்ளார். காங்கிரஸ் கட்சி இது குறித்து பகிரங்கமாக கண்டனம் தெரிவித்துள்ளது. உடனே எதிர்க்கட்சிகள் விழுந்தடித்துக் கொண்டு அமிதாப்புக்கு வக்காலத்து வாங்கியுள்ளன. அவர் என்ன கிரிமினல் குற்றவாளியா என கேட்டும் உள்ளன. இதன் தொடர்ச்சியாக புனேயில் நடந்த விழாவில் அமிதாப்புடன் இணைந்து கலந்துகொள்வதை முதலமைச்சர் சவான் தவிர்த்துக் கொண்டார். பூமிதின நிகழ்ச்சி நிரலில் இருந்து மகன் அபிஷேக் பச்சனின் பெயரும் நீக்கப்பட்டது. காந்தி குடும்பம் அமிதாப்பை பழிதீர்க்கப் புறப்பட்டது மட்டும் உண்மையாகும்.



இந்தியாவில் கடவுளுக்கு சமமான பாத்திரத்தை சமூகத்தில் வகிப்பவர்கள் இருதரப்பினர். நடிகர்களும், கிரிக்கெட் வீரர்களுமே இவர்கள். இவர்களின் வருமானம் வானளாவில் உயர்ந்து நிற்கிறது. இதனால் வருமானவரியும் வானளாவி உயரும். இதில் சலுகை பெற பதவியிலுள்ள அரசின் காலில் வீழ்வது தவிர்க்க முடியாததாகும். கிரிக்கட் மஹான் என்றழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கர் கூட இதற்கு விதிவிலக்கல்ல. வெளிநாட்டு போட்டித்தொடரில் அவருக்கு பரிசாக கிடைத்த காரை இந்தியா கொண்டுவர முன்னாள் பி.ஜே.பி அமைச்சர் பிரமோத் மஹாஜனிடம் இவர் கோரியசெய்தி பி.ஜே.பியால் வெளியிடப்பட்டது. இதனால் சச்சின் பெரும் அவமானம் அடைந்தார். அவர் காங்கிரஸ் பக்கம் சார இதுவும் ஒரு காரணமாயிற்று. ஆனால், சச்சின் வேறு எவரையும் போன்றவர் அல்லர். அவர் வாழ்க்கையில் ஒருமுறை விட்டதவறை இரண்டாம் முறை விடுவதே இல்லை. அமிதாப் பச்சனே, தொடர்ச்சியாக பதவியிலுள்ள அரசுகளுடன் குலாவி நன்மை பெறமுயல்பவராவார். உதாரணமாக உத்தர பிரதேசத்தில் சமாஜ்வாதி கட்சி பதவியில் இருந்த போதுதான் ஒரு விவசாயி எனப் போலி அத்தாட்சி சமர்ப்பித்து அரசு விவசாயிகளுக்கு வழங்கும் நன்கொடையில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தை பாரபங்கி நகரின் சுற்றுப் புறத்தில் சுவீகரம் செய்து கொண்டார். பாரபங்கி நகரம் தலைநகர் லக்னோவில் இருந்து சில கிலோமீற்றர் தூரமே உள்ளது. இது கடைசியில் வழக்கில் சென்று முடிந்தது. சச்சினையும் அமிதாப்பையும் ஒப்பிடுபவர்கள் இதை கவனிக்க வேண்டும். சச்சின் ஒரு போதும் விவசாயி என்று நடித்து விவசாய நிலத்தை அபகரிக்கவில்லை. பி.ஜே.பியும் சிவசேனாவும் இன்று அமிதாப்பை ஆதரித்தாலும் முன்பு அவர் ஹிந்தி பேசும் வட இந்தியர் என்பதால் அவர் மும்பையில் இருக்கக் கூடாது. மும்பை மராட்டியருக்கு மட்டுமே என சிவசேனா காட்டுக்கத்தல் போட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. இந்த நேரம் பார்த்து அமிதாப்பை பி.ஜே.பி சிவசேனாவில் இணைக்க கடும் முயற்சி நடக்கிறது. ஆனால், இவர்கள் ஆட்சியில் இல்லை என்பதால் அமிதாப்பச்சனுக்கு இவர்களால் பலனில்லை. ✱


## அவலங்களைப் பகிர்ந்துகொள்வோம்

வன்னியில் நடந்த இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அங்கிருந்த எமது மக்கள் அனுபவித்த அவலங்கள் சொல்லில் அடக்கமுடியாதவை. அந்தப் பேரவலங்களை எதிர் கொண்டு இப்போது அகதிமுகாம்களில் வாடும் எமது உறவுகள் தமது அந்த அனுபவங்களையும் அதனால் ஏற்பட்ட உணர்வுகளையும் ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள் வதற்கான களத்தைத் திறந்து விடுகிறது உங்கள் சுடர்ஒளி

எழுதுங்கள்!

உங்கள் அவலங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்!!

உங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:
'உயிர் வலிக்கும் கணங்கள்'
சுடர்ஒளி வாரமலர்,
இல. 85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.



# உயிர் வலிக்கும் கணங்கள்...!

## சிசு ஒன்று சிதறிப் போன சில நொடிகள்

வணங்காமண் வன்னியின் வளமிகு பிரதேசம் புதுக்குடியிருப்பு. பூத்துக்குலுங்கும் மலர்கள் , தென்றல் காற்றின் தாலாட்டல். செல்வச்செழிப்போடு தலைநிமிர்ந்து நாமெல்லாம் வாழ்ந்த போதுதான் போர் என்ற அரக்கன் எம்மண்ணையும் விட்டு வைக்கவில்லை. எம் பகுதி முழுவதும் எறிகணை வீச்சுக்களும், விமானக் குண்டு வீச்சுக்களும், எம் உறவுகள் எம் கண்முன்னே காயப்பட்டார்கள். உயிர் பிரிந்தார்கள். கையெடுத்து கடவுளை நோக்கிக் கத்தினோம், கதறினோம். ஐயா சாமி இந்தப் போரை நிறுத்து என்று மன்றாடினோம். கடவுளுக்கும் எங்கள் கதறல் கேட்கவில்லை. 2008.1.27 ஆம் திகதி இரவு 12.45 மணி இருக்கும். எவருமே எதிர்பாராத சமயம் எங்கள் திருமுக ஆண்டவர் கோயிலில் இருந்து நான்காவது வளவில் எறிகணை விழுந்து வெடித்தது. அந்த எறிகணை வீச்சில்கிளிநொச்சி உமையாள் புரத்தில் இருந்து இடம் பெயர்ந்த ஒரு 60 வயது அம்மாவும், அவருடைய கணவரும், அவர்களுடைய பேரப்பிள்ளைகளான 6 வயதுச் சிறுவனும், மூன்றரை வயதுச் சிறுமியும் உடல் சிதறிப் பலியானார்கள். மறுநாள் காலை 7.20 மணியளவில் எங்கள் திருமுகபுரம் முன்பள்ளிக்கு முன்னால் எறிகணை விழுந்து அந்தப் பக்கமாகச் சென்றுகொண்டிருந்த கணவனும் மனைவியும் கொள்ளப்பட்டார்கள். அந்த எறிகணை வீச்சில் இரு இளைஞர்களும் படுகாயம் அடைந்தார்கள்.

இப்படி தொடர்ந்து தாக்குதல் நடந்தபடியால் எங்கள் குடும்பமும் எங்கள் காணிக்குள் இருந்த 7 மாதக் கர்ப்பிணியான சுமதி அக்கா குடும்பமும் அங்கிருந்து இடம்பெயர்ந்து தேவிபுரம் ஆச்சி தோட்டம் சென்றோம். அங்கு கூடாரம் அமைத்து தேவனே எங்களைக் காப்பற்று என்று இருந்தோம். ஏழெட்டு நாட்கள் கழிய அங்கும் நிம்மதி இல்லை. தேவிபுரம் பகுதி முழுவதும் பகல் இரவு பாராமல் தொடர் எறிகணை வீச்சுக்களும் விமானத் தாக்குதல்களும் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. அதைவிடக் கொடுமை கொத்துக் குண்டுகள். தினமும் எங்கும் மரண ஓலங்கள். 2008.2.16 அன்று நேரம் பகல் 11.30 மணியைக் கடந்திருக்கும். சுமதி அக்கா கிணற்றடியில் தனது 7 வயது, மகன் தினேஷை குளிக்க வார்த்துக் கொண்டிருந்தார், அப்போதுதான் எவருமே எதிர் பாராத நேரத்தில் பாரிய இரைச்சலுடன் கூவி வந்த எறிகணை ஒன்று கிணற்றடியில் வீழ்ந்து வெடித்தது. ஒரே கரும்புகை. நாங்கள் அனைவரும் நிலத்தில் விழுந்து படுத்த படியால் எங்களுக்கு எந்த காயமும் இல்லை. அப்போது தான் சுமதி அக்காவின் கணவர், 'என்ற மனிசி, பிள்ளை' என்று கத்திக்கொண்டு கிணற்றடிக்கு ஓடினார். அங்கே எதையுமே அறியாத தினேஷ் சிதைந்து போய்க் கிடந்தான். அவனுக்கருகில் அவனது அம்மாவான 7 மாத கர்ப்பிணித் தாய் சுமதி அக்கா கழுத்து துண்டிக்கப்பட்டும் வயிற்றுப் பகுதி சிதைந்த நிலையிலும் உயிரற்று கிடந்தார். அவர் வயிற்றில் வளர்ந்த சின்னஞ்சிறிய பச்சிளஞ் சிசுவும் மண்ணில் பிறக்கும் முன்னரே மிகக்



**அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்**

கொடுமையாக சிதைந்து போய்க்கிடந்தது. அதைப் பார்த்த சுமதி அக்காவின் கணவர் அழுததையும், அந்தச் சம்பவத்தையும் தற்போது நினைக்கும் போதும் என்னை அறியாமலேயே அழுதுவிடுகிறேன்.

சிறுவர் உரிமை, பெண்கள் உரிமை என்று வாய் கிழியக் கத்தும் மனித உரிமை அமைப்புக்கள் இப்படி எத்தனையோ சம்பவங்கள் நடந்த பொழுதும் வேடிக்கை பார்த்தது ஏன்?

என்றும் தமிழோடு
*பிரபா*

# நான் பார்த்த மிக மோசமான மனித அவலம்!



இலங்கை வரலாற்றிலே எமது தமிழ் இனம் மிகக் கொடூரமான உயிரிழப்புக்களையும், அழிவுகளையும் சந்தித்துக் கொண்டிருந்த காலம் அது.

சிறியோர், இளையோர், முதியோர் எனப் பாகுபாடின்றி ஷெல்வீச்சுக்களினால் கொல்லப்பட்டார்கள். 2009.05.12 அன்று முள்ளிவாய்க்காலில் சிறிய பாடசாலையில் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் எம் மக்களுக்காக மருத்துவமனை ஒன்று பல கஷ்டங்களுடன் இயங்கிக் கொண்டிருந்தது.

அங்கு நோயாளிகளாக இருந்தவர்கள் எல்லாம் ஷெல்வீச்சுக்களாலும், துப்பாக்கி சன்னங்களாலும் மிக மோசமாக காயப்பட்டவர்களே. சிறியோர், முதியோர், கர்ப்பிணித் தாய்மார்கள் என வெறு வார்த்தைகளுக்குள் இவர்களை அடக்கிவிட முடியாது.

எனது உறவு முறையான அண்ணா ஒருவரும் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த போது, நான் வழமை போலவே அவரைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தேன். அந்த மருத்துவமனைக்குள் போனால் எம்மை எல்லாம் ஏன் இறைவன் தமிழனாகப் படைத்தான் எனத்தோன்றும். அண்ணாவுடன் கதைத்துக் கொண்டிருந்தபோது, எங்கேயோ இருந்து பெரும் இரைச்சலுடன் பல்குழல் எறிகணைகள் மருத்துவமனை வளாகத்தில் வீழ்ந்தன. எங்கும் புகைமண்டலம், நானும் அண்ணாவை அணைத்துக் கொண்டபடி தரையிலே படுத்திருந்தேன். என்னதான் எம்மால் செய்யமுடியும்? சத்தம் ஓய்ந்தவுடன் எழுந்து பார்த்தேன். எங்குமே இரத்த வெள்ளம். அங்கு அழுவதற்கு எவரும் இருக்கவில்லை. தப்பியவர்கள் ஒரு சிலரே. அங்கு இருந்த நோயாளிகள், பொதுமக்கள் என பலர் மிகமோசமாக கொல்லப்பட்டிருந்தார்கள். சிறியவர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள் என ஏற்கனவே காயமடைந்து கால்கள் இல்லாமலும், கைகள் இல்லாமலும், உடலில் ஏதோ ஒரு வடுவைச் சுமந்தவர்களாக 'சேலைன்' ஏற்றியபடி, மருந்து கட்டியபடி, பி.ஓ.பி. போட்டபடி இருந்தவர்களும் சிதறிக் கிடந்தார்கள். எங்குமே இரத்த உடல்கள் தான். என் வாழ்வில் நான் பார்த்த மிக மோசமான மனித அவலம் இதுதான். திரைப்படங்களில் கூட இவ்வாறு மோசமான காட்சிகளை நான் பார்க்கவில்லை.

இறைவா! இந்த மக்கள் என்ன பாவம் செய்தார்கள். இவர்களின் சாவுகள் இப்போது மூடிமறைக்கப்பட்டு வருகின்றன. எமது சொத்துக்கள் அழிந்திருந்தால் நாம் மனதளவில் தேறியிருப்போம். விலைமதிக்க முடியாத உயிர்களை அல்லவா இழந்து, இன்னும் இன்னும் வேதனையுடன் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.

**கே. குயின்ரன்**



# எம்.ஜி.ஆர். நிறுவிய அ.தி.மு.கவுக்கு இப்படியும் ஒரு நிலைமையா?

அ.தி.மு.க.வைத் தோற்றுவித்ததிலிருந்து தொடர்ந்து வெற்றியையே பெற்று, மூன்று தடவைகள் அரியணையேறித் தன் கடைசிநாள் வரையிலும் தமிழகத்தின் முதல்வராகவே இருந்து மறைந்த எம்.ஜி.ஆர். என்ற ஒளிவட்டத்தின்



கதிர்கள் மங்கிப்போய்விட்டனவா?

ஒட்டுமொத்த தமிழகத்தின் ஒற்றைப் பருக்கைதான் பென்னாகரமா?

ஒவ்வொரு கட்சியும் உயிரைக் கொடுத்து உழைத்த இடைத்தேர்தலில், எம்.ஜி.ஆர். நிறுவிய கட்சிக்கு கட்டுப்பணம் பறிபோவதா?

இரட்டை இலைச் சின்னத்துக்கு இப்படியும் ஒரு நிலை வருமா?

தமிழகம் முழுவதுமுள்ள அ.தி.மு.க. தொண்டர்களின் மனதை உறுத்திக் கொண்டிருக்கும் கேள்விகள் தான் இவை.

வெற்றி அல்ல, இரண்டாவது இடத்துக்கே போராட நேரிட்டு, பென்னாகரத்தில் கட்டுப் பணத்தை இழந்திருக்கிறார் அ.தி.மு.க. வேட்பாளர். யோசித்துப் பார்க்கக்கூடிய ஒவ்வொரு அ.தி.மு.க. தொண்டருக்கும் தலைவருக்கும் இந்தத் தோல்விக்கான காரணங்கள் தெரிந்துதான் இருக்கும், குறிப்பிட்ட சிலருக்குத் தவிர.

1972 அக்டோபரில் அ.தி.மு.க.வைத் தொடங்கிய எம்.ஜி.ஆர்., அடுத்த ஆண்டு மே மாதத்திலேயே திண்டுக்கல் இடைத்தேர்தலைச் சந்தித்தார். அப்போது சட்டமன்றத்தில் 184 உறுப்பினர்களுடன் ஆட்சி செய்துகொண்டிருந்த தி.மு.க., காமராஜர் வழிநடத்திய ஸ்தாபன காங்கிரஸ், மத்தியில் ஆண்டுகொண்டிருந்த இந்திரா காங்கிரஸ் ஆகியவற்றின் வேட்பாளர்களை எதிர்த்து, அ.தி.மு.க. சார்பில் மாயத்தேவர் என்ற இளைஞரை நிறுத்தி, அவரை ஒன்றரை லட்சம் வாக்குகளால் வெற்றிபெறச் செய்தவர் எம்.ஜி.ஆர்.!

1974 இல் கோவையில் அ.தி.மு.க. ஆதரித்த பார்வதி கிருஷ்ணன் வெற்றி, தொண்டாமுத்தூர் பேரவைத் தொகுதியில் அரங்கநாயகம் வெற்றி, தொடர்ந்து, புதுச்சேரி மாநிலத்தில் அ.தி.மு.க. அரசே அமைத்தது. அ.தி.மு.க. தொடங்கிய பின் முதல் முறையாக 1977 இல் நடந்த தமிழக சட்ட மன்றத் தேர்தலில் வெற்றி பெற்று முதல்வரான எம்.ஜி.ஆர்., தன் வாழ்நாள் வரையிலும் முதல்வர் பதவியில் தொடர்ந்தார்.

1949 இல் தொடங்கப்பட்ட தி.மு.க., 1967 இல் ஆட்சியைப் பிடித்தது. 1972 இல் தொடங்கப்பட்ட அ.தி.மு.க. 77 இல் ஆட்சியைப் பிடித்தது. 1984 இல் உடல்நலம் குன்றி அமெரிக்காவில், இருந்து கொண்டே ஆண்டிபட்டியில் போட்டியிட்டு வென்றார் எம்.ஜி.ஆர். அவர் இல்லாமலேயே, அவர் பெயரை மட்டும் சொல்லியேதான் தேர்தலும் பிரசாரமும் நடந்து வெற்றியும் கிடைத்தது. எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவியாக இருந்த ஜெயலலிதா செல்லாமலேயே மதுரை கிழக்கில் கே.எஸ். ராதாவும், மருங்காபுரியில் பொன்னுசாமியும் வெற்றி பெற்றனர்.

1991 சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. பெரும் வெற்றி பெற, தி.மு.க. சார்பில் துறைமுகம் தொகுதியில் கலைஞர் மட்டுமே வெற்றி பெற்றார். பின்னர் அவரும் ராஜினாமா செய்துவிட்டார். தனிப்பட்ட செல்வாக்கில் அறந்தாங்கியில் திருநாவுக்கரசரும், ஸ்ரீவில்லிபுத்தூரில் தாமரைக்கனியும் போட்டியிட்டு வென்ற நேரத்தில் கூட அ.தி.மு.க. இரண்டாமிடத்தைப் பெற்றது.

எம்.ஜி.ஆர். காலத்தில் ஒரு முறை, கட்சிக்கு எவ்வித செல்வாக்குமே இல்லாத, கதர், குமரி மாவட்டத்தின் கிள்ளியூர் தொகுதியில் போட்டியிட்ட ஆர்.எஸ். ராதாகிருஷ்ணன் என்பவர் கட்டுப் பணத்தை இழந்திருக்கிறார். அதன் பிறகு, 2006 சட்டமன்றத் தேர்தலில் அதே குமரி மாவட்டத்தில் முதல்முறையாகப் போட்டியிட்ட விளவங்கோடு, திருவட்டாறு தொகுதிகளில் இரண்டாவது, மூன்றாவது இடங்களைப் பெற்று கட்டுப்பணம் இழந்தது அ.தி.மு.க. கிள்ளியூரில் மூன்றாமிடம் பெற்று அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட குமாரதாஸ் கட்டுப்பணம் இழந்தார். ஆனால், குமரி மாவட்ட சூழலே வேறு. இந்தப் பகுதிகளில் எப்போதுமே அ.தி.மு.க.வுக்குக் குறிப்பிடும்படியான செல்வாக்கு இருந்ததில்லை.

ஆனால், பென்னாகரத்தில்?

2006 இல் தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., கம்யூனிஸ்டுகளும் கூட்டணியாக இருந்தபோதே அ.தி.மு.க. பெற்ற வாக்குகள் 47 ஆயிரம். ஆனால், இப்போது இரண்டு நாட்கள் ஜெயலலிதா நேரடியாகக் களமிறங்கிப் பிரசாரம் செய்தும் கம்யூனிஸ்டுகள் ம.தி.மு.க.வும் உடனிருந்தும், பெற்றிருப்பது 26 ஆயிரம் வாக்குகள் மட்டுமே. அ.தி.மு.க.வின் தோல்விக்கு, ஜெயலலிதா சொன்ன காரணங்களையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டாலும் அ.தி.மு.க.வே காரணம் என்கிறார்கள் அ.தி.மு.க. தொண்டர்கள்.

கடந்த சில ஆண்டுகளாகக் கட்சி நடத்தப்படும் விதமும் காரணம் என்கிறார்கள். பொதுச்செயலர் நிரந்தரம் என்றாலும் மாவட்டச் செயலர்களோ, மற்ற நிர்வாகிகளோ நிச்சயமில்லை. எனவே, எல்லாரிடமும் ஒரு நிச்சயமற்ற தன்மையே காணப்படுகிறது. எப்போது வேண்டுமானாலும் அவர்கள் மாற்றப்படலாம் என்பதால், எந்த நிர்வாகிக்கும் எந்த மாவட்டச் செயலருக்கும் பிடிப்பு இல்லாத நிலை. துணிச்சலாகச் செயல்படும் தருணத்தில் ஏதேனும் நேர்ந்து விட்டால் கட்சி என்ன செய்யும்? என்ற தொண்டர்களின் தயக்கம் எல்லாமும் தங்களை உளைச்சலில் ஆழ்த்தியிருப்பதாகக் குமுறுகிறார்கள் அ.தி.மு.க. தொண்டர்கள்.

எம்.ஜி.ஆர். காலத்தில், அ.தி.மு.க.வின் தூண்களாக இருந்தவர்கள் எல்லாம் ஜெயலலிதா காலத்தில், அனேகமாக இப்போது தி.மு.க.வில். ஆர்.எம். வீரப்பன், அரங்கநாயகம், திருநாவுக்கரசு, எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், கருப்பசாமி பாண்டியன், உக்கம்சந்த், செல்வகணபதி, தென்னவன், பொன்னுசாமி, சேடபட்டி முத்தையா, அனிதா ராதாகிருஷ்ணன்... இப்போது தி.மு.க.வின் தேர்தல் பணிக் குழுவில் இடம் பெற்றிருக்கும் 8 பேரில் ஆறு பேர் முன்னாள் அ.தி.மு.க.வினர்!

கட்டுப்பணம் பறிபோன அ.தி.மு.க.வின் தோல்விக்கு என்ன காரணம்?

1989 இல் தி.மு.க. ஆளுங்கட்சியாக இருந்தபோது நடந்த இடைத்தேர்தலில் மருங்காபுரியில் நின்று ஜெயலலிதா பிரசாரத்துக்கு வராமலேயே அ.தி.மு.க. சார்பில் வெற்றி பெற்றவர் பொன்னு சாமி. ஆனால், இப்போது அவர் தி.மு.க.வில்.



பொன்னுசாமி கூறுகிறார்.

''அன்றைக்கு அ.தி.மு.க. தொண்டர்களிடம் ஈடுபாடு இருந்தது. இன்றைக்குத் தொண்டர்கள் தொய்வடைந்து போயிருக்கிறார்கள். அன்றைக்கு கட்சி வேரோடி இருந்தது. இன்றைக்கு ஒரு குடும்பத்தின் பல்வேறு ஆதரவாளர்களிடம் அடக்கமாகிப் போயிருக்கிறது. கட்சியில் இருப்பவர்கள் எவரும் மகிழ்ச்சியாக இல்லை. மரியாதையை எதிர்பார்ப்பவர்கள் கட்சியைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். மிச்சம் இருப்பவர்களும் யோசிக்க வேண்டும். மொத்த கட்சியும் மொத்த தொண்டர்களும் ஒரு குடும்பத்தின் பிடியில் சிக்கியிருக்கிறார்கள். அதிலும் அந்தக் குடும்பத்து நபர்களில் யாருக்கு எப்ப அதிகாரம் வரும், போகும் என்று சொல்ல முடியாது. இந்த நிச்சயமற்ற நிலையில் தொண்டர்களும் தங்கள் விசுவாசத்தை மாற்றிக்கொண்டேயிருக்க வேண்டியிருக்கிறது.

அன்றைக்கு எம்.ஜி.ஆர் முதல்வராய் இருந்து மறைந்த நேரம். தொண்டர்களின் எழுச்சியை ஜெயலலிதா பகிர்ந்துகொண்டாரே தவிர, தனியாக அங்கீகாரம் ஏதுமில்லை. அன்றைக்கு ஆளுங்கட்சியைத் தோற்கடிக்கிற ஆர்வமும் ஈடுபாடும் தொண்டர்களுக்கு இருந்தது. இப்போது என்னதான் இளைஞர்கள், பாசறை, அது இது என்று சொன்னாலும் வணிக நோக்கோடுதான் கட்சி நடக்குது. இந்தச் சூழ்நிலை நிறையப் பேருக்கு விரக்தியை ஏற்படுத்தியிருக்கு. பணம் இருக்கிறவன் பணம் கொடுத்தும் பதவி வாங்க முடியலை என்று புலம்புகிறான். பணம் இல்லாதவன் உழைக்கிறவனுக்கு மரியாதை இல்லையா என்று புலம்புகிறான்.

இந்தத் தலைமைக்கும் (தி.மு.க.) அந்தத் தலைமைக்கும் (அ.தி.மு.க.) மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம். பதவி இல்லாமல் இருக்கலாம் ஆனால், அவமானத்தைச் சகித்துக்கொண்டு இருக்க முடியாது. இங்கே தலைவரை, துணை முதல்வரை நினைத்த உடனே பார்க்கலாம். அங்கே ஒன்பது ஆண்டுகளானாலும் பார்க்க முடியாது.

இந்தத் தேர்தல் வெற்றியைப் பொறுத்தவரை அது கலைஞரின் மக்கள் நலத் திட்டங்களுக்கும் தளபதியின் உழைப்புக்கும் கிடைத்த வெற்றி'' - என்றார் அவர்

அதிரடியாக. எம்.ஜி.ஆர். கேட்டுக்கொண்டதற்கிணங்க முதன் முதலில் திண்டுக்கல் லில் போட்டியிடலாமா என்று கே.ஏ.கிருஷ்ணசாமியுடன் இணைந்து கணிப்பீடு எடுத்தவரான புலமைப் பித்தன் கூறுகிறார்.

''இன்றைக்கு கட்சியில் இருந்து வெளியேறியவர்கள் ஜோதி முதல் எஸ்.வி.சேகர் வரை சொல்லிய ஒரே குற்றச்சாட்டு அ.தி.மு.க. மன்னார்குடி வளையத்துக்குள் உள்ளது என்பதுதான். இதில் உண்மையில்லை என்று மறுப்பதற்கில்லை. சுதாகரன், திவாகரன், தினகரன், வெங்கடேஷ் இப்படி யார் யாரெல்லாம் கட்சித் தலைமையிடத்துக்கு வருகிறார்கள் போகிறார்கள். இவர்களுக்கும் கட்சிக்கும் என்ன சம்பந்தம்? திடீர் ரசம், சாம்பார் என்பதுபோல், திடீர் தலைவர்களாக இவர்கள் எப்படி வருகிறார்கள் என்றால், சசிகலாதான் காரணம்.

ஜெயலலிதாவுக்கு சசிகலா உடன்பிறவா சகோதரி என்பது சரி. ஜெயலலிதாபட்ட கஷ்டங்கள் அத்தனையும் சசிகலாவும் அனுபவித்துள்ளார். அதற்காக சசிகலாவுக்கு தனிப்பட்ட முறையில் ஜெயலலிதா என்ன வேண்டும் என்றாலும் செய்யலாம். ஆனால், கட்சியில் அவர்களுக்கு என்ன சம்பந்தம்? அவர்களை ஏன் ஊக்குவிக்க வேண்டும்?

ஜெயலலிதாவிடம் சரியான ஆளுமைத் திறன், துணிவு, அறிவு உள்ளது. ஆனால், சரியான சிந்தனை இல்லை. ஈழத்தில் தமிழினப் படுகொலைக்குக் காரணமான கருணாநிதி இப்படி தேர்தலில் வெற்றி பெறுகிறார் என்றால், ஜெயலலிதாவிடம் உள்ள பலவீனம்தான் காரணம்.

தி.மு.க.வைவிட கட்சிக்காக உழைக்கக் கூடிய உண்மையான தொண்டர்கள் அ.தி.மு.க.வில்தான் உள்ளனர். எம்.ஜி.ஆரின் விசுவாசிகளான அவர்களை ஊக்கப்படுத்தி, முன்னிலைப்படுத்தி வந்தால் ஜெயலலிதாவுக்கு வெற்றி நிச்சயம்தான் என்கிறார் புலமைப் பித்தன். ✱



# நகரத்தை மிஞ்சும் கிராமம்!

இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் திருமணத்துக்கு முந்தைய பாலியல் உறவு குறித்து ஆந்திரா, பீகார், ஜார்க்கண்ட், ராஜஸ்தான், மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகிய 6 மாநிலங்களில் கணக்கெடுப்பு நடத்தியது. 15 சதவீத இளைஞர்களிடமும், 4 சதவீத இளம்பெண்களிடமும் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின் படி; 15 வயதில் இருந்து 24 வயதுக்கு உட்பட்ட இளம்பெண்கள், 15 வயதை அடையும் முன்னரே உடலுறவில் ஈடுபடுகின்றனர் என்று தெரிய வந்துள்ளது. மேலும், இந்த விஷயத்தில் நகரத்தில் இருக்கும் பெண்களை விட கிராமத்தில் இருக்கும் பெண்களே அதிகம் ஈடுபடுகின்றனர் என்ற ஆச்சரியமூட்டும் தகவலும் கிடைத்துள்ளது.

இந்த புள்ளிவிபரங்களில் மேலும் சில அதிர்ச்சியூட்டும் தகவல்களும் கிடைத்துள்ளன. பெண்களை ஆண்களுடன் ஒப்பிடுகையில், 24 சதவீத இளம்பெண்கள், 15 வயதை அடையும் முன்னரே உடலுறவு கொண்டுள்ளனர். ஆனால், இளைஞர்கள் 9 சதவீதம் பேர்தான் திருமணத்திற்கு முன் உடலுறவு கொண்டுள்ளனர்.



திருமனாத்துக்கு முன் உடலுறவு கொள்வது இந்தியாவில் பரவலாக இருந்து வருகிறது. டெல்லியில் உள்ள மக்கள் தொகை கவுன்சிலும், மும்பையில் உள்ள பன்னாட்டு மக்கள் தொகை விஞ்ஞான பயிற்சி மையமும் இணைந்து நடத்திய விரிவான கனக்கெடுப்பில், இந்தியாவில் நகரப்புறங்களை விட கிராமப்புறங்களில் தான் இளம் வயதினர் திருமணத்துக்கு முன் அதிகமாக செக்ஸ் வைத்துள்ளனர் என்று தெரிய வந்துள்ளது. இளைஞர்களில், திருமணத்துக்கு முன், நகரப்பகுதியில் 17 சதவீதம் பேரும், கிராமப்பகுதியில் 29 சதவீதம் பேரும் உடலுறவில் ஈடுபடுகின்றனர். அதேசமயம் இளம் பெண்களில் கிராமப்பகுதியில் 46 சதவீதமும், நகரப்பகுதியில் 31 சதவீதமும் திருமணத்துக்கு முன்னதாகவே உடலுறவு கொள்கின்றனர். நகரங்களில் ஒரு சதவீத இளைஞர்களும், கிராமங்களில் 6 சதவீத இளைஞர்களும் 18 வயதை அடையும் முன்னரே செக்ஸ் வைத்துக் கொள்கின்றனர். 26 சதவீத இளைஞர்களும், 46 சதவீத இளம்பெண்களும் 15 வயதை அடையும் முன்னரே உடலுறவில் ஈடுபடுகின்றனர்.

இதில், பெரும்பாலானவர்கள் அபாயகரமான வகையிலேயே பாலுறவில் ஈடுபடுகின்றனர். அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடன் உறவு கொள்கின்றனர். 25 சதவீத இளைஞர்களும் 21 சதவீத இளம்பெண்களும் ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடன் உறவு கொள்கின்றனர். உறவின்போது ஆண்களில் 13 சதவீதத்தினரும், பெண்களில் மூன்று சதவீதத்தினரும் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்துகின்றனர். இந்த ஆறு மாநிலங்களில் பரவலாக பாதுகாப்பற்ற முறையில் தான் உடலுறவுகள் நிகழ்கின்றன. ராஜஸ்தான் தவிர மற்ற மாநிலங்களில் 32 சதவீதம்பேர் ஒன்றுக்கு மேற்பட்டோருடன் உறவு கொள்கின்றனர். ராஜஸ்தானில் இது 14 சதவீதமே நடைபெறுகிறது.

அதேசமயம், சுவிட்சர்லாந்து நாட்டில், 12 வயது சிறுவர்கள், தங்களுடன் படிக்கும் சிறுமிகளுடன் உடலுறவில் ஈடுபடுவது அதிகரித்து வருவதாக அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகி உள்ளன. ஆனால், அவர்கள் ஆணுறை பயன்படுத்துவதில்லை. இதனால், தேவையற்ற கர்ப்பங்கள் உருவாவதுடன், எய்ட்ஸ் உள்ளிட்ட பாலியல் நோய்களும் அதிக அளவில் பரவி வருகின்றன. ஆணுறை பயன்படுத்தாததற்கு சிறுவர்கள் சொல்லும் காரணம், அது பெரியதாக இருக்கிறது என்பதுதான். இந்த பிரச்சினையைத் (!) தீர்ப்பதற்காக, சிறுவர்களுக்கான ஆணுறையை சுவிட்சர்லாந்து நிறுவனம் ஒன்று தயாரித்துள்ளது. இந்தத் தயாரிப்பு, விறுவிறுப்பாக விற்பனையாகி வருகிறதாம்.

## செக்ஸி பிபாஷா



பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட பிபாஷா பாஸு கோபித்துக்கொண்டு பாதி நிகழ்ச்சியிலேயே வெளியேறிவிட்டார். கோபத்துக்குக் காரணம் அவருடைய ரசிகர்களே! பிபாஷாவை செல்லமாக 'செக்ஸி' என்று கூச்சல் போட்டிருக்கிறார்கள் ரசிகர்கள். இந்த வார்த்தையால் டென்ஷனான பிபாஷா 'இனி என்னை யாரும் செக்ஸி என்று கூப்பிடக் கூடாது' என்று பத்திரிகையாளர் மாநாட்டில் சொல்லியிருக்கிறார்.

## பிரிந்த காதல் இணைகிறது!



பிரிந்த காதலர்களான கரீனாவும் ஷாஹித் கபூரும் மறுபடியும் இணைகிறார்கள். காதலில் அல்ல; நடிப்பில். காதலில் இருந்தபோது மிலேங்கே மிலேங்கே' என்ற படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருந்தார்கள். பிரிந்த பிறகு படப்பிடிப்புக்கு வராமல் இழுத்தடித்தார்கள். படத்தின் தயாரிப்பாளர் ஸ்ரீதேவிக்காக, ஷாருக்கான் இந்த விஷயத்தில் தலையிட்டு சரி செய்திருக்கிறார்.

## அக்ஷராவின் ஆர்வம்



அக்ஷரா ஹாஸனுக்கு நடிப்பதை விட டைரக்ஷனில் தான் ஆர்வம் அதிகம். சினிமாவில் துணை இயக்குனராக வேலை பார்க்கப் போகிறார்.

இயக்குனர் கனவை அம்மாவிடம் சொன்னவுடன் தான் நடிக்கும் ஹிந்திப் படத்திலேயே வாய்ப்பு வாங்கித் தந்துவிட்டார் சரிகா.

## பயங்கள்

பரம்பரைப் பரம்பரையாக மனித இனத்தைப் பயமுறுத்திக்கொண்டு இருக்கின்றன... சில தீர்க்கதரிசனங்கள். அந்தப் பாரம்பரியப் பயம் லிஸ்ட் இது...

**மயன் கலண்டர்:** மயன் இனத்தைச் சேர்ந்த மக்கள், நாட்களைத்துல்லியமாகக் காட்டும் கலண்டர்களை, பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வடிவமைத்து இருந்தார்கள். அந்த மக்களின் கலண்டரை அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடித்தார்கள் ஆராய்ச்சியாளர்கள். அந்தக் கணக்கீடுகள் அனைத்தும் 2012 ஆம் ஆண்டுடன் முடிந்து போவதைக் கண்டு அதிர்ந்து போனார்கள். மயன் மக்களின் வானவியல் அறிவும் '2012 இல் உலகம் அழியும்' என்பதில் அவர்களுக்கு இருந்த நம்பிக்கையும் சேர்ந்து உலகெங்கும் இப்போது பீதியைக் கிளப்பி வருகிறது!



**நியாயத் தீர்ப்பு நாள்:** இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவத்தில் இது மிக முக்கிய நாள். 'மனிதர்களின் செயல்களுக்கு கடவுள் தீர்ப்பு வழங்கும் நாள்' என்று இதைவரையறுக்கிறார்கள். 'நியாயத் தீர்ப்பு நாளில் உலகமே பேரழிவுக்கு உட்பட்டு, மனித இனம் அழிந்துவிடும். அதற்கடுத்து பல ஆண்டு காலம் பாவிகள் தவறுகளுக்கு ஏற்பநரகத்தில் தண்டனை அனுபவிப்பார்கள்' என்று பலரைப் பய முறுத்திக்கொண்டு இருக்கிறது இந்த நியாயத் தீர்ப்பு நாள்!

**நாஸ்டர்டாம் தியரி:** உலகெங்கும் அதிகம் பேருக்கு தெரிந்தது 'நாஸ்டர்டாம் தியரி'. 'உலகில் இவை எல்லாம் நடக்கும்' என்று நாஸ்டர்டாம் ரகசியக் குறியீட்டுப் பாடல்களாக எழுதிவைத்தவைதான் இந்த தியரிகள். சுனாமி, எரிமலை வெடிப்பு, அமெரிக்கா வல்லரசாகும், சீனாவல்லரசாகும் என்று அவர் எழுதிவைத்த, பல விஷயங்கள் இம்மியும் பிசகாமல் நடந்துகொண்டு இருக்கின்றன. நாஸ்டர்டாம் குறிப்பிட்ட பல அழிவுகள் இனித்தான் நடக்கப் போகின்றன. எங்கே, எப்போது என்பது எல்லாம் அவருக்கே வெளிச்சம் என்று ஒரு குரூப் பயமுறுத்த, ''அப்படி ஒன்றே கிடையாது... ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கிய மாயத் தோற்றம் தான் நாஸ்டர்டாம் தியரி'' என்று மறுப்பவர் களும் இருக்கிறார்கள்!

**ஊழி:** 'கலியுகத்தின் முடிவில் கடல் சூழ் உலகம் மூழ்கி புது உலகம் பிறக்கும். மீண்டும் சத்யுகம் உண்டாகும்' என்கின்றன இந்து மதப் புராண நூல்கள். ''கலியுகம், சத்யுகம் இரண்டும் சங்கமிக்கப்போகும் புள்ளியான 'சங்கம யுகத்தில்'தான் உலகம் இப்போது இருக்கிறது. விரைவில் இந்தப் பழைய உலகம் அழிந்து புது யுகம் தோன்றும்' என்று பல அமைப்புகள் பீதி கிளப்ப ஆரம்பித்து இருக்கின்றன!



''மகன் அப்பாவைக் கூப்பிடு''
''அப்பா இங்கே வா''
''அப்பாவை மரியாதையாக் கூப்பிடணும்''
''அப்பா, மரியாதையா இங்கே வா''



''தலைவரை ஒருத்தர் திட்டுகிறார், தலைவர் கோபப்படாமல் இருக்கிறார்....!''
''புறம்போக்கு என்று திட்டுகிறாரு... இது தலைவருக்கு பிடித்த வார்த்தை தானே''

## வாடகை வீடு

### நிமிடக்கதை

ரங்கநாதன் பிடிவாதமாக இருந்தார். இருக்கிற வீட்டை காலி செய்யச் சொல்லிவிட்டார்கள். புறநகர் பக்கமாக வாடகைக்கு வீடு பார்த்தால் பெரிய வீடு கிடைக்கும் என்றார். பிள்ளைகள் அங்கிருந்து கல்லூரி பஸ்ஸில் சென்றுவிடலாம். ஒரு வாரத்துக்கான காய்கறிகளை பிரிட்ஜில் வாங்கி அடுக்கி வைத்துவிடலாம். மருத்துவமனைக்குப் போக வேண்டுமென்றால் டாக்சியை அழைத்துக்கொள்ளலாம் என்று காரணங்களை அடுக்கினார்.

அந்தப் பகுதியில் போய் வீடு பார்க்க ஆரம்பித்த போது தான் அவரது மனது புரிந்தது. தனக்கும் தன் மனைவிக்குமாக ஒரு தனி படுக்கை அறை கொண்ட வீடாகப் பார்த்துக்கொண்டே வந்தார்.

இத்தனை நாள் இல்லாமல் இப்போது துள்ளி விளையாடப் போகிறாரா இந்த ஐம்பத்தைந்து வயதில் என்று கல்யாணிக்கு எரிச்சலாக வந்தது. அவர் நினைத்த மாதிரி வீடு கிடைத்து. தங்களது படுக்கை அறைக்குள் குஷியுடன் வந்த ரங்கநாதனை எரிச்சலாகப் பார்த்தாள் கல்யாணி.


''அப்பாடா.... தனி அறை கிடைச்சுது. இனி உனக்கு கால் வலிக்கறபோதெல்லாம் நான் தைரியமா கால் பிடிச்சிவிடு வேன். முதுகு வலிச்சா தைலம் தேய்ச்சிவிடுவேன். அது மட்டுமில்லாம, நாம் சின்னஞ்சிறுசுகளா இருந்த காலத்துல போட்டுகிட்ட சண்டை.... சேர்ந்திருந்த இனிய தருணங்கள் எல்லாவற்றையும் மறுபடி உன்னை என் மடியில் சாய்ச்சிக்கிட்டு கடந்த காலங்களை நினைச்சிப் பார்க்க வைப்பேன்'' என்றதும் கணவனின் நல்ல மனது புரிய, அவரை இழுத்து மடியில் சாய்த்துக்கொண்டாள் கல்யாணி.



சிறுகதை

# என்ன பதில் சொல்ல?

–ச. முருகானந்தன்



பத்து வருடங்களின் பின்னர் தாய் மண்ணுக்கு வந்த போது, போரின் சிதிலங்களின் மத்தியிலும் ஊர் முன்னேறியிருப்பதாகத் தோன்றியது. கடந்த வருடம் தான் ஈழப் போர் முடிவுக்கு வந்திருந்தாலும், யாழ்ப் பாணத்தைப் பொறுத்தவரை கடந்த ஏழெட்டு வருடங்கள் ஓரளவு அமைதி நிலவியதாலோ என்னவோ அது மீண்டும் துளிர்க்க ஆரம்பித்திருந்தது. இத்தனை பொருளாதார நெருக்கடிக் களுக்கு மத்தியிலும் யாழ் மண் தலை நிமிர்ந்து நிற்கிறது என்றால் புலம் பெயர்ந்தவர்களின் உழைப்பில்தான் என்று எண்ணினான் முரளிதரன்.

அவன் இந்த மண்ணை விட்டுப் போன போது அவனுக்கு இருபத்து இரண்டு வயதுதான். உயர்தரம் சித்தி யடைந்து பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருந்த காலம். போரின் தீச்சு வாலைகள் ஊர்முழுவதையும் சின்னாப்பின்னப் படுத்தியிருந்த வேளை. இராணுவக் கெடுபிடிகளால் இளைஞர்கள் கைதாவதும், காணாமல் போவதும் ஒரு புறம், போராட்டத்தில் இணையும்படி போராளிகளின் வற்புறுத்தல் மறுபுறம், பல்கலைக்கழகத்துள் படைகளின் அடாவடித்தனம் இன்னொரு புறம் என வாழ முடியாத நெருக்கடிகள். அண்ணா வும் போராட்டத்தில் இணைந்துவிட்டார். அக்காவின் கணவர் வேலை விட்டு வரும்போது சுடுபட்டு இறந்து போனார். இந்த நிலையில் அம்மா அவனுக்காக தினமும் ஏங்கினாள். கோயில்களில் எல்லாம் நேத்தி வைத்தாள். மரணங்கள் மலிந்துவிட்ட பூமியை விட்டு அவனை வெளிநாட்டுக்கு அனுப்ப பிரயத்தனப் பட்டாள். கையில் பொருளாதார பலம் இல்லை. இருந்த நகையை விற்று, வீட்டை ஈடு வைத்து ஒருவாறு அவனை அனுப்பி வைத்தனர். அதிஷ்டவசமாக முகுவர்களிடம் ஏமாந்து போகாமல் அவன் லண்டன் போய் சேர்ந்தான்.

ஊரில் பட்ட கஷ்டங்களுக்கு இங்கு அவனுக்கு வேலைவாய்ப்பு, அகதி அந்தஸ்து என்பன தாமதமின்றிக் கிடைத்தன. பனியிலும் குளிரிலும் கடின உழைப்பை மூலதனமாக்கி இரவு பகல் பாராமல் உழைத்தான் முரளி. அவனது உழைப்பில் ஊரில் குடும்பம் தலை நிமிர்ந்தது. புதிய கல்வீடு ஒன்றை கட்டினார்கள். இடையே ஆனையிறவு சமரில் அண்ணாவின் வீரமரணம் அனைவரையும் வாட்டியது. அப்போது ஊர்வர அம்மா அவனை அனுமதிக்கவில்லை. இப்போது யுத்த மேகங்கள் கலைந்த பின்னர்தான் வரும்படி கூறியிருந்தார். அவனை ஊருக்கு அழைத்ததற்கு இன்னொரு காரணம் மாமன் மகள் ராணிக்கு அவனை மணம் செய்து வைப்பதும் தான். அவன் வெளிநாடு போகும் போது அவள் சின்னப் பெண்ணாக இருந்தாள். ஆனாலும் அந்த முகத்தின் அழகு இவன் மனதில் பசுமையாக இருந்ததால் தொலைபேசியில் அம்மா கேட்டபோது தனது சம்மதத்தை தெரிவித்துவிட்டான். இப்போது ஊர் வந்து இரண்டு நாட்கள் கடந்த பின்னரும் ராணியைக் காணக்கிடைக்கவில்லை. அக்காவினதும், பெற்றோரினதும் அன்பிலும் மகிழ்விலுமாக பொழுது கடந்தாலும் ராணியை பார்க்க வேண்டும் என மனது தவித்தது. மாமா வீட்டுக்கு போவது சரியா என அவன் மனம் எண்ணியது. எனினும் அவனது ஆசை யை நிறைவேற்றுவது போல அம்மா, ''முரளி, வந்தனி... ஒருக்கால் பெரியமாமா வீட்டுப் பக்கம் போயிட்டு வாவன்...'' என்றதும் மகிழ்வோடு புறப்பட்டான்.

அவன் அங்கு போன போது மாமாவும் மாமியும் மகிழ்வோடு அவனை வரவேற்றனர். ராணியை காணவில்லை. நீண்ட நேரம் இருந்து கதைத்துவிட்டு புறப்பட்டான். ''பிள்ளை சிநேகிதிமாரோட வெளியிலை போனவள் வாற நேரம்தான். இருங்கோவன் முரளி...'' மாமா தான் கூறினார்.

மாமாவின் வீடு மாளிகை போல் இருந்தது. வீட்டில் ஆடம்பரமான செற்றி, தொலைக்காட்சி, திரைச்சீலைகள், சித்திரங்கள் என மாமாவையின் தற்போதைய பொருளாதார செழிப்பு தெரிந்தது. அவர்கள் மகன் பிரணவன் சுவிஸில் குப்பைக் கொட்டிக் கொண்டிருக்கிறான். ராணியும் ஒரே மகள்தான். அவன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே ராணியும் வந்தாள். அவன் சற்றும் எதிர்பார்க்காத வகையில் ஜீன்ஸும், ரீசேட்டும் அணிந்திந்தாள். அவனைக் கண்டதும் சற்று யோசித்து பின் அடையாளம் கண்டு 'ஹாய் முரளி' என ஓடிவந்து கைகுலுக்கினாள். அவள் ஓட்டி வந்த மோட்டார் சைக்கிள் வாசலில் நின்றது. லண்டனிலுள்ள எமது ஊர் பெண்களை நிராகரித்து விட்டு வந்தவனுக்கு ராணியின் நடையுடை பாவனை எதுவுமே ஒன்றவிடவில்லை. பெண்கள் இன்று சமத்துவ நிலையை அடைந்து மோலோங்கியதை ஏனோ லண்டனில் வாழ்ந்த அவனால் கூட ஜீரணிக்க முடியவில்லை. புடைவை அணிந்து அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என வருவாள் என்று கற்பனை செய்த ராணி, கூந்தலையும் வெட்டி பொப்பாக வந்தது அவனை ஏனோ கவரவில்லை.

''என்ன யோசிக்கிறீங்க... ரீ குடிச்சீங் களா?...'' ராணி செட்டியில் அவனுக்கு அருகே அமர்ந்த படி கலகலப்பாக பேசினாள். ''ஓம்'' என்பது போல தலையசைத்த முரளியால் இன்னும் சமநிலைக்கு வரமுடியவில்லை. அவள்தான் தொடர்நதாள்

''லண்டன் போய் என்ன படிச்சீங்க?... டிகிரி செய்தீங்களா? இல்லாட்டி கோப்பை கழுவல் மட்டுமா?'' என்ற அவளது கேள்வியில் அவன் மென்று விழுங்கினான்.

''இங்கே என்னுடைய பேரன்ஸ் அதே ஓல்ட் பேஷன்.... மச்சான் மச்சாள் என்று ஒன்றுக்குள்ள ஒன்று... ஐ ஹேற்... பார்கணும் பேசிப் பழகணும் ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிக் கணும்.... உங்க கூட பழகி அப்புறமே டிசைட் பண்ணனும்... நீங்க என்ன நினைக்கிறீங்க...?''

அவன் பதிலின்றி சிரித்தான்.

சிறிது நேரம் கதைத்துக் கொண்டிருந்துவிட்டு முரளி விடை பெற்றான். அவன் திரும்பி வந்து கொண்டிருந்த போதுஉச்சில் குளத்தடி கலகலப்பாக இருந்தது. மாரி காலம் என்பதால் குளத்தில் நீர் நிறைந்து இருந்தது. இளைஞர்கள் நீச்சலடித்துக் கொண்டிருந்தனர். ஆலமர நிழல் கோயிலடியை குளிர்மையாக்கிக் கொண்டிருந்தது. முன்னர் அவனும் குளத்தில் நீச்சலடித்து விளையாடிய தால் நீந்திப் பார்க்கலாமா என ஆசை வந்தது. எனினும் சிரிப்போடு அவ் எண்ணத்தை நிறுத்திக் கொண்டான். கோயிலில் சிலர் வழபட்டுக் கொண்டி ருந்தனர். இப்போதெல்லாம் அவனுக்கு கடவுள் நம்பிக்கை விட்டுப் போயிருந் தது. உண்மையில் கடவுள் இருந்திருந் தால் இத்தனை கொடுமைகளையும் எமது இனத்துக்கு எதிராக ஏன் அனுமதித்தார்?

முரளி கோயில் வாசலைத் தாண்டி வெளிக்கிட்ட போது அமைதியே உருவான சாந்தமான முகத்துடன், நீண்ட கூந்தலும், தலையில் மல்லிகைச் சரமுமாக ஓர் அழகிய பெண் அவனைக் கவர்ந்தாள். அருகே ஒரு நடுவயதுப் பெண். எங்கோ பார்த்த முகம் மாதிரி தெரிந்தது. அவன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே, ''என்ன மருமகன், எங்களை அடையாளம் தெரியவில்லையா?'' என்று அந்தப் பெண் கேட்டதும், ''அட சின்னமாமி... ஆளை அடையாளமே தெரியல்லை.'' என வியப்புடன் நோக்கினான். அப்படியானால் அருகே நிற்பது ரஞ்சி... 'ஓ... ரஞ்சி இவ்வளவு வளர்ந்து வடிவானவளாக வந்து விட்டாளா? ம்... பெண்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே வளர்ந்து விடுகிறார்களே!' என எண்ணினான். ரஞ்சியை பார்த்ததும் அவன் மனதில் குதூகலம். அவன் எதிர்பார்த்த அதே மாதிரி.. அவள் அவனை நேருக்கு நோக்கவே வெட்கப்படுபவளாக... 'ஓ சுவீற் கேள்' என எண்ணினான் முரளி.

''நேரம் கிடைக்கற போது வீட்டுக்கு வாங்கோ மருமகன்...'' சின்னமாமி அழைத்தாள். அவன் சரியென்று தலை யசைத்தான். வீட்டிலே ரஞ்சியை பற்றி கதைக்க வேண்டுமென எண்ணினான். அவனது மனதில் ரஞ்சி நிறைந்திருந்தாள்.

மறுநாள் சின்ன மாமா வீட்டுக்குச் சென்ற போது மாமி மகிழ்வோடு அவனை வரவேற்றாள். மாமாவும், மாமியும் அவனோடு கதைத்துக் கொண்டு இருந்த போது ரஞ்சி தேநீர் கொண்டு வந்தாள். திரும்பிப் போனவளை மாமி கொக்கி போட்டு இழுத்தாள். ''இரு பிள்ளை... இருந்து கதை...''

மாமாவும் மாமியும் போன பின்னர் ரஞ்சியுடன் தனியே கதைக்க நினைத் தான். அவள் கால்களை ஒடுக்கியபடி அமைதியாக அமர்ந்திருப்பதைப் பார்க்க முரளிக்கு உள்ளம் குளிர்ந்தது.

''ரஞ்சி... என்ன படிச்சிருக்கிறாய்?''

''பி.எஸ்.சி...'' அடக்கமாகப் பதில் சொன்னவளை வியப்போடு நிமிர்ந்து பார்த்தான். கேட்டதற்கு மட்டும் பதில் சொல்லி விட்டு அவள் அடக்கமாக அமர்ந்திருந்தாள்.

''ரஞ்சி... நான் உங்கிட்ட ஒரு விசயம் கேட்கலாமா?'' தங்கியபடி கேட்டான்.

அவள் அவனை எதுவும் புரியாமல் நிமிர்ந்து பார்த்தாள். அவன் புன்னகைத்தபடி, ''உங்களை எனக்குப் பிடித்திருக்கு... என்னை கல்யாணம் செய்கிறீங்களா..?''

நம்ப முடியாதவள் போல அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். ''பெரிய மாமாவின்ர ராணியைச் செய்யப் போறதாகத் தானே கதைச்சவை''

''ரஞ்சி, எனக்கு ராணியைப் பிடிக்கவில்லை. உங்களைப் பார்த்தவுடனே பிடிச்சுப் போச்சு..'' அவன் சொல்லும் போது அவளுக்கு பெருமிதமாக இருந்தாலும், மனதில் ரணமாக வலித்தது. கண்கள் பனிக்க வெறித்து நோக்கினாள்.

''என், என்னைப் பிடிக்கவில்லையா ரஞ்சி...?'' அவன் தவிப்போடு கேட்டான்.

''உங்களைப் பிடிக்காமல் விட உங்களிடம் என்ன குறையிருக்கு? எந்தப் பெண்ணுக்குத் தான் உங்களைப் பிடிக்காது.. ஆனால்...'' இவள் எதையோ சொல்ல முடியாமல் தயங்கினாள்.

''என்னென்றாலும் தயங்காமல் சொல்லுங்கோ''

''நான் ஒருத்தரை விரும்புகிறேன்... ஆனா... எங்கட வீட்டார் விரும்புகினம் இல்ல... இப்ப உங்களுக்கு விருப்பம் எண்டு அறிஞ்சால் உடனேயே செய்யச் சொல்லி நிற்பினம்... தயவு செய்து இப்ப என்னோட கதைச்சதைப் பற்றிச் சொல்லாதையுங்கோ....''

முரளிக்கு ஏமாற்றமாக இருந்தாலும் 'சரி' என்று கூறினான். ''விரும்பிய பையனைச் செய்ய ஏன் அப்பா அம்மா மறுக்கினம்...''

ரஞ்சி குரல் தளதளக்க, ''முதல்ல சம்மதிச்சிருந்தவை... இப்ப ஷெல் அடியில் அவற்றை கால் இல்லாமல் போனதோட மறுக்கினம்...''

முரளிக்கும் கவலையாக இருந்தது. ''ம்... எங்கட தேசத்தில எத்தனை எத்தனை அப்பாவிகளின்ர வாழ்வு பாழ்பட்டுப் போச்சு... ம்.. கால் இல்லாதவரை கட்டிக் கொடுக்க பெற் றோர்விரும்ப மாட்டினம் தானே ரஞ்சி...''

''ஒரு வேளை கலியாணத்துக்குப் பிறகு கால் போயிருந்தால்..? அவளது கேள்வியிலுள்ள நியாயம் முரளிக்கு புரிந்தது. ரஞ்சி தொடர்ந்தாள். ''இல்லாத காலுக்கு செயற்கைக் கால போட்டிருக்கு... ஒரு கடை கண்ணியைப் போட்டுக் கொடுத்தால் செய்வார்... முதல் தான் இல்லை...''

ரஞ்சியைப் பார்க்க முரளிக்குப் பாவமாக இருந்தது.

''யோசிக்காதேங்கோ ரஞ்சி.. கடை போட நான் பண உதவி செய்யுறன். இதோட மாமா, மாமியோட உங்கள் சார்பாக கதைக்கிறேன்..'' முரளி விடை பெற்றான்.

வீட்டுக்குப் போனதும் அம்மா கலியாணம் பற்றி கதைப்பார். இப்போது என்ன பதில் சொல்லவது? என முரளி பலவாறாக யோசித்தான். அவன் எதிர் பார்த்தது போலவே அம்மா அதையே கேட்டாள். ''பெரிய மாமா அவை கேட் கினம் என்றால் என்ன பதில் சொல்லுறது?''

''என்ன பதில் சொல்ல?'' அவன் யோசித்தான்.

*

# நித்தியானந்தா போய்... சதானந்தா...!





''தியான பீடத்தின் அத்தனை பொறுப்புகளில் இருந்தும் நான் விலகிக் கொள்கிறேன். என் ஆன்மீக வாழ்க்கையை மற்றவர்களிடமிருந்து விலக்கி, ஏகாந்தமாகத் தனித்துத் தொடர விரும்புகிறேன். ஆசிரமத்தை புதிய நிர்வாகிகளிடம் ஒப்படைத்துவிட்டேன்'' - திடீர் திருப்பமாக இப்படி அறிவித் திருக்கிறார் நித்தியானந்தா!

பல ஆயிரம் கோடி மதிப்புடைய ஆசிரமத்தின் சகல பொறுப்புகளையும் நித்ய சதானந்தா என்பவர் கையில் ஒப்படைத்திருக்கிறார் நித்தியானந்தா. நித்ய சதானந்தாவை அவர் இந்த அளவுக்கு நம்பியது எப்படி?

''நாமக்கல் மாவட்டம் திருச்செங் கோடு பாவடித் தெருவைச் சேர்ந்தவர் குட்டி என்கிற திருவேங்கடம். வசதி வாய்ப்புகளுக்குப் பஞ்சமில்லாத குடும்பம். திருவேங்கடத்துக்கு திருச்செங்கோட்டில் ஜோதி, அமர்ஜோதி என இரண்டு தியேட்டர்கள், ஸ்பின்னிங் மில்ஸ் என ஏகப்பட்ட தொழில்கள். இவருக்கு மூன்று மகன்மார். மூத்த மகன் பெயர் தனசேகரன். கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு அப்பாவின் தொழிலை கவனித்துக் கொண்டு இருந்தார். அத்துடன், அவருக்கு ஆன்மீகத்தில் அதிகம் ஈடுபாடு. அடிக்கடி ஈஷா யோகா மையத்துக்குப் போவார்.

இடையில் தனசேகரன் உடல் நலம்

## புதிய தலைவர் நித்ய சதானந்தா!

பாதிக்கப்பட்டார். அவரால் எதுவுமே சாப்பிடமுடியாது. சாப்பிட்டதுமே வாந்தி வந்துவிடும். போகாத ஆஸ்பத்திரி இல்ல. பார்க்காத டாக்டர் இல்லை. ஆனாலும் பலனில்லை. அப்போது பள்ளிப்பாளையத்துக்கு நித்தியானந்தா வந்திருந்தார். அவர் கை வைத்தால் எல்லா நோய்களும் குணமாகிவிடும் என்று சொன்னார்கள். அதைக்கேட்டு தனசேகரன் அவரைப் பார்க்கப் போய் இருந்தார். பார்த்த கொஞ்ச நாளிலேயே அவரின் நோய் குணமாகி விட்டது. அப்படித்தான் நித்தியானந்தா மீது அளவில்லாத ஈடுபாடு வந்து, காவி கட்டிக் கொண்டு ஊரெல்லாம் நித்தியானந்தா புராணம் பாடினார். ஒருகட்டத்தில், 'இனி நான் வீட்டுக்கே வர மாட்டேன்' என்று சொல்லி நித்தியானந்தாவோடேயே போய்விட்டார். நித்தியானந்தாதான் தனசேகரன் பெயரை நித்ய சதானந்தா என்று மாற்றனார். பெங்களூரில் உள்ள பிடதியில் ஆசிரமம் வைக்க நிலம் தேடியபோது அதுக்காக தனது சொத்தின் இருந்து 50 லட்ச ரூபாயை நித்தியானந்தாவுக்கு கொண்டு போய் கொடுத்திருந்தார் தனசேகரன்.

ஆசிரமம் எல்லாம் கட்டி முடித்த பின்பு தனது மனைவியையும் சந்நியாசி ஆக்கிக்கொண்டு அவ்ரையும் ஆசிரமத்துக்கு கூட்டிக் கொண்டு போய்விட்டார்?!'' என்கிறார் நித்ய சதானந்தாவின் பள்ளிக்கால நண்பர் ஒருவர்.

ஆசிரமத்துக்கு நெருக்கமான சிலர், ''தியான பீடத்தின் செயலாளர் என்ற கௌரவமான அந்தஸ்தை நித்தியானந்தா, நித்ய சதானந்தாவுக்கு கொடுத்திருந்தார். பீடத்தைப் பொறுத்தவரை நித்தியானந்தாவுக்கு அடுத்தபடியாக முழு அதிகாரம் இந்த நித்ய சதானந்தாவுக்குதான். நித்தியானந்தா ஊரில் இல்லாத சமயங்களில் ஆசிரமத்துக்கு வரும் பக்தர்களுக்கு ஆசி வழங்கும் நித்ய சதானந்தாவுக்கு பணப்பற்றே கிடையாதாம். சி.டி. விவகாரத்துக்குப் பிறகு நித்தியானந்தா தலைமறைவான காலத்திலும் அவருடன் தங்கு தடையின்றி தொடர்பிலிருந்தார் இவர். வழக்கு நீதிமன்றம் வரும்போது ஆசிரமத்தின் சொத்துகளுக்கு பங்கம் வந்திடக் கூடா என்று ஆசிரமப் பொறுப்புகளை நித்ய சதானந்தாவுக்கு கைமாற்றி இருக்கிறார் நித்தியானந்தா. தன் மீதான வழக்குகள் எதுவுமே ஆசிரமத்தின் செயல்பாட்டை பாதித்து விடக்கூடாது என்ற கவலைதான் இந்த மாற்றத்துக்குக் காரணம்'' என்கிறார்கள்.

நித்தியானந்தாவின் இந்த திட்டத்தை முன்கூட்டியே கணித்த எதிர்தரப்பு அடுத்தடுத்த அவரது நகர்வுகள் குறித்து பொலீஸுக்கு தகவல்களை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறதாம். நன்கு விவரம் அறிந்த வட்டாரங்களில் சிலர், ''ஆசிரமப் பொறுப்புகளை உதறுவதற்கு முன்னரே, தமிழகத்தில் தன் பெயரில் இருக்கும் சொத்துகளையும் சேமிப்பு பணத்தையும் வேறு பெயருக்கு மாற்ற நித்தியானந்தா கவனம் செலுத்தினார். தமிழகத்தின் பல வங்கிகளில் ஆசிரம வங்கிக் கணக்கு இருக்கிறது. அவற்றை சில நாட்களுக்கு முன் வேறொரு வங்கிக்கு மாற்ற சத்தமின்றி முயற்சி நடந்தது. இந்த விஷயத்தை சென்னை பொலீஸுக்கு நித்தியானந்தாவின் எதிரிகள் போட்டுக் கொடுத்துவிட்டார்கள். கடந்த 30ஆம் திகதி சென்னை வங்கி ஒன்றிலிருந்து வேறொரு கணக்குக்கு படுகணிசமான ஒரு தொகையை மாற்றும்படி ஆசிரம தரப்பு கோரி இருக்கிறது. வங்கி நிர்வாகமும் அதற்கான வேலைகளைச் செய்ய புலிப் பாய்ச்சலில் சென்னை பொலீஸ் அதனைத் தடுத்து விட்டது. 'நித்தியானந்தா மீதான வழக்குகள் நிலுவையில் இருப்பதால் எக்காரணம் கொண்டும் அவர் வங்கிக் கணக்கை மாற்றக் கூடாது' என பொலீஸ் எச்சரிக்க, வங்கி நிர்வாகமும் பின்வாங்கிவிட்டது'' என்று கூறுகிறார்கள்.

**துறந்தாலும் தொடரும் படை!**

'இனிமேல் துறவறத்தில் தனித்திருக் கப் போகிறேன்' என நித்தியானந்தா அறிவித்தாலும் நித்தியானந்தாவைச் சுற்றி எப்போதும் பாதுகாப்பு வளையம் இருக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறதாம். இதுகுறித்துச்சொல்லும் ஆசிரம எதிர்ப்பாளர்கள், ''ஆசிரமத்துக்கு நம்பிக்கையான சிலரோடு எதற்கும் அஞ்சாத ஆட்கள் சிலரும் அந்தப் பாதுகாப்பு படையில் இருக்கிறார்கள். நித்யானந்தாவின் இருப்பிடத்தை கர்நாடக பொலீஸுக்கு முன்பே தமிழக பொலீஸ் குழு கண்டுபிடித்து விட்டது. தொலைபேசி பேச்சுகள் மூலமாக அவருடைய அன்றாட நடமாட்டமும் கண்காணிக்கப்பட்டது. ஆனால், தான் இருக்கும் இடம் யாருக்கும் தெரியாது என நித்யானந்தா நினைத்துக் கொண்டிருக்கிறார். அவர் நடத்தும் பணப் பரிவர்த்தனைகள் தொடங்கி அனைத்துவிதமான நடவடிக்கைகளும் பொலீஸுக்கு அத்துப்படி. சமீபத்தில், தன்னை சந்தித்த பி.ஜே.பி. புள்ளி ஒருவரிடம் அத்தனை வழக்குகளையும் முடிவுக்கு கொண்டுவர பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார் நித்தியானந்தா. இப்போது ஆன்மிகத்துக்கு சம்பந்தமில்லாத ஆட்களோடு வலம் வரும் அவர், இன்னும் எத்தகைய சர்ச்சைகளை எல்லாம் விலைக்கு வாங்கப் போகிறாரோ?'' என்கிறார்கள்.

**தயாராகக் கடிதம்!**

ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்தே ஆசிரமப் பணிகளை நித்ய சதானந்தா தொடங்கி விட்டாராம். முதல் வேலையாகப் பல ஊர்களிலும் இருக்கும் ஆசிரம நிர்வாகிகளுக்கு அனுப்ப உருக்கமான கடிதத்தை அவர் தயார் செய்திருக்கிறாராம். அதில், ''சுவாமி, கூடிய விரைவில் திரும்பி வந்து ஆசிரமப் பொறுப்புகளை ஏற்பார். அதுவரை அவர்விட்டுச் சென்ற பணிகளை நாம் திறம்பட செய்து காட்ட வேண்டும். எப்போதும் போல ஆசிரமத் துக்கு உறுதுணையாக இருங்கள்...'' எனச் சொல்லப்பட்டிருக்கிறதாம்!

* * *


உங்கள் தேவைகளை அதி சிறந்த தரத்துடன் பூர்திசெய்ய எங்களை நாடுங்கள்

- Glass Bottles
- Caps & Closures
- Egg & Fruit Trays
- HDPE Tarpaulins
- Cotton Canvas Tarpaulins
- Cotton Canvas Tents
- Mosquito Nets
- Jute Products
- Belts
- Saws
- Galvanized Pipes
- Roller Shutter Springs
- Tea Machinery & Spares
- Rice Mill Machinery Spares



RTI

ரொஷ்னி ட்ரேட் இன்டர்நெஷனல் (பி) லிமிடட்.
23, ஆந்துல் ஹமீட் வீதி, கொழும்பு -12
தொ.பே : 011-2451700/ 2451720
தொ.நகல் : 011-2436638 மின் அஞ்சல் : roshni@slt.lk
இணையத்தளம் : www.roshnitrade.com

எதிர்பாருங்கள்! யாழ் வர்த்தக பொருட்காட்சி சந்தையில் கடை இலக்கங்கள்: B 150 / B 151



# குடும்பம் என்ற அமைப்பு மிகவும் உறுதியான அடித்தளத்தின் மேல் அமைக்கப்பட வேண்டியதாகும்

மனிதரின் குடும்ப வாழ்க்கை

குடும்பம் என்பது ஒரு மனித சமூகக் கூட்டம். அதில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் இரத்த பந்தம் அல்லது திருமண உறவுகள் என்பவைகளால் ஒன்றாக இணைக்கப்படுகின்றார்கள்.

இந்த குடும்ப பந்தம் என்பது ஒருவர் மற்றவருக்காக நிறைவேற்ற வேண்டிய கடமைகளையும் உரிமைகளையும் கொண்டதாகும்.

குடும்பத்தை பாதுகாத்தல், பராமரித்தல், ஒருவொருக்கொருவர் அன்பு பாராட்டுதல், இளைஞர்களிடம் கருணை காட்டுதல், முதியவர்களிடம் மரியாதை காட்டுதல், முதியவர்களைப் பாதுகாத்தல், குடும்பம் சுமூகமாக நடந்திடத் தேவையான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுதல் ஆகியவைகள் இந்தக் கடமைகளில் அடங்கும். இந்த குடும்ப வாழ்க்கையின் அடிப்படையாக அமைவது இரத்த பந்தங்களினால் ஏற்படும் பிணைப்பும் திருமணங்களின் மூலம் ஏற்படும் உறவுகளுமாகும்.

குடும்ப அமைப்பு நிலைத்து நிற்பது குடும்ப உறுப்பினர்களுக்கு நிலையான பாதுகாப்பை வழங்கும். அத்துடன் அதன் உறுப்பினர்களுக்கிடையில் ஒரு பிணைப்பையும் ஏற்படுத்தும்.

குடும்ப உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் உண்மையான அன்பு பாராட்டி ஒத்துழைத்திடவும் அவர்கள் தங்களது கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றிடவும் குடும்பம் என்ற அமைப்பு மிகவும் உறுதியான அடித்தளத்தின் மேல் அமைக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

மனிதன் தன் உடலில் இயற்கையாக எழும் உணர்ச்சிகளைத் தனித்திட முறையான ஒழுக்க விதிகளை பின்பற்றிடுவதே சிறந்தது.

முறையான வாழ்க்கை ஒப்பந்தங்களே ஒழுக்க நெறிகள் உடைபடாமல் உடல் திருப்திக்கு வகை செய்கின்றன.

திருமணம் ஒரு சமுதாயத் தேவையாகும். மனிதர் ஒழுக்க நெறிகளிலிருந்து பிறழ்ந்து சீரழிந்திடாமல் காத்திடுவதற்கு திருமண வாழ்க்கை ஒப்பந்துங்களே அரணாக அமைகின்றன.

ஒவ்வொருவரும் தனக்கென ஒரு குடும்பத்தை அமைத்துக் கொள்கின்ற விதத்திலேதான் தன்னுடைய வாழ்வின் போக்கை அமைத்துக் கொள்ள வேண்டும்.

ஒருவர் வாழ்வில் எடுக்கும் எல்லா முயற்சிகளும் குடும்ப அமைப்பை மனதில் கொண்டே இருந்திட வேண்டும்.

திருமணத்தின் பொருள்

திருமணம் இறுக்கமான ஒரு குடும்பப் பிணைப்பாகவே பார்க்கப்படுகின்றது. அது ஒரு வாழ்க்கை ஒப்பந்தாகும். இதனைச் சமுதாயத்துடன் வைத்துக் கொள்ளும் ஓர் ஒப்பந்தம் என்றும் கொள்ளலாம். உலக வாழ்க்கையை கண்ணியமான முறையில் வாழ்ந்திடுவதற்கும் மனித இனம் பல்கிப் பெருகிடவும் திருமணம் என்பது உன்னதமான உயர் வழியாகும்.

திருணம் என்பது தம்பதிகள் தங்களுக்குள் செய்து கொள்ளுகின்ற ஒரு வாழ்க்கை ஒப்பந்தம் மட்டுமல்ல, அது தம்பதிகள் இறைவனுடன் செய்து கொள்ளும் ஓர் ஒப்பந்தமுமாகும்.

பொறுப்புடன் வாழ விரும்புவோரின் பொறுப்புள்ள இறை உணர்வின் வெளிப்பாடாகும்.

திருமணம் என்கின்ற இந்த வாழ்க்கை ஒப்பந்தத்தின் மூலம் தம்பதிகள் உடல் நிறைவையும், உள்ளத்தின் நிறைவையும் காணலாம். அன்பின் அற்புதமும், பரிமாற்றமும் அங்கே பூரணத்துவத்தைக் காண்கின்றது.

திருமணத்தின் மூலம் மனிதர்கள் தமது இயற்கையான உணர்வுக்கு வடிகால் அமைத்துக் கொள்கின்றனர். மனதில் ஏற்படும் சபலங்கள், சலனங்கள் என்பவற்றை வென்று ஒழுக்க மாண்புகளுக்குள் நின்று மனிதன் சிறந்து வாழ்ந்திட வகை செய்வது திருமணமேயாகும்.

திருமணத்தின் மூலம் உண்டாகும் இனப் பெருக்கம் சமுதாயத்தின் தேவையாகவும் சேவையாகவும் கருதப்படலாம்.

மனிதன் தன் உடலை ஆரோக்கியத்துடன் வைத்துக் கொள்ளத் திருமணம் வகை செய்கிறது. மனிதனின் மனநிலை நல்ல ஆரோக்கியத்துடன் நிகழ்ந்திடவும் திருமணம் ஒரு அவசியமானத் தேவையாகக் கருதப்படுகிறது.

மணவாழ்க்கையும் மனக்குறைகளும்

மணவாழ்க்கையில் சில மனக்குறைகள் ஏற்பட்டு வாழ்க்கை ஒப்பந்தம் உடைகின்ற ஒரு நிலை ஏற்படுமேயானால் அந்த வேளையில் சம்பந்தப்பட்டவர்கள் தாராளத் தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

வாழ்க்கை ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அந்த ஒப்பந்தம் நீடித்திருக்கத் தேவையான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். திருமணங்கள் புனிதமானவை. அதே நேரத்தில் அவை சிறந்த ஒப்பந்தமாகும். வாழ்க்கை ஒப்பந்தங்கள் உடைக்கக் கூடாதவை. ஆனால் உடைக்க முடியாதவைகள் அல்ல. வாழ்க்கை ஒப்பந்தங்களை (திருமணங்களை) நிரந்தரமானவைகள் என்றே கொள்ள வேண்டும். ஆனால் இத்தகைய ஒப்பந்தங்கள் எதற்காக செய்து கொள்ளப்பட்டனவோ அதைப் பெற்றுத் தராதபோது அவைகளை அமைதியாகவும் கண்ணியம் குன்றாமலும் உடைத்திடுவது தவறாகாது.




உங்களது
அந்தரங்க பிரச்சினைகள் மற்றும் குடும்பப் பிரச்சினைகள், சந்தேகங்கள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார் உளநல ஆலோசகர்
ஏ.எச்.ஏ.ஹுஸைன்.

கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
A.H.A. HUSSEIN
KAYAR ROAD,
ERAVUR.
ஈமெயில் :
abdulhussein525@gmail.com

# மதுபாவனை மனித நடத்தையில் எந்தளவு பாதிப்பை ஏற்படுத்தும்?

**கேள்வி:**

நான் கிராமப்புறங்களில் பணியாற்றும் ஒருவர். எந்தக் கிராமத்திற்குச் சென்றாலும் அங்கே முதன்மைப் பிரச்சினையாகக் காணப்படுவது மதுப்பாவனை. பெரும்பாலும் ஆண்கள் தான் என்றாலும் புறநடையாக சில இடங்களில் பெண்களும் மது பாவிக்கிறார்கள். இது அந்த மக்களின் ஒட்டுமொத்த வாழ்வையே சீர்குலைத்திருக்கின்றது என்றுதான் கணிக்கத் தோன்றுகிறது. மக்களின் வாழ்வைச் சீரழிக்கும் மதுபோதைப் பழக்கத்திலிருந்து மக்களை விடுவித்தால்தான் ஏனைய அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும். எனது கேள்வி மதுபாவனை மனித நடத்தையில் எந்தளவு பாதிப்பை ஏற்படுத்தும்?

**பதில் :**

மதுவுக்கும் போதைப் பொருட்களுக்கும் அடிமையாதல் ஒரு நோய் என்று உலக சுகாதார ஸ்தாபனம் 1956 ஆம் ஆண்டளவில் கூறிவிட்டது. அமெரிக்க மருத்துவர் சங்கமும் குடிப்பழக்கம் ஒரு நோய் என்பதை ஒப்புக் கொண்டுள்ளது.

நீங்கள் பணியாற்றும் கிராமப் புறங்களில் மாத்திரமல்ல இன்று உலகிலிருக்கும் சமுதாயப் பிரச்சினைகள் பெரும்பாலானவைகளுக்குக் காரணம் மதுவேயாகும். இருக்கும் சமுதாயத் தீங்குகளில் எல்லாம் மிகவும் பரவலாகவும் பயங்கரமாகவும் இருப்பது மதுவாகும்.

இந்த உண்மையைப் புரிந்து கொள்ள, செய்தித்தாள்கள், மருத்துவ அறிக்கைகள், நீதிமன்றங்களிலே நடக்கும் வழக்குகள் இவற்றை சற்று உன்னிப்பாகக் கவனித்தால் போதுமானது.

மனிதர்கள் மதுவின் பிடியில் சிக்குண்டு மயங்கிக் கிடந்திடுவதும் மிகைத்ததொரு அவமானச்செலாகும். மது தரும் மதி மயக்கம், அதனால் ஏற்படும் இழப்புகள் ஆகியவற்றை நாம் நன்கு அறிவோம்.

மதுவரக்கன் குடும்பங்களுக்குள் புகுந்து உருக்குலைத்த குடும்பங்கள் எண்ணிக்கையில் அதிகமாகும். இந்த பழக்கத்தினால் சொத்துக்களையும், பொருளாதாரத்தையும் இழந்து ஆண்டியாகிவிட்டவர்கள் ஏராளம். பொழுதுபோக்காக இந்த பழக்கத்துக்குள் வந்து பின்னர் அதையே முழுநேர விளையாட்டாகக் கொண்டு தங்களது ஆரோக்கியங்களை அழித்துக் கொண்டவர்கள் அனேகர்.

ஒருவர் மதுவுக்கு அடிமையாகி விட்டால் மது அருந்துவதும் அதில் மூழ்கிக்கிடப்பதுமே அவர்களது வாழ்வின் குறிக்கோளாக மாறிவிடுகிறது.

குடி நோயாளிகளிடம் கீழ்காணும் அறிகுறிகள் காணப்படும்

1. உடல் கோளாறுகள்: இதயம், நுரையீரல், கல்லீரல், மூளை, நரம்பு மண்டலம், குடல், தற்காலிக ஆண்மை இழப்பு, கணையத்தில் வலி, சீரற்ற இரத்த அழுத்தம் போன்ற கோளாறுகள் உருவாகின்றன.
2. குடும்பம் சார்ந்த பிரச்சினைகள்:
பொருளாதாரமும் அமைதியும் சீர்குலைந்து வீட்டில் வறுமை குடிகொள்கிறது.
3. சமூகத்தில் மதிப்பிழத்தல்:
மதுவுக்கு அடிமையானவர் பொய் பேசுவதாலும், திருடுவதாலும், சுத்தம் சுகாதாரம் பேணாமல் இருப்பதாலும், குடித்துவிட்டு போதை தலைக்கேறிய நிலையில் கண்ட கண்ட இடங்களில் படுத்துக் கிடப்பதாலும் வன்முறையில் ஈடுபடுவதாலும் சமுதாயத்தில் மதிப்பை இழக்கிறார்.
4. சந்தேகம் சார்ந்த மனநோய் மற்றும் பொறாமை அதிகமாகும்.
5. தற்கொலை எண்ணங்கள் காணப்படும்.
6. இனம் தெரியாத பய உணர்வுகள் ஏற்படும்.
7. தொழிலில், பணியில் பாதிப்புக்கள் அதிகமாகும்.
8. குடியின் அளவு அதிகரித்துக் கொண்டே போகும்.

இவ்வாறான மனித நடத்தை மாற்றங்கள் மதுப்பாவனையால் ஏற்படும். மதுபோதை பற்றிக் கவலை கொள்ளும் உங்களுக்கு ஓர் இனிமையான செய்தியும் இருக்கிறது. இலங்கையை மதுபோதை யற்ற ஒரு நாடாக அடுத்த ஓரிரு வருடங்களில் பிரகடனப்படுத்தவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. இது உண்மையாக அமுல்படுத்தப்பட்டால் வறிய கிராமங்களில் வளர்ச்சியும் மகிழச்சியும் பொங்கும்.

**கேள்வி:**

நான் ஒரு பெண், சமூகப்பண்பாடுகளையும் விழுமியங்களையும் மதிக்கின்றவள். எனது கவலை என்னவென்றால் சமூக விழுமியங்கள் இப்பொழுது ஏன் சீர்குலைந்துள்ளன?

**பதில் :**

நாட்டில் இடம்பெற்ற ஆயுத வன்முறைகள், தற்பொழுதுள்ள இயந்திர வாழ்க்கை முறை, எல்லாம் சமுதாய உயர் விழுமியங்களையும் சீர்குலைத்து விட்டன. மனிதர்கள் வேகமாகச் சுற்றிச் சுழன்று கொண்டிருப்பதால் நின்று நிதானித்துச் செயலாற்ற நேர அவகாசமில்லை. முதியோரைக் கண்ணியப்படுத்தவும் இளையோரை எடுத்துப் பார்த்து வருடிக் கொடுக்கவும் நேரமில்லை, மனப்பாங்குமில்லை. நமக்கு உதிரத்தை பாலூட்டி சீராட்டி வளர்த்தவர்களையே வயோதிபர் இல்லங்களில் கொண்டு போய்த் தள்ளிவிட வேண்டிய நிலை. நமது நேசத்துக்குரியவரை நினைக்கும் போதே மெய் சிலிர்க்கும் தூய காதல் இப்பொழுது இல்லை. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்கின்ற தூய்மையும் புனிதமும் அற்ற உறவு முறை. பணத்துக்கும், வெளிப்பகட்டுகளுக்கும் போலிகளுக்கும் அடிமையாகும் அவசரமும் அவஸ்தையும் நிறைந்த உலக வாழ்வு. இப்படி உயர் விழுமியங்கள் உருக்குலைந்து போவதை அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆனாலும் நம்பிக்கை தரும் விடயம் உங்களைப் போன்று உயர் விழுமியங்களைக் கொண்டவர்கள் இன்னமும் உலகில் நடமாடுகிறார்கள் என்பதுதான்.

பலரின் வேண்டுகோளுக் கிணங்கி இப்பகுதியில் பிரசுரிக்கப்படும் வாசகர்களால் அனுப்பப்படும் உளவியல் சார்ந்த கேள்விகளுக்கு அவர்களின் பெயர், இடம் என்பவை குறிப்பிடப்படவில்லை.



# கொலைகாரிகளாகும் தாய்மார்கள்

பத்துமாதம் சுமந்துபெற்று பாலூட்டி சீராட்டி பத்திரமாகக் காக்கும் தாய்மார்கள் மத்தியில் தாம் பெற்ற பிள்ளைகளைத் தாமே கொலைசெய்யும் தாய்மார்களும் இல்லாமல் இல்லை. பெற்ற பிள்ளைகளைத் தாய்மாரே கொல்லும் கலாசாரம் இற்றைக்கு தென்னிலங்கையில் மிகவேகமாகப் பரவிவருகின்றது. நாளாந்தம் ஊடகங்களில் 'சிசு கழுத்து நெரித்துக் கொலை', 'மலசலகூடக் குழியில் சிசுவின் சடலம்', 'குழந்தை கழுத்தறுத்துக் கொலை' என்று செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இதில் தாய்மாரே இந்த துணிகரச் செயல்களைச் செய்கின்றனர் என்பதை ஜீரணிக்கவே முடியவில்லை.

இவை எல்லாவற்றையும் மிஞ்சும் வகையில் - ஏதோ ஒரு கழிவுப் பொருளை வீசுகின்றமை போல், களுகங்கையில் தனது மூன்று வயதுக் குழந்தையை வீசிவிட்டுச் சென்றிருந்தார் தாய் ஒருவர். அந்தக் குழந்தை கங்கையில் மிதப்பதைக் கண்ட ஒரு லொறி சாரதி ஆற்றில் குதித்து அதை மீட்டுக் கொடுத்தார். வைத்தியர்களும் அந்தக் குழந்தையின் உயிரைக் காப்பாற்றுவதற்காக இரவு பகலாக பாடுபட்டனர். ஆனால் அக்குழந்தை பத்து நாட்களின் பின் உயிரையிழந்தது.

இங்கு வேண்டியது எதுவெனில், சாதாரண ஒரு சாரதி யாரோ பெற்ற குழந்தைக்காகவே பதறிப் போய் தன்னுயிரையும் பொருட்படுத்தாது ஆற்றில் குதித்து அதனை உயிருடன் மீட்டார். ஆனால் பெற்ற தாயோ அதை வேண்டாப் பொருளாக எண்ணி கங்கையில் வீசிவிட்டுப் போய்விட்டார்.

ஐந்து குழந்தைகளைப் பெற்ற அந்தத் தாய் ஒன்றை மட்டுமே ஆற்றில் வீசியுள்ளார். அப்படியாயின் ஏனைய நான்கு பிள்ளைகளையும் இவர் என்ன செய்ய நினைத்தார். அவர்களையும் ஒவ்வொன்றாகக் கொலை செய்ய எண்ணியிருந்தாரோ? இப்படியே பிள்ளைகளைக் கொன்றுவிட்டு இவர் என்ன செய்ய நினைத்தார். கற்பனையே விபரீதமாக இருக்கின்றதல்லவா?



பிள்ளைகளை வளர்க்க வழியின்றியே இவ்வாறான முடிவுகள் எடுக்கப்படுகின்றன என சம்பந்தப்பட்ட தாய்மார்கள் கூறுகின்றனர். அவ்வாறாயின் இன்று எத்தனையோ தாய்மார் கொலைகாரிகளாகவே இருப்பர். மாறாக இன்று தாய்மார் தமது குழந்தைகளுக்காக எவ்வளவோ கஷ்டங்களைச் சுமக்கின்றனர். கூலி வேலை செய்து தமது பிள்ளைகளை வளர்க்கின்றனர்.

உதாரணமாக இலங்கையில் ஒரு குக்கிராமத்தில் எண்பது வயதுத் தாய் தனது உடல்நலம் குன்றிய பிள்ளைக்காக (அவருக்கு 50 வயதுக்கு மேல்) கூலி வேலை செய்தும், வீடுவீடாகச் சென்று பிச்சை எடுத்தும் சம்பாதித்து உணவு கொடுத்துப் பராமரிக்கிறார். இவர் தாய்!

பிள்ளைகளை வளர்க்க வழியில்லை எனக் கூறும் தாய்மார் சற்று இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளை நோக்க வேண்டும். முப்பது வருட நெடிய யுத்தத்தால் தமது ஆண் துணைகளை இழந்து பிள்ளைகளுடன் தனிமரமான தாய்மார்கள் எத்தனை பேர்? அவர்கள் தங்கள் பிள்ளைகளை வளர்க்கவில்லையா? ஒரு தாயாவது தனது பிள்ளையைக் கொல்லத் துணியவில்லையே?

இப்படியிருக்க தென்னிலங்கையில் இவ்வாறான குழந்தைக் கொலைக் கலாசாரம் பரவுவதற்குக் காரணம்என்ன? அண்மையில் அம்பலாங்கொடையில் கூட ஒரு தாய் தனது குழந்தையை ஆற்றில் வீசியிருந்தார். அதுவும் துணியை அந்தக் குழந்தையின் வாயில் அடைத்து!

இவர்களால் எப்படி இவ்வாறான செயல்களைச் செய்துவிட்டு நிம்மதியாக உறங்கமுடிகின்றது. இவர்கள் இப்படியான தவறான முடிவுகளுக்கு வர இவர்களின் முறையற்ற வாழ்க்கையும் ஒரு காரணியாக அமைகின்றது. சிலர் தவறான உறவுகள் மூலம் உருவாகும் குழந்தைகளைக் கொன்று விடத் துணிகிறார்கள். ஒவ்வொரு பெண்ணும் தவறு செய்வதற்கு முன் சிந்திக்க வேண்டும்.

அப்படியில்லாமல் இப்படியான முடிவுகளை எடுக்கும் போது வட்டத்துக்குள் இருக்க வேண்டிய அவர்களது பிரச்சினை முழு வட்டாரத்துக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகிறது.

இப்படியான நிலையில் அண்மையில் கணவனால் கைவிடப்பட்ட ஒரு தாய் தனது நான்கு பிள்ளைகளுடனும் நீதிமன்றில் தஞ்சம் புகுந்தார். இது பாராட்டத்தக்க ஒரு விடயம்.

எனவே அன்பான அம்மாக்களே! குழந்தை என்று வரும்போது அது பெண்கள் சார்ந்ததாகவே சமுதாயத்தால் நோக்கப்படுகிறது. ஆணோ பெண்ணோ தவறு இழைப்பது இயற்கை. ஆனால் ஒரு தாயாக இருப்பவள் புரியும் தவறால் அவளுடைய எதிர்காலம் மட்டுமன்றி அவளுடைய முழு குடும்பமுமே பாதிப்புக்கு உள்ளாகின்றது. கணவன் குடும்பத்தை, குழந்தைகளைக் கைவிட்டுச் சென்றாலும் தாய் கைவிடலாமா? அவர்களைக் கொல்லலாமா? பெற்ற குழந்தையாக இருந்தாலும் அதைக் கொல்ல எமக்கு உரிமையில்லை என்பதை அறியமாட்டார்களா? எத்தனை இடர்கள் வரினும் குழந்தைகளை வளர்க்க முயலுங்கள். இல்லாவிடின் உரிய சட்ட வல்லுனர்களின் உதவியை நாடி அவர்களை ஆச்சிரமங்களில் சேர்க்க வழிகோலுங்கள். மாறாக அந்தப் பூக்களை கசக்க துணியாதீர்கள். பொறுப்பற்ற தாய்மார்களே உங்கள் *உதிரங்களை தீயில் எரிக்காதீர்கள்!*

- வசி

**பெண்**

தொகுப்பு:சாந்தி

# சகோதரிகளின் பார்வைக்கு...

## காலம் கடந்த ஞானம்

நான் கொழும்பைச் சேர்ந்தவள். தற்போது எனக்கு வயது 60. நான் சாதாரண தரம் படித்துக் கொண்டிருக்கும் போது எனக்குத் திருமண வரன் கைகூடி வர பெற்றோர்கள் செய்து வைத்தனர். என்னை விட 10 வருடங்கள் மூத்தவர் என் கணவர்.

திருமணம் முடித்த கையோடு என் கணவர் வீட்டில் வாழ்க்கையை ஆரம்பித்தேன். என் கணவர் வீட்டில் மாமி, மாமா உட்பட என் வயது ஒத்த இரண்டு மைத்துனிமார்கள் இருந்தனர். என் கணவருக்கு குடி பழக்கம் இருந்தது. ஆரம்பத்தில் தொழில் ரீதியாக பல பேர்களுடன் கதைப்பதால் சிறிது எடுத்துக் கொள்கிறேன் என்றார். நாளடைவில் அதுவே அவரது நாளாந்த பழக்கமானது. திருமணம் முடித்து மூன்று மாதங்கள் எந்த வித பிரச்சினையும் இன்றி எங்களது இல்லறம் நல்லறமாக இருந்தது. பின்னர் தான் வீட்டுக்குள்ளேயே எரிமலைகள் இருப்பதை உணர்ந்தேன்.

என் கணவர் என் மீது பிரியமாக இருப்பது என் மாமிக்கும் மைத்துனிமார்களுக்கும் பிடிக்கவில்லை. எனக்கு ஒரு சேலை வாங்கி வந்தாலும் உடனே 'நாங்கள் இல்லையா எங்களுக்கு வாங்கி வர மாட்டீயோ' என்று கோபமாகவே கேட்பார்கள். இப்படிச் சின்ன சின்ன விடயங்கள் பலவற்றை ஊதி பெரிதாக்கி இருக்கிறார்கள். வீட்டில் என் கணவர் இல்லாத நேரம் எல்லாம் என்னுடன் சண்டை போடுவார்கள். நான் திரும்ப பேசினாலும் தப்பு. பேசாமல் இருந்தாலும் தப்பாகிவிடும். என் கணவர் வீட்டுக்கு வந்தவுடன் நடக்காததை எல்லாம் நடந்ததாக கூறி கண்ணீர் விடுவார்கள். ஆரம்பத்தில் ஏச்சுப் பேச்சுக்களுடன் விட்டவர், பின்னர் என்னை அடிக்கும் அளவுக்கு உருவாக்கிவிட்டார்கள். என்னுடைய 16 ஆவது வயதில் திருமணம் என்ற பந்தத்தில் நான் பட்ட துன்பம் கொஞ்சமல்ல. இவற்றுக்கு எல்லாம் தீர்வு என்பது போல் நான் கர்ப்பம் தரித்தேன். குடும்பத்தின் முதல் வாரிசு என்பதினால் எல்லோரும் என் மீது பாசம் காட்டுவார்கள் என்று எண்ணினேன்.

நான் எண்ணியது போலவே என் கணவர் என் மீது அளவு கடந்த அன்போடும் குழந்தையை பற்றிய கற்பனையோடும் இருந்தார். என்னை ராணி போல் வைத்து பார்த்தவர்கள் அவர் வேலைக்கு போன பின்னர் என்னை வேலைக்காரியை விட மோசமாக நடத்தினார்கள். இப்போது இருந்தது போல அப்போது மிக்ஸி எல்லாம் இல்லை. ஆட்டுக் கல்லும், அம்மிக்கல்லும் தான். அரைப்பது எல்லாம் அதில் தான். இப்படி எல்லா வேலைகளையும் செய்ய வைத்தார்கள்.



சொல்லில் அடங்காத அளவு துயரத்தை நான் அனுபவித்தேன். இதை வாசிக்கும் போது நீங்கள் நினைக்கலாம் ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டு அந்த குடும்பத் தில் வாழ வேண்டுமா என்று. இந்த காலத்து பெண்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள சுதந்திரம் அப்போது எங்களுக்கில்லை. பிறந்த வீட்டை விட்டால் புகுந்த வீடு. கணவன் குடும்பம் என்று தான் எங்கள் வாழ்க்கை.


நான் பல கஷ்டங்களுக்கு மத்தியில் என் குழந்தையை பிரசவித்தேன். பிறந்தது பெண் குழந்தை. என் கணவர் அளவு கடந்த மகிழ்ச்சியில் இருந்தார். என் மாமனார் அதன் பின்னர் என் கணவருக்கு புத்திமதி சொல்லி எங்களை தனி குடித்தனம் போகச் சொன்னார். தனிக் குடும்பமாக வேறொரு வாடகை வீட்டில் வசித்து வந்தோம். என் மைத்துனிமார்கள் இருவருக்கும் வரன் பேச ஆரம்பித்தார்கள். பார்க்கும் வரன் எல்லாவற்றுக்கும் குறை கூறித் தட்டிக் கழித்து வந்தனர்.

இருப்பதைக் கொண்டு வாழ எண்ணாமல் பறக்கவே ஆசைப்பட்டனர் அவர்கள். இருப்பினும் என் கணவரும் அவர்கள் விருப்பப்படி செய்வதற்கு தயாராகவே இருந்தார்.

என் மகளுக்கு மூன்றாவது ஆண்டு பிறந்த நாள் விழா வந்தது. அன்றுதான் என் மைத்துனிமார்களது உண்மையான சுயரூபத்தைக் கண்டேன். தனியாக சந்தோஷமாக நாங்கள் இருப்பதை கண்டவர்கள் என் கணவரை எந்த ளவுக்கு பேசி மாற்ற முடியுமோ அந்தளவுக்கு பேசி மீண்டும் அவர்களுடன் ஒரே வீட்டில் தங்க வரச் சொல்லி விட்டார்கள். அவரும் இணங்க என்னாலும் மறுக்க முடியாது சென்றேன். வேலை நிமித்தம் அடிக்கடி வெளிநாட்டுக்குச் செல்வார் என் கணவர். அதையே அவர்கள் தமக்குச் சாதகமாக்கி என் கணவர் வரும் போது ஏதாவது என்னைப் பற்றிய தவறான கதைகளைச் சொல்வார்கள். பொறுமைக்கும் ஒரு அளவு உண்டு. நான் அதையும் மீறி பொறுமையாகப் போனேன். என் கணவரே என்னை வீட்டை விட்டு வெளியே அனுப்பும் அளவுக்கு என் மாமியும், மைத்துனியும் வேலை செய்தார்கள். குழந்தையை சட்டபூர்வமாக அவர் எடுத்துக் கொண்டார். நான்கு ஆண்டு திருமண பந்தத்தை கடந்து என் தாய் வீட்டோடு வந்து சேர்ந்தேன்.

அவரிடம் இருந்து நான் எந்த வித ஜீவனாம்சமும் பெறாமல் என் சகோதரனின் உதவியுடன் இந்தியாவில் வாழ்ந்து வந்தேன். (எனக்கு என் கணவர், மகளுடன் எந்த தொடர்பும் இல்லை) கடந்த ஆறு மாதத்துக்கு முன்புதான் இலங்கை வந்தேன். இப்போது என் மகளுக்கு திருமணம் நடந்து விட்டது. மாமியார்களின் கொடுமைக்கு மத்தியில் வளர்ந்தாலும் இன்று மகளுக்கு கிடைத்திருக்கும் மாப்பிள்ளை தங்கமானவர். என் மகளை ராஜாத்தி போல வைத்திருக்கிறார். நான் கும்பிட்ட கடவுள் என் வாழ்க்கையை வளப்படுத்தாது விட்டாலும் என் மகளின் வாழ்க்கையை வளப்படுத்தியதுக்கு நன்றி கூறுகின்றேன். ஆனால் என்னை இப்போது கண்டு கொண்ட மைத்துனிமார்களுக்கு என் முகத்தில் விழிக்கவே முடியவில்லை. அவர்கள் செய்த பாவம் அவர்கள் இன்னும் கன்னிகளாகவே இருக்கிறார்கள். காலம் கடந்து வந்த ஞானம் இனி யார் வாழ்க்கையையும் மீட்கப்போவதில்லை.

பெயர் குறிப்பிடாத வாசகி



சுறா பட பாடல் வெளியீட்டு விழாவில்
விஜயின் மனைவி சங்கீதா, விஜய், தமன்னா...

# கின்னஸ் புத்தகத்தில் கமலின் சுயசரிதை!

கமல்ஹாசனின் சுயசரிதை கின்னஸ் சாதனைக்காக அனுப்பப்படவிருக்கிறதென்றால், ஆச்சரியமாகவிருக்கிறதா?
தமிழ் நாட்டின் ஸ்ரீவல்லிபுத்தூரைச் சேர்ந்த மணிகண்டன் என்பவர்தான் இந்த வித்தியாசமான முயற்சியை மேற்கொண்டுள்ளார்.
அவர் கமல்ஹாசனைப் பற்றி எழுதியுள்ள சுயசரிதைப் புத்தகத்தின் தலைப்பு மட்டும், 1458 எழுத்துக்களாக, 330 சொற்களுடன் இருக்கிறதாம். முன்னர் இத்தாலி நாட்டைச்
சேர்ந்தவர், தனது சுயசரிதைப் புத்தகத்திற்கு 1,443 எழுத்துக்களுடன், 290 சொற்களாகத் தலைப்பிட்டிருந்தார்.
அந்தச் சாதனையை முறியடித்துத்தான், இந்தப் புதிய சுயசரிதைப் புத்தகத்தைத் தயாரித்திருக்கிறார் மணிகண்டன்.

# ரஹ்மானுக்கு பத்ம பூசன் விருது!

இந்த ஆண்டிற்கான இந்திய மத்திய அரசின் உயரிய விருதான பத்ம பூஷன் விருதுகள் டில்லியில் வழங்கப்பட்டன. இந்த முறை இந்த விருது இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானுக்குக் குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் வழங்கியுள்ளார். அப்பல்லோ வைத்தியசாலைத் தலைவர் பிரதாப் ரெட்டி மற்றும் நோபல் பரிசுப் பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் உள்ளிட்ட 6 பேருக்கு பத்ம விபூஷன் விருதுகளை பிரதீபா பாட்டீல் வழங்கினார். இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான், ஹிந்தி நடிகர் அமீர்கான் உள்ளிட்ட 43 பேருக்கு பத்ம பூஷன் விருகளையும், தொழிலதிபர் வேணு சீனிவாசன், கிரிக்கெட் வீரர் ஷேவாக் ஆகியோருக்கு பத்ம ஸ்ரீ விருதுகளையும் பிரதீபா பாட்டீல் வழங்கினார்.



படம்-இரும்புக்கோட்டை முரட்டுச் சிங்கம்

தொகுப்பு-
எஸ்.ஜெய்

# மூக்குத்திக்கும் கிசுகிசுவா?



நான் மூக்குத்தி அணிந்திருப்பதில் எந்த ரகசியமும் இல்லை. சும்மா அழகுக்காகப் போட்டிருக்கிறேன். அதைப் போய் கிசுகிசுவாக்குகிறார்கள் என்றார் நடிகை நயன்தாரா. தன்னைச் சுற்றிய வதந்திகள், பிரபுதேவாவுடனான காதல் பற்றி சமீபத்தில் அவர் அளித்த பேட்டியில்,

''2003ஆம் ஆண்டு சினிமாவுக்கு வந்தேன். ஒரு படத்தோடு எல்லாம் முடிந்துவிடும் என்று நினைத்தேன். ஆனால், காலம் என்னை எங்கேயோ கொண்டு வந்து நிறுத்திவிட்டது. ஏகப்பட்ட பேர், புகழ்... வதந்தி! தமிழில் நடித்த 'ஆதவன்', மலையாளத்தில் நடித்த 'பொடிகார்ட்', தெலுங்கில் 'அடுர்' ஆகிய மூன்று படங்களும் அடுத்தடுத்து வெளிவந்து வெற்றிப்படங்களாக அமைந்தன. இதைவிடப் பெரிய சந்தோஷம் என்ன இருக்கு.

என்னைச் சந்திக்கிறவர்கள் மீனா, நவ்யா நாயருக்கு திருமணம் முடிந்துவிட்டது. ரம்பாவுக்கும் திருமணம் நடக்கப்போகிறது. உங்கள் திருமணம் எப்போது என்று கேட்கிறார்கள். அது நடக்கும்போது நடக்கும். எனக்கு ஒரு வேளை காதல் திருமணம் நடந்தால் அது என் அப்பா, அம்மா சம்மதத்துடன்தான் நடக்கும். சினிமா நடிகைகள் எது செய்தாலும் அது பரபரப்பான செய்தியாகி விடுகிறது. நான் மூக்கூத்தி அணிந்ததைக் கூட ஏதோ ரகசியம் இருக்கு என்று கிசுகிசுவாக்கிவிட்டார்கள். மூக்குத்தி போட்டால் நல்லா இருக்கும் என்று சொன்னதால்தான் போட்டேன். அதில் வேறு அர்த்தம் எதுவும் இல்லை.

என்னைப் பற்றி நிறைய வதந்திகள் வருகின்றன. அவற்றுக்குப் பதில் அளிக்க விருப்பம் இல்லை. ஆரம்பத்தில் இந்த வதந்திகள் என் மனதைப் பாதித்தன. இப்போது பழகிவிட்டேன். வருத்தப்படுவது இல்லை. என்னை நம்புபவர்கள் இருக்கிறார்கள். சினிமா ஒரு கிளாமர் உலகம். இங்கு வென்றால் ஆகாயத்துக்குத் தூக்குவார்கள். தோற்றால் பாதாளத்தில் தள்ளி விடுவார்கள்....''
- என்றார்.



படம்-குருசிஷ்யன்

# சூடு பிடிக்கிறது கார்த்தி–தமன்னா காதல்…!

என்பதுகளுக்குப் பிறகு தமிழ்ச் சினிமாவில் பேசப்பட்ட நட்சத்திரக் காதலர்கள் வெகு சிலர். பிரபு-குஷ்பு, ராம்கி-நிரோஷா, பார்த்திபன்-சீதா, சூரியா-ஜோதிகா என்று போடப்படும் நீர்க்கமான பட்டியலில் இப்போது கார்த்தி தமன்னா இருவரும் இடம்பிடித்து விட்டனர் எனவும், இனி இவர்களது காதலைத் தடுத்து நிறுத்த யாருமில்லை என்ற அளவுக்கு நிலைமை கை மீறிப்போய்விட்டது எனவும் கோடம்பாக்கத்து செய்திப் பட்ஷிகள் சூடான செய்தியைக் கக்குகின்றன.

'பையா' படத்துக்கான மைசூரில் நெடுஞ்சாலை அருகிலேயே உள்ள ஒரு அருவியில் படப்பிடிப்பு முடித்து மாலை கார்த்தியும் தமன்னாவும் ஒரே காரில் ஹோட்டலுக்குக் கிளம்பியவர்கள் இரவு பத்துமணிக்குத்தான் திரும்பினார்களாம்.

அத்துடன், கார்த்தியை தமன்னா மைசூரில் உள்ள தமது உறவினர் வீட்டுக்கு அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார் என நம்பகமான தகவல்கள் கிடைக்கின்றன.

இவர்களுக்குள் காதல் கெட்டிப்பட இன்னொரு சம்பவத்தையும் சொல்கிறது 'பையா' பட வட்டாரம். இங்கேதான் சூரியா ஜோதிகாவின் காதல் வந்து நிற்கிறது. சூரியா-ஜோதிகா காதலைப் பற்றிய சக்சஸ் ஸ்ரோரியை மூன்று வருடங்களுக்கு முன் 'பிலிம்பேர்' பத்திரிகையில் படித்ததை நினைவில் வைத்து 'பையா' படப்பிடிப்பில் கார்த்தியிடம் விசாரித்த தமன்னா உங்க குடும்ப ஆல்பம் பார்க்க வேண்டும் என்றாராம்.

இதோ கையிலேயே இருக்கே என்று லாப்டாப்பைப் பிரித்து கார்த்தி காட்ட,.. காதல்

மேலும் இறுகியிருக்கிறது. இந்தக் காதலின் உச்சமாகக் கார்த்தியின் வீட்டுக்கு விசிட் செய்த தமன்னா கார்த்தியின் பெற்றோரிடம் ஆசி வாங்கித் திரும்பியிருக்கிறார்.

''நம்ம விட்டுக்கு சினிமாவிலயிருந்து ஒரு மருமகள் போதுமப்பா என்று சிவ குமார் எச்சரித்துள்ளார் எனவும், அதைக் கார்த்தி காதில் போட்டுக்கொண்டதுபோல் நடித்துக்கொண்டே தமன்னாவை உயிருக்குயிராக காதல் செய்ய ஆரம்பித்திருக்கிறார் எனவும் தகவல்கள் அனல் பறக்கின்றன. பிரபல ஒளிப்பதிவாளர் சிவா இயக்கத்தில் உருவாக உள்ள 'சிறுத்தை' படத்திலும் தமன்னாவையே ஜோடியாக கார்த்தி அடம்பிடித்து போட்டுள்ளார் எனவும், இந்தப் படத்தில் காதல் இன்னும் தீவிரமாகுமென்று எதிர்பார்க்கலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# முருகதாஸ் இயக்கத்தில் சூர்யா-ஸ்ருதி!

ஸ்ருதிக்கு அவர் எதிர்பார்த்த வாய்ப்பு தமிழில் கிடைத்திருக்கிறது. வாய்ப்புக் கொடுத்திருப்பவர் ஏ.ஆர்.முருகதாஸ். ஹிந்தியில் 'லக்' படத்தில் ஹீரோயினாக அறிமுகமானார் ஸ்ருதி. படம் எதிர்பார்த்தபடி போகாதமையால் அங்கு நல்ல வாய்ப்புகள் மீண்டும் அமையவில்லை. இந்நிலையில் தெலுங்குப் படமொன்றில் சித்தார்த் ஜோடியானார். படப்பிடிப்பு நடந்து வருகிறது. எனினும், ஸ்ருதியின் கவனம் ஹிந்திப் படவுலகு மீதே இருக்கிறது. மும்பையில் தங்கி வாய்ப்புகள் தேடி வருகிறார். நல்ல கதை, சிறந்த இயக்குனர் என்றால் மொழி ஒரு பிரச்சினையில்லையாம் ஸ்ருதிக்கு. முருகதாஸ் சூர்யாவை வைத்து இயக்கும் புதிய படத்தில் சூர்யா ஜோடியாக நடிக்க ஸ்ருதியை ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். முன்னணி ஹீரோ, வெற்றிப்பட இயக்குனர்... இந்த காம்பினேஷன் பிடித்திருக்கு என்று சந்தோஷமாகச் சொல்கிறார் ஸ்ருதி.

# முன்னழகைக் கூட்ட சிகிச்சை!



முன்னழகைப் பெரிதாக்கும் சிலிக்கன் சிகிச்சை எடுத்துக் கொள்ளப் போகிறார் இலியானா என்ற ஒற்றை வரிச் செய்தி, மொத்த தெலுங்குப் பட உலகையும் ஆட வைத்துவிட்டது. உண்மையாக இருக்குமோ என்ற சந்தேகத்துடன் பலரும் அவரை நச்சரித்துவிட்டார்களாம். எல்லாருக்கும் பொதுவான ஒரு பதிலை சமீபத்தில் சென்னை நிகழ்ச்சியொன்றில் சொன்னார் இலியானா.

''எனது முன்னழகைப் பெரிதாக்கிக் காட்ட சிலிக்கன் வைத்தியத்தை எடுக்க வேண்டிய அவசியமில்லை. என்னைப் பார்த்தால் அப்படியா தெரிகிறது உங்களுக்கு? இப்போதுள்ள எனது உடல் அழகுதான் எனக்குப் பிடிக்கிறது. இது மற்றவர்களுக்கும் பிடித்தால் சந்தோஷம். இல்லா விட்டால் நான் என்ன செய்ய முடியும்? - என்றார். உங்க நேர்மை பிடிச்சிருக்கு இலியானா! உண்மை யிலேயே உங்களுக்கு ரொம்பப் பெரிதுதான்... மனசைச் சொன்னன்...!

# கவலையில் தமன்னா...!

தமன்னா தேடிப்போன போது பொலிவூட் வாய்ப்புகள் ஏதும் கிடைக்கவில்லை. ஆனால், இப்போது ஹிந்திப் பட வாய்ப்புகள் தேடிவந்த வண்ணம் உள்ளனவாம். ஆனால், தமன்னாவோ கால்ஷீட் பிஸியால் அக்கம் பக்கத்து மொழிகளில் நடிக்க முடியாமல் தவியாய்த் தவிக்கிறார். ஹரி இயக்கத்தில் தனுஷுக்கு ஜோடியாக நடிக்கும் படம், சுப்ரமணியம் சிவாவின் இயக்கத்தில் ஒரு படம் என இரண்டு படங்களில் நடிக்கவிருக்கிறார் தமன்னா. இந்தப் படங்கள் முடியவே ஒரு வருடம் ஆகும். அதற்குள் எப்படி ஹிந்தியில் நடிப்பதாம். தமன்னாவின் கவலையும் இப்போதைக்கு இதுதான். ஆனாலும் என்ன... பொலிவூட்டை விட அதிகமாகத்தான் தமிழ் சினிமா கொட்டிக் கொடுக்குதே...!



படம்-தில்லாலங்கடி

# கவிதைப் புனல்

## குறிஞ்சிச் சோதரிக்கு

கந்தர்ப்பர் கடையில்
கலர் டீ.வி. பார்த்து
குறிஞ்சிப் பரல்களில்
குத்துக் கரணம் போட்டு
கும்மாள மடிக்கும்
மலைச் சிறார்களின் மகிழ்ச்சியில்
எத்தனை ஆனந்தம்...!

நெஞ்சினில் ஆயிரம்
ஆதங்க மிருக்கலாம்
எங்கள் மலையகத்தில்
படர் கூந்தல் உண்டு
'பொப் கட்டிங்' இல்லை
கறுப்புத் தோல்களுக்குள்
வெள்ளை மனசுகள் உண்டு..!

தேயிலைக் கொழுந்தின்
தேன் துளிர் போல
தேனாய் இனிக்கும்
மலையகத் திண்ணைகளில்
மின் விளக்கு ஒளிராவிட்டலும்
மிதமிஞ்சிய பாசம்
உண்டல்லோ...!

குறிஞ்சிச் சோதரியே
எதற்குநீ கவலைப்பட வேண்டும்...?
கலர் டீ.வி களும்
கட்டில் மெத்தைகளும்
வாழ்க்கை யல்ல
கனிவான அன்பு
நம்மிடம் இருக்கு....

வீண் பகட்டெல்லாம்
எம் லயத் தூண்களின் லயிப்பில்
நொறுங்கிப் போய்விடும் சோதரி,
நரகத்தில் வீழ்ந்து போகும்
நாகரிகம் நமக்கு வேண்டாம்..!

குறிஞ்சித் தென்றலை
குதூலகலம் விசாரிப்போம்
காலமகளின் பரிவுத் தேடலில்
மலையக பூமி மாண்பு பெறும்
மகத்தான நாள் வெகு தூரமில்லை

-எஸ்.ஜனூஸ்-

## எங்கே என் தாய் நாடு?

எங்கோ பிறந்தேன்
பிறந்த இடம் தாய் நாடா?
சொந்தம் இழந்தேன்
இழந்த இடம் தாய் நாடா?
தாயை பிரிந்தேன்
பிரிந்த இடம் தாய் நாடா?
அகதியாய் அலைந்தேன்
அலைந்த இடம் தாய் நாடா?
உரிமை தொலைத்தேன்
தொலைத்த இடம் தாய் நாடா?
பசியால் துடித்தேன்
தவித்த இடம் தாய் நாடா?
கவலைகள் அடைந்தேன்
அடைந்த இடம் தாய் நாடா?
நினைவுகள் யாவும்
வெறும் கனவுகளால் சூழ
தேடுகிறேன்- தேடுகிறேன்
எது என் தாய் நாடு?

-ந.தமிழ்செல்வன்-
நுவரெலியா

## தூய நற்செய்தி

கொடியவர் கரம்பட்டு
கொலுசுகள் உடைபட்டு
கொன்றாலும் உனை மறவேன்-முகம்
கொஞ்சியே தழுவி யணைப்பேன்!

அடிக்குமேல் அடிபோட்டு
அரைத்துனைப் போட்டாலும்
ஆராரோ தாலாட்டுவேன்-யானும்
அன்பே உன் அருகிருப்பேன்!

குடி கெட்டுப் போனாலும்
குற்றுயிர் ஆனாலும்
கும்பிட்டு உனைப் பாடுவேன்-உன்
குலம் வாழ நீர் ஊற்றுவேன்!

வன் பகைவர் உன்னை
வலியிட்டுப் புதைத்தாலும்
வாழைபோல் மீண்டு மீண்டு-நீ
வளரநான் உரமாகுவேன்!

இன்பமாய் இயலாக
இசையாக இருப்பாளே
இனி 'தமிழ் கன்னியாளே'-என்
இதயத்தின் நாத மவளே!

துன்பங்கள் உனக்கில்லை
துடை உந்தன் விழிதன்னை
துயர் நீக்கும் காலம் வருமே
தூய நற் செய்தி தருமே!

-மானியூர் ரட்ணேஸ்-

## வண்ண மலர்கள் நாம் அன்றோ?

மனிதப் பிறவி நன்றெனவே
மண்ணிற் கூறும் மனிதர்காள்!
புனிதப் பிறவி எம்மதுபோல்
புவியில் வேரும் உளதாமோ?

ஆண்டு நூறு நீர் வாழ்ந்தும்
அவனி மீதில் என்கண்டீர்?
ஈண்டோர் நாளே வாழ்ந்தாலும்
இறைவன் பாதம் சேர்கின்றோம்!

மதுவை நாங்கள் கொடுத்தறிவோம்
மதுவை நாங்கள் குடித்தறியோம்
புதுமை பழமை இரண்டையுமே
புவியில் விரும்ப நாம்செய்வோம்!

எங்கள் நிறங்கள் எத்தனையோ
எங்கள் வடிவம் எத்தனையோ
எங்கள் வாசம் எத்தனையோ
எனினும் சாதி பேதமிலோம்!

தனித்து மலராய் அழகு செய்வோம்
சேர்ந்தே மாலை வடிவுகொள்வோம்
இனித்த தேனைத் தந்துலகோர்
இடர்செய் நோய்கள் நீக்கிடுவோம்!

-புலவர் ம. பார்வதி நாதசிவம்-

## சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம்

### கண்ணீர்!

கண்டிமா நகரில் பொல்லா
காடையர் தொல்லை; பல்லோர்
கொண்டபல் பொருள்கள், காசை
கொள்ளையர் பறிப்பு; அந்தோ
பெண்களின் நகைகள் கூட
பிய்த்தங்கு எடுப்பு; கண்ணீர்!
விண்டவச் செய்தி கேட்டு
வேதனை யுற்றேன் அன்னாள்!

மாணிக்கக் கற்கள் என்பார்
மாதிரிக் கற்கள்; இந்த
பாணியில் கறந்து காசை
பறந்தெங்கோ மறைவார்; கள்ளத்
தோணிகள் என்பார்; பற்கள்
தெரியவே இளிப்பார்; துன்பக்
கேணிக்குள் எங்கள் மக்கள்
துயர்தரும் கதைகள் நூறு!

கண்டியில் ரயிலில் ஏற
கருக்கலில் மீள்வர்; ஆங்கு
வண்டியைப் பார்த்துக் காத்து
வாங்குகள், தரையில் சாய்வர்!
கண்ணயர் வேளை பார்த்து
கள்வர்கள் வந்து மெல்ல
அண்டையில் படுப்பர்; பின்னர்
அகப்பட்ட தோடு செல்வர்!

சுருண்டவர் ரயிலில்; கூட்டம்!
வழிகளில் சாய்வர்; தூக்கம்!
இருண்டுள்ள பெட்டி; ஆங்கு
இருள்மாய்க்கும் குமிழ்கள் தூக்கம்!
மருண்டுபின் எழுவர்; காசு
மறைவங்கு; பொதிகள் மாயம்
உருண்டவந் நாட்கள் இன்னும்
உலுக்கிடும் நெஞ்சை கேண்மின்!

(தொடரும்)

-கவிஞர் ஸி.எஸ். காந்தி-



## அன்னை ஓர் ஆலயம்!

அன்னை என்பவள் கோவிலடா-அவள்
மனமே என்றும் தெய்வமடா
அன்பால் ஆன உருவமடா-அதைப்
பேணுதல் எமது கடமையெடா!

பெண்ணின் பெருமை தாய்மையெடா-அந்த
தாயின் உள்ளம் தூய்மையெடா-அவள்
வாயில் வருவது வாய்மையடா-இதை
உணர்வது எமது கடமையெடா!

துளியாய் எம்மை ஏற்று நின்று
தூயநல் உடம்பில் வளர்த்திருந்தாள்
உயிரை உடலில் புகுத்தி நின்று
உலகில் படைத்து உவகை யுற்றாள்!

பத்தியம் பலவும் பார்த்திருந்தாள்
பண்பாய் எம்மை வளர்த்திருந்தாள்
பள்ளிக்குச் செல்ல வைத்திருந்தாள்
பாரினில் எம்மை உயர்த்தி வைத்தாள்!

எத்தனை வயதே ஆனாலும்
எவ்வகைத் துன்பம் வந்தாலும்
அருகினில் இருந்து அரவணைத்து
ஆறுதல் பலவும் தந்திடுவாள்!

உலகைப் படைத்தவன் இறைவனென்றால்
மனிதரைப் படைத்தவள் அன்னையன்றோ?
உலகினில் தெய்வம் இறைவனென்றால்
மனிதரில் தெய்வம் அன்னையன்றோ?

தாய்மையின் குலமே பெண்களடா
அந்த பெண்களை நீயும் பேணிட்டா!
சீதனக் கொடுமை நீ ஒழித்து
சீரான வாழ்வைக் கொடுத்திடடா!

-இ.சி.தெட்சணாமூர்த்தி-

## வீதி செய்வோம்


பெற்ற பெரும் பேறாம் நல்லறிவைப்
பேணிக் காத்து
கற்றறிந்தோர் உண்மைகளைக்
கருத்தாய்ச் சேர்த்து
நற்றவத்தார் நவின்ற மொழி
நலமாய்க் கொண்டு
உற்றதொரு முறையினிலே புது
நற்சமுதாயம் நாம் படைப்போம்!

எத்தனை ஆயிரம் பேதங்கள்
இழிவுகள் நமக்குள்ளே
அத்தனையு மிவை நமையரிக்கும்
அழிவுக் கூடமாம்
நித்தமொளி பரப்புமிள ஞாயிறதுபோல்
கற்ற அறிவொளி கொடுப்போம்
புத்தம்புது மலரெனவே மணம்பரப்பும்
நற்சமுதாயம் நாம் படைப்போம்!

எழுகின்ற இளம் பரிதிகண்டு
இருள் அகலல் போல்
உழுவெடுத்த சமுதாய ஊறுகளை
உடைத் தெறிந்திடுவோம்
ஒழுக்கஞ் சேர் வாழ்வதனால்
விழுப்பங் கொள்வோம்
பழுதற்ற சமூகம் நாம் காணவே
நற் சமுதாயம் நாம் படைப்போம்!!

-அபிராஜன்-

# மணிமேகலை ஏன் துறவு பூண்டாள்



இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி என்று சொல்வார்கள். அந்த வகையில் சிலம்பதிகாரமும் மணிமேகலையும் விதிவிலக்கல்ல, இந்த இரட்டைக் காப்பியங்களின் காலம் ஒரு நெருக்கடியான காலமாக இருந்துள்ளது. பண்டைத் தமிழகத்தில் கடற்கரை நகரங்களில் வணிகச் சூழலில் செழித்து வளர்ந்தது கணிகையர் கலாசாரம்.

இந்திர விழாவிலே மாதவியின் நாட்டியத்தையும் அவள் அழகையும் கண்டு மயங்கிய கோவலன் அவளை விரும்பி அவளுடன் சிறிது காலம் வாழ்ந்ததன் பயனாகக் மாதவி மணிமேகலையைப் பெற்றெடுக்கிறாள். கோவலன் கொலையுண்ட செய்தி கேட்டு அதிர்சியுற்ற மாதவி அவனை நினைத்து வாழத் தலைப்பட்டாள் இந்திரவிழாவிலே ஆடுவதையும் நிறுத்திக் கொண்டாள்.

மணிமேகலை அற்புதமான பெண் மாதவி அழகிலும் கலையிலும் சிறந்து விளங்கியது போல மணிமேகலையோ பெற்ற தாயையும் விஞ்சி நின்றாள். அவள் கடைக்கண் படாதா என ஏங்காதவர்களே இல்லை. அவள் நடனம் ஆடத் தொடங்கினால் பார்ப்பவர் கண் இமைக்க மறந்துவிடுவார்கள். சலசலப்புகள் மறைந்துவிடும் மணிமேகலை ஆடத் தொடங்கினால் எதிரே இருப்பவர்கள் சிலையாகி விடுவார்கள். அவளோ தென்றல்; ஆடத்தொடங்கினால் புயல் இப்படிப்பட்டவள் இப்பொழுதெல்லாம் ஆடுவதே இல்லை. தாய் மாதவியின் வழிநின்றி மணிமேகலையும் இந்திர விழாவில் ஆடவில்லை.

மாதவியின் அன்னை சித்திராபதி கணிகையர் குலத்தவள். கணிகையர் குலத்தவர் செல்வாக்கு மிக்கவர்களைத் தங்கள் வசப்படுத்துவர். அவர்களின் செல்வங்களைப் பெற்றுக்கொள்வர்கள் இதுவே அவர்களின் தொழில். சமுதாயம் அப்படி அவர்களை ஆக்கிவைத்து விட்டது. சித்திராபதிக்குத் தன் குலத் தொழிலை விட விருப்பமில்லை. அதை விட்டுவிட்டால் தன்னால் வாழ முடியாது என்று நினைத்தாள். குலத் தொழிலை விடுதல் பாவம் என்றும் நினைத்தாள் கற்புடன் இல்லாமல் தீய ஒழுக்கத்தில் பெண்கள் செல்வது பாவம் என்று அவளுக்குத் தெரியவில்லை. பரம்பரைத் தொழில் என்பதிலேயே அவள் ஊறி நின்றாள். மாதவியின் தோழி வயத்த மாலையை தூது அனுப்பினால்.''மணிமேகலை எப்பொழுதும் கணிகைத் தொழிலைச் செய்ய மாட்டாள்'' என்று கூறி திருப்பி அனுப்பிவிட்டாள்.




பெண்ணின் தன்னிலை உருவாக்கம் என்பது குறிப்பிட்ட ஒரு சமூகக் கருத்தியல் அமைப்புக்குப் பெண்ணை ஆட்படுத்துவது ஆகும். அவள் அப்படி ஆட்படுத்தப்படுவதோடு, அது அவளது சொந்த இயல்பான இருப்பு என நம்ப வைக்கப்படுகிறாள். இதிலிருந்து விடுபட வேண்டும் என்ற மனப்போக்கு மாதவியிடம் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இளவரசன் உதயகுமாரன் மணிமேகலையின் மேல் மையல் கொண்டான். அவளையே அடைய வேண்டும் என்று அவள் போகும் இடங்களுக்கெல்லாம் அவனும் சென்றான். தனது தோழி சுதமதியுடன் மலர் பறிப்பதற்காக உவவனத்திற்குச் சென்ற மணிமேகலையை அங்கும் உதயகுமாரன் தேடி வந்தான். உடனே விரைவாக மணிமேகலை மறைந்தாள்.

நாட்டை ஆளும் ''அரசகுமாரன் கணிகையர் குலப்பெண்ணை விரும்பலாமா என்று தோழி சுதமதி உதயகுமாரனுக்கு அறிவுரை சொன்னாள். ஆனால், ''எப்படியாவது மணிமேகலையை அடைந்தே தீருவேன்'' என்று உதயகுமாரன் சபதம் செய்தான். காதல் வயப்பட்ட உதயகுமாரன் மணிமேகலை யின் நினைவாகவே இருந்தான். இந்த காதல் விடயத்தை நன்றாகத் தெரிந்திருந்த மணிமேகலை, இது நடந்தேற முடியாத ஒரு முயற்சி என்பதை நன்கு புரிந்து கொண்டாள்.

கோவலனும் கண்ணகியும் இறந்த பிறகு மாதவி துறவியானாள். கோவலனைத் தவிர யாரையுமே நினைப்பதில்லை. தன் கணிகையர் தொழிலை வெறுத்தாள். தன் மகள் மணிமேகலையை கண்ணகியின் மகளாகவே கருதி வளர்த்தாள்.

மாதவியின் மகள் மணிமேகலையை உதயகுமாரன் விரும்பினான் என்பதை ஊரில் பலரும் அறிந்திருந்தனர். மணிமேகலை பௌத்த மதத்தைத் தழுவித் துறவறம் பூண்டாள். இதை அறிந்த உதயகுமாரன் மணிமேகலையைக் கண்டான்; அருகில் சென்றான். முற்பிறப்பில் உதயகுமாரனே தன் கணவன் என்று அவளுக்குத் தெரியும் (இது சீத்தலைச் சாத்தனாரின் கற்பனை). ஆதலால், அவனை வணங்கினாள். உதயகுமாரன் அவளைப் பார்த்தான். ''ஏன் தவக் கோலம் கொண்டாய்? என்று கேட்டான். அதற்கு மணிமேகலை ''இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது; இந்த உடம்பு துன்பத்தின் இருப்பிடம் என்று அறிந்தேன்; துறவியானேன்!'' என்றாள்.

உதயகுமாரன் மணிமேகலை இருக்கும் இடத்திற்குத் தேடிச் செல்லத் தொடங்கினான். ஒரு நாள் இரவு மணிமேகலையைத் தேடி சம்பாபதி கோயிலுக்குள் சென்றபோது, காஞ்சனன் என்பவனால் வாளால் வெட்டப்பட்டு உதயகுமாரன் பிணம் ஆனான். உதயகுமாரன் வெட்டுண்டு கிடந்த இடத்திற்கு மணிமேகலைச் சென்றாள். பழைய பிறப்பின் தொடர்பால் அவனைப் பார்த்துப் புலம்பினாள்.

மணிமேகலை துறவு மேற்கொண்டாள் என்ற செய்தியும் மணிமேகலைக் காப்பியத்தில் இடம் பெற்றுள்ள அவளது பிற செயற்பாடுகள் பற்றிய தகவல்களும் பண்டைத் தமிழகத்தில் குடும்பம் என்னும் நிறுவனம் நெருக்கடிக்குள்ளானதையே குறித்து நிற்பதாக உணரமுடிகிறது. மணிமேகலை பௌத்த மதம் சார்ந்து பௌத்த பிக்குணியாக மாறுகிறாள். அவள் கணிகையர் குலத்தில் பிறந்ததால், அக்குலத்திற்கு விதிக்கப்பட்ட வாழ்க்கை முறையை ஏற்காததால், அந்நாளைய சமூகம் அவளைக் குடும்ப வாழ்க்கை வாழ அனுமதிக்கவில்லை. (அவளைக் காதலித்த உதயகுமாரன் மீது அவளுக்கு விருப்பம் இருந்தது) மணிமேகலை துறவறம் மேற்கொண்டாள் என்ற செய்தியும் குடும்பம் பற்றிய ஒரு விமர்சனமாகவே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

பண்டைத் தமிழகத்தில் வணிகக் கலாசாரத்தின் நெருக்கடியோடு சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய காப்பியங்களின் கதை இல்லறத்திலிருந்து துறவு நோக்கி நகருவதும் நெருக்கடியின் குறியீடாகவே தோன்றுகின்றது. கதைச் சம்பவங்கள் சமூக நெருக்கடியை மட்டுமல்லாமல், உருவாகிவந்த தமிழ்க் குடும்பம் அன்றைய காலகட்டத்தில் ஒரு நெருக்கடியைச் சந்தித்ததையும் சுட்டிக்காட்டுகின்றன.

*

# நாடகாசிரியர் கிரீஷ்கர்னாட் வழங்கிய உலகச் செய்தி:

உலக நாடக நிறுவனம் ஆண்டுதோறும் உலகதரத்தில் நிகரற்று விளங்கும் நாடக ஆளுமை கொண்ட மிகச் சிறந்த நாடகாசிரியர் ஒருவரிடமிருந்து பெறப்பெற்ற செய்தியை உலக நாடக நாளில் (மார்ச்-27) உலகச் செய்தியாக அறிவிக்கிறது. அந்த வகையில் 2002ஆம் ஆண்டுக்கான உலக நாடகச் செய்தியை வழங்கியவர் தலைசிறந்த இந்திய நவீன நாடகாசிரியர்களுள் ஒருவரான கிரீஷ்கர்னாட் ஆவார்.

''உலகின் தொன்மையான நாடகம் பற்றிய நூல்களில் ஒன்று 'நாட்டிய சாஸ்திரம்!' மிகவும் குறைத்துக் கருதினாலும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைத் தொடுகிறது இதன் காலம்! இதன் முதல் இயல், நாடகம் பிறந்த கதையைக் கூறுகிறது. ஒழுக்கச் சீர்குலைவில் உலகம் முழுகிக் கொண்டிருந்த காலம் அது! மக்கள் மிருகத்தனமான உணர்வுகளுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தனர். மனித சமூகத்தை மேன்மைப்படுத்த (கண்களுக்கும் காதுகளுக்கும் இனிமை பயந்து மனோபலத்தைத் தரத்தக்க) ஒரு புதிய வழி தேவைப்பட்டது. ஆகவே படைத்தல் தொழிலின் கர்த்தாவான பிரம்மா நான்கு வேதங்களின் கூறுகளையும் இணைத்து ஐந்தாவது வேதமாக நாட்டிய வேதத்தை உருவாக்கினார். ஆனால், கடவுள்கள் நாடகப்பயிற்சி பெற்ற விற்பன்னர்களாக இல்லாத காரணத்தால் புதிய வேதத்தை உருவாக்கும் பொறுப்பு மனிதராகிய பரதரின் தலைமேல் சுமத்தப்பட்டது. பரதர் தன்னுடைய நூறு புதல்வர்களின் உதவியைக் கொண்டும் பிரம்மனால் அனுப்பப்பட்ட சில தேவலோக நடன மாதர்களைக் கொண்டும் முதல் நாடகத்தை அரங்கேற்றினார். புதிய கலையின் வெளிப்பாட்டுக் கூறுகளின் சாத்தியப்பாடுகளை விரிவு படுத்துவதற்குக் கடவுளர்கள் அனைவரும் ஆர்வம் கொண்டிருந்தனர்.

பரதர் வழங்கிய நாடகம் கடவுளர்களுக்கும் அசுரர்களுக்கும் ஏற்பட்ட மோதலின் வரலாற்றைச் சொல்வதாகவும், மோதலில் வெற்றிபெற்ற கடவுளர்களின் புகழைப் போற்றுவதாகவும் இருந்தது. நாடகம் கடவுளர்களையும், மனிதர்களையும் மகிழ்ச்சிப் படுத்தியது. ஆனால், பார்வையாளர்களாய் இருந்த அசுரர்கள் இதனால் ஆழமான மன வேதனைக்கு ஆளானார்கள்! அதனால் அசுரர்கள் தங்களின் அதீத சக்தியைப் பயன்படுத்தி நடிகர்களைப் பேச முடியாமலும் நகர முடியாமலும் நினைவை மறக்கச் செய்யும் நாடக நிகழ்வைத் தடுத்து நிறுத்தினர். அதற்கான பதிலடியாகக் கடவுள்கள் அசுரர்களைத் தாக்கி, அவர்களில் பலரை கொன்று அழித்தனர். உறுப்புகளைத் துண்டாடியது தொடர்ந்தது! ஆகவே, உலகை படைத்த பிரம்மா அசுரர்களைச் சந்தித்துப் பேசினார். 'நாடகம் என்பது மூன்று உலகங்களின் நிலைமையையும் பிரதிநிதித்துவப் படுத்துவது' என்று விளக்கினார். அதாவது 'நாடகமானது வாழ்வின் ஒழுக்கக் குறிக்கோள்களை - ஆன்மீகம், சார்பின்மை மற்றும் புத்துணர்வு ஆகியவற்றின் இன்ப துன்பங்களை - தன்னுடன் இணைத்துக் கொண்டிருக்கிறது' என்றும் 'அதில் கிடைக்காத ஞானம் எதுவுமில்லை; அதில் காணப்படாத கலை எதுவுமில்லை; அதில் இல்லாத உணர்ச்சி எதுவுமில்லை' என்றும் விளக்கினார். பிரம்மா பரதரை அணுகி நாடகத்தைத் தொடர்ந்து நிகழ்த்தச் சொன்னார். நிறுத்தப்பட்ட நாடகத்தின் இரண்டாவது நிகழ்ச்சியின் வெற்றியைப் பற்றி நமக்கு எதுவும் சொல்லப்படவில்லை! இந்த இயலைப் பற்றி விமர்சிக்கும் அறிஞர்கள், இத்தொன்மமானது அசுரர்களை இழிவுபடுத்துவதாக உள்ளதெனத் தாமாகவே கூறிச் செல்கின்றார்கள். நாடகத்தின் உண்மை இயல்பை அவர்கள் முழுமையாக புரிந்திருக்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.

பிரம்மாவின் நாடகம் பற்றிய கருத்தாடலே இத்தொன்மத்தின் சாரமாகும். அத்தொன்மத்தை முழுமையும் தவறாக புரிந்து கொண்டதால் இக்கருத்து வந்துள்ளது என்று எனக்குப் படுகிறது. உண்மையில் அசுரர்கள் (கடவுள்கள் போலன்றி) உடல் ரீதியான வன்முறைகளில் இறங்கியிருக்கவில்லை. ஆயின் நடிகர்களின் பேச்சு, நகர்வு, நினைவு ஆகியவற்றை மட்டுமே தாக்கி நாடகத்தை நிறுத்தியிருப்பது, நாடகத்தின் நுண்ணிய கூறுகளை, நினைவில் கொள்ளத் தகும் விதத்தில் அசுரர்கள் உள்வாங்கிக் கொண்டிருப்பதை அது நமக்குக் காட்டுகிறது. இக்கருத்துக்குத் துணை சேர்க்கும் விதமாக, நாடகத் தயாரிப்பின் கலை உத்திகளை நமக்கு அறிவுறுத்துவதற்காக எழுதப்பட்ட இந்த புனித நூல், மனித வரலாற்றில் நிகழ்த்தப்பட்ட முதல் நாடகம் பற்றிப் பேசுகிறது! உலகைப் படைத்த பிரம்மா மற்றைய கடவுள்களுடனும், தேவமாதர்களுடனும், பயிற்சிபெற்ற நடிகர்களுடனும் தானும் கலந்து இத்தயாரிப்பில் முழுமையாக ஈடுபட்டிருந்தார். அந்த நிலையில் இதன் விளைவு மாபெரும் வெற்றியாக இருந்திருக்க வேண்டும்! மறுதலையாக மாபெரும் அழிவு நிகழ்ந்ததாக நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அறிஞர்கள் பார்க்க தவறியிருக்கிற வெளிப்படையான கருத்து ஒன்று உள்ளது. அதனால் அவர்கள் மனபுழுக்கம் கொள்ளச் சாத்தியம் உண்டு. நிச்சயமாக இந்த உள்ளார்த்தங்கள், நாடகத்தின் முக்கிய நோக்கம் பார்வையாளரை வெளி உலகத்தினின்றும் பிரித்து, மகிழ்வு மனநிலையை பங்கிட்டுக் கொள்கின்ற வசதி கொண்டிருக்கிறது என்னும் பிற்காலத்திய இந்திய அழகியலை வெளிப்படையாக மறுக்கின்றன. இத்தொன்மம், பிரம்மாவின் சாந்தப்படுத்தும் கருத்துக்கள் சொல்லியிராததான, 'ஒவ்வொரு நாடக நிகழ்ச்சியும் மிகக் கவனத்தோடு வடிவமைத்த போதும் சிதிலமடைந்து போகின்ற தோல்வியையும், அதன் காரணமாக எழுகின்ற வன்முறைகளையும் தனக்குள் சுமந்து கொண்டிருக்கிறது' என்றும் நாடகத்தின் அடிப்படை குணாம்சத்தைக் குறிப்பதாகவே எனக்குப்படுகிறது.

நாடக நிகழ்விற்குத் தேவைபடுகிற மிகக் குறைந்த மனிதர்களில் ஒருவர் நிகழத்துபவர் (தன்னை இன்னொருவருக்குள் மறைத்துக் கொண்டிருப்பவர்). இன்னொருவர் அதைப் பார்ப்பவர்! இந்தச் சூழல் ஏற்கனவே நிலைமாற்றத்துடன் தோய்ந்திருக்கிறது. இப்போதிருப்பது போல் இத்தனை வகையாக நாடகம் உலகத்தில் வேறெப்போதும் இருந்ததில்லை. வானொலி, திரைப்படங்கள், தொலைக்காட்சி, வீடியோ ஆகியவை நாடகத்தோடு நம்மை எதிர்கொள்கின்றன. ஆயின் இந்த வடிவங்கள் அனைத்திலும் (பார்வையாளரின் பொழுதைத் தன் வயப்படுத்த முடிந்தாலும், அல்லது பார்வையாளரைக் கோபமூட்ட முடிந்தாலும்) பார்ப்பவரின் எதிர்வினையானது அக்கலைப் படைப்பு நிகழவின்போது எவ்வித மாற்றத்தையும் செய்ய முடியாது!

முதல் நாடக நிகழ்வு என்னும் தொன்மமானது, நாடகத்தில் நாடகாசிரியர், நிகழ்த்துனர்கள், பார்வையாளர் ஆகியோர் இடையீடற்ற தொடர்முழுமையை உருவாக்குகின்றனர் என்பதைக் குறிக்கின்றது. ஆயின் இத்தொடர் முழுமை எப்பொழுதும் நிலையற்றிருக்கும். அதன் காரணமாகவே அது வெடித்துக் கிளம்பும் வீரியம் கொண்டிருக்கும். அதனாலேயே நாடகத்தை மிகவும் பாதுகாப்பாக சிரமமின்றி விட்டேத்தியாக நிகழ்த முயல்கையில், அதனுடைய சொந்த சாப்பறையை விரலதிர அதுவே அடித்துக் கொண்டிருக்கிறது என்பதாகிறது. இதற்கு மறுதலையாக அதன் எதிர்காலம் எப்பொழுதும் பிரகாசமாயில்லாவிடினும், அதன் காரணமாகவே வாழ்வதற்காகவும் கோபமூட்டுவதற்காகவும் நாடகம் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கும்.''

உலக நாடக நாளிற்கான கிரீஷ்கர்னாட் அவர்களின் உலகச் செய்தி இதுதான்!

குறுங்கதை

# வடக்கும் கிழக்கும்



வந்திருப்பவர்களோடு கிழவர் பேசுவதைக் கேட்கக் கேட்க அவளுக்கு யாரோ வயிற்றில் நெருப்பை அள்ளிக் கொட்டுவது போல இருக்கிறது.

''இந்த வயசிலை இந்த மனிசனுக்கு ஏனிந்த வம்பு? எந்தப் புற்றிலை எந்தப் பாம்பு இருக்குமோ? இவர் சும்மா வாயைக் குடுக்கிறதாலை எங்கடை இளம் பிள்ளைகளுக்கு என்னென்ன பாதிப்பு ஏற்படுமோ?'' என அங்கலாய்த்தவாறும் ''அம்பாளாச்சி நீதான்....'' என்று கையெடுத்தவாறும் குசினிக்குள் இருந்தவாறே தனது கணவனின் கவனத்தை ஈர்க்கப் பெரும் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கின்றாள் கிழவி.

கிழவர் அவளது சைகைகளைக் கவனிக்க வில்லையோ அல்லது பொருட்படுத்த வில்லையோ தெரியவில்லை. அவர் முழுமூச்சுடன், வந்திருப்பவர்களைத் தனது கேள்விக்கணைகளால் திணறடிக்க முயன்று கொண்டிருக்கிறார்.

தேர்தல் காலம்; வேட்பாளர்கள் தமது சாகாக்களுடன் வீடு வீடாக வளைய வரும் சமயம் கிழவரின் கையில் தயாராக எப்பொழுதும் இரண்டு கேள்விகள் இருக்கும் (1) இனப்பிரச்சினைக்கான உங்களின் அல்லது நீங்கள் சார்ந்திருப்பவர்களின் தீர்வுத் திட்டம் என்ன? (2) வடக்குக் கிழக்கு இணைப்புப் பற்றிய உங்கள் நிலைப்பாடு என்ன?

வேட்பாளர்களின் மழுப்பல்களுக்கெல்லாம் கிழவர் எளிதில் மசிந்து கொடுப்பதில்லை. கேள்விகள் தொடரும். வாக்குவாதங்கள் அதிகரிக்கும். அது கண்டு கிழவியின் இரத்த அழுத்தம் கிடுகிடுவென உயரும். அவளுக்கு இரவில் தூக்கம் வராது. சிறிது சரசரப்புக் கேட்டாலும் யாரும் குண்டுகிண்டு வீச வந்திருக்கிறார்களோ என்ற அச்சத்தில் அவளது நெஞ்சு படபடக்கும். கிழவர் எவ்வித கவலையுமின்றி அயர்ந்து குறட்டை விட்டுத் துங்குவார்.

அவரது குறட்டையையே சங்கீதமாக நினைத்து நித்திரையில் ஆழ்ந்து பழகி விட்டவள் அவள். ஆனால் இப்பொழுதெல்லாம் அவரது குறட்டை ஒலி தூக்கத்தைத் தொலைத்த அவளது காதுகளில் நாராசமாக இறங்குகிறது. இளமை கொழித்த அந்த மனோகரமான நாட்களில் அவருக்காக வீட்டுக்காரரோடு போராடிக் காத்திருந்து அவளது விவாகம் தாமதமாகிப் போனதால் காலங்கடந்து தாயாகி இப்பொழுது வாலிப வயதான அவளது பிள்ளைகளுக்கு எதுவும் நேர்ந்து விடக்கூடாதே என்ற அச்சம் அவளை வாட்டி வதைக்கிறது. தேர்தல் வன்முறை பற்றிக் கேள்விப்படும் போதெல்லாம் அவள் பதற்றத்துக்குள்ளாகி விடுகிறாள்.

கிழவருக்கு அப்படியான கவலைகள் எதுவுமேயில்லை. அவருக்கு அவரது கொள்கைகள் முக்கியம். ''உங்களுக்கேன் தேவையில்லாத வம்பெல்லாம். வாறவங்களை வரவேற்று நல்ல வார்தையா நாலுவார்த்தை சொல்லிச் சந்தோஷமா அனுப்ப வேண்டியது தானே?'' என்று கிழவி எவ்வளவோ கெஞ்சியும் கிழவர் கேட்பதாக இல்லை.

சைகைமேல் சைகை செய்தும் அவரது கவனத்தைச் சிதறடிக்க முடியாது தோற்றுப் போய் அவரது வாயையே பார்த்தவாறு சோர்ந்து போயிருக்கும் கிழவியை அவரது வாயிலிருந்து உதிரும் ஒவ்வொரு வார்த்தையும் ஊசியாகக் குத்துகிறது.

''நீங்கள் வடக்கும் கிழக்கும் திரும்பஷ்ம் சேரும் எண்டு சொன்னாலும் உங்கட தலைவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறாரே இணைப்பு நினைச்சும் பார்க்க முடியாத விசயமெண்டு'' கிழவர் கேட்கிறார்.

''அது பாருங்கோ தெற்குப் பக்கத்து வோட்டுச் சிதறாமல் இருக்கிறதுக்காகச் சொல்லுற பேச்சு. இலெக்ஷனுக்குப் பிறகு அவர் கட்டாயம் உதவி செய்வார். அதுக்கு நாங்கள் பொறுப்பு''. கிழவியின் உடல் இலேசாக நடுங்குகிறது. ஒரு நாள் இன்னொரு சாராரைப் பார்த்து கிழவர் கேட்டது அவளது ஞாபகத்துக்கு வருகிறது. ''வன்னியிலை கடைசி நேரத்தில் பொதுசனம் நூற்றுக் கணக்கிலை துடிச்சுத் துடிச்சுச் சாகேக்கை இப்ப உங்களுக்கு ஆதரவா நிக்கிற நாடு வேடிக்கை பார்த்துக்கொண்டுதானே இருந்தது?''

இன்னொரு தடவை கிழவர் சொன்னார், ''வெளி நாட்டிலையிருக்கிறவர்கள் தான் இங்கை வந்து தூக்கிப்பிடிக்கப் போகினமோ?''

எந்தக் குழுவந்தாலும் அவர்களோடு கிழவர் மல்லுக் காட்டுகிறாரே என்ற தவிப்போடு குசினிக்குள் மௌனித்துப் போய் இருக்கிறாள் கிழவி.

வாக்கு வேட்டைக்காக வந்தவர்கள் எழுந்து நிற்கிறார்கள். ''முதலிலை அகதிச் சனத்துக்கு உருப்படியா ஏதும் செய்ய வேணுமையா. பிறகு இணைப்பைப் பற்றி யோசிப்பம். அது கட்டாயம் நடக்குமையா. நீங்கள் எங்களுக்கு வோட்டுப்போட்டால் எல்லாம் சரி வரும் நாங்கள் வாறமையா'' அவர்கள் கும்பிடு போட்டார்கள்.

**வே.தில்லைநாதன்**

கிழவர் தனது வார்த்தைகளிலுள்ள கடுமையைக் குறைத்து ''தம்பிமாரே எங்கடை வீட்டிலை வடக்கும் கிழக்கும் எப்பவோ இணைஞ்சிட்டுது. நான் வடக்கிலை இருந்து வந்து அரை நூற்றாண்டுக்குக் கிட்ட ஆகுது. மனிசி இங்கை கிழக்கிலை பிறந்தவ. எல்லோரும் ஒரு மனசோட ஒற்றுமையா இருந்தால் தான் எங்களுக்குப் பிழைப்பு. அது தான் என்ரை கொள்கை சந்தோஷம்'' அவரும் கை கூப்பினார்.

கிழவி முகத்தைத்தூக்கி வைத்துக் கொண்டு திரிகிறாள். மாலையில் அவளது இரு மகன்மார் வேலையிலிருந்தும், மாணவியான மகள் தனியார் கல்வி நிலையத்திலிருந்தும் திரும்பும் வரை அவளது மௌனம் நீடிக்கிறது. பின்னர் போர்க் கொடி உயர்த்துகிறாள்.

''உங்கடை அப்பாவோடை எனக்குத் தலை உடைக்கேலாது. அவரை வாயை வைச்சுக்கொண்டு சும்மா கிடக்கச் சொல்லுங்கோ. என்ற மனம் பதகளிக்கிறது எனக்குத்தான் தெரியும். நீங்களாச்சு அவராச்சு அவர் திருந்த வேணும் இல்லையெண்டா நான் இங்கை இருக்க மாட்டன்''.

''நான் நினைச்சதைச் சொல்லுவன் தான். அதை யாரும் தட்டிக் கேக்கேலாது. ஞான சூனியங்களோடு எனக்கென்ன கதை? எங்கை போகப் போறாவாம் போகட்டும். எனக்குப் பிரச்சினையில்லை'' கிழவர் கத்துகிறார்.

அவரது மேனி நடுங்க அவர் சோபாவில் பொத்தென அமர்கிறார். அவரது இருபுறமும் மகன்மார் சோபாவில் அமர்ந்து கொள்ள மகள் நிலத்தில் அமர்ந்து அவர் மடியில் முகத்தைப் புதைக்கிறாள். ''என்னப்பா நீங்கள் வடக்கையும் கிழக்கையும் இணைக்கப் போராடுறியள். இங்கை வடக்கும் கிழக்கும் பிரிஞ்சிட்டது போலிருக்கே'' ஒரு மகன் வேடிக்கையாகக் கேட்கிறான்.

தகப்பனின் மடியிலிருந்து தலையைத் தூக்கிய மகள் அண்ணாந்து அவர் முகத்தைப் பார்த்து ''அப்பா உங்களுக்கு ஏதும் நடந்திட்டாலும் எண்டுதானே அம்மா பயப்படுறா. காலம் கெட்டுப் போய்க் கிடக்கு. நாங்கள் கவனமா இருக்கத் தானே வேணும்'' என்று அவரைத் தேற்றுகிறாள்.

''அம்மாவுக்கும் எனக்கும் வயது போட்டுது. இயற்கை இப்பவோ பின்னையோ வடக்கையும் கிழக்கையும் - அதுதான் அம்மாவையும் என்னையும் - பிரிக்கத்தான் போகுது. ஆனால் நீங்கள் மூண்டு பேரும் இணைஞ்ச பிறப்புகள். என்ரை ஆசையெல்லாம் எதிர்காலச் சந்ததி இணைஞ்சு இருக்க வேணும். மற்றச் சிறுபான்மை இனத்தையும் இணைச்சு வாழ வேணும். பெரும்பான்மைச் சமூகத்தோட ஒற்றுமையா ஆனால் தலை வணங்காமல் இருக்க வேணும். இல்லையெண்டால் வன்னியிலையும் மற்ற இடங்களிலையும் சிந்தின இரத்தத்திற்கு அர்த்தம் இல்லாமல் போயிடும். உலக அரசியலையும் புரிஞ்சு கொண்டு எங்கடை சனம் எங்கடை ஒற்றுமையை உலகத்துக்குக் காட்டுமெண்டால் நான் நிம்மதியாச் சாவன். எல்லாரும் சிதறு தேங்காய் ஆகிவிட்டாங்களே. அதுதான் என்ரை கவலை.'' என்று கூறிய கிழவர் ஆயாசத்துடன் சோபாவில் தலையைச் சாய்கிறார்.

மனம் நெகிழ்ந்த கிழவி அவரருகில் சென்று வாஞ்சையுடன் அவரது தலையை மெதுவாக வருடுகிறாள். ✱

---

# சானியா - ஷோயப் மாலிக் திருமணம் நடக்குமா?

நடக்குமா நடக்காதா என்று ரொஸ்ட் போட்டுப் பார்க்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது சானியா-ஷோயப் மாலிக் தடிருமணம். ஏப்ரல் 15ஆம் திகதி திட்டமிட்டபடி இந்த திருமணம் நடக்குமா என்று பெரிய அளவில் பந்தயமே நடக்கிறதாம்.



இதற்குக் காரணம் ஆயிஷா சித்திக் வீசியிருக்கும் முதல் திருமண பவுன்சர். திருமணம் என்ற பெயரில் ஷோயப் தன்னை ஏமாற்றியதாக பொலீஸில் ஆயிஷா முறைபாடு செய்ய,ஷோயப்பின் பாஸ்போர்ட்டை முடக்கி வைத்திருக்கிறது பொலிஸ். ஆனால், ஷோயப்போ வேறு ஒரு பெண்ணின் படத்தைக் காட்டி, ஆயிஷா தன்னை ஏமாற்றியதாகவும், அதை நம்பி டெலிபோன் மூலம் அவரைத் திருமணம் செய்ததாகவும் அதனால் அது செல்லாது என்றும் கூறுகிறார்.

பாகிஸ்தானிலும் ஷோயப்புக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளார் ஆயிஷா. ஆனால் என்ன நடந்தாலும் சரி, ஷோயப்பை கைப்பிடித்தே தீருவேன் என்று உறுதியாய் இருக்கிறாராம் சானியா. நாங்கள் இருவரும் கவுரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். என்னிடம் ஷோயப் எதையும் மறைக்கவில்லை. அவரை நான் நம்புகிறேன். எங்கள் திருமணம் நடக்கும். தயவுசெய்து என் திருமணத்தில் குழப்பத்தை ஏற்படுத்தாதீர்கள். திருமணத்துக்காக மருதாணி இட்டு அழகு பார்க்க வேண்டிய நேரத்தில் இப்படி கேள்விகளைக் கேட்டு என்னைத் துளைக்காதீர்கள் என்று பத்திரிகையாளர்களிடம் கூறிய சானியா, தனது திருமண உடைகளை வடிவமைக்க பிரபல ஆடை வடிவமைப்பாளர்களான சாந்தனு-நிகில் சகோதரர்களுக்கு முற்பணம் கூட கொடுத்துவிட்டாராம். தப்பித்தவறி இந்தியாவில் திருமணம் நடப்பதில் சிக்கல் வந்தால் டுபாயில் திருமணத்தை நடத்தவும் திட்டமிட்டுள்ளதாம் இந்த ஜோடி. டுபாயில் சானியாவுடன் வாழ்க்கையைத் தொடங்க ஒரு பிரமாண்டமான வீட்டையும் ஷோயப் வாங்கியுள்ளார்.

சானியாவுடன் முதலில் நிச்சயதார்த்தம் செய்துகொண்ட ஷோரப் மிர்சா, எல்லாவற்றையும் மறந்து இப்போது லண்டன் ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் படித்து வருகிறார். சானியாவின் திருமணத்துக்குச் சென்று தன் சார்பாக வாழ்த்துச் சொல்லுமாறு தனது அப்பாவைக் கேட்டிருக்கிறாராம் ஷோரப் மிர்சா.



# பேஸ்புக்... காதல் தோல்வியின் சின்னம்




உங்கள் வீட்டில் கம்ப்யூட்டர் இருக்கிறதா? அதில் இணைய வசதி செய்யப்பட்டு இருக்கிறதா? வயதுக்கு வந்த பிள்ளைகள் உங்களுக்கு இருக்கிறார்களா? அவர்களிடம் கேட்டுப் பாருங்கள்... அவர்கள் நிச்சயம் 'பேஸ்புக்' (Face Book) பயன்படுத்துபவராக இருப்பார்கள். அந்த அளவுக்கு இந்த 'சோஷியல் நெட்வோக்கிங்' இணைய தளம் இளைஞர்களிடையே பிரபலமாகி வருகிறது. இளைஞர்கள் மட்டுமல்ல... அனைத்துத் தரப்பினரும் இதன் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இந்தியாவில் மொபைல் போன் பயன்பாட்டுக்கு அடுத்தபடியாக வெகுவேகமாகப் பரவி வரும் விஷயம் இந்த பேஸ்புக் தான்!

டைப் அடிக்கத் தெரியாத முதியவர்களும் இன்று கணினியைப் பயன்படுத்தியாக வேண்டும் என்ற கட்டாயத்துக்கு ஆளாகி இருக்கிறார்கள். இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி, கணினிப் பயன்பாட்டை அதிகரித்துக்கொண்டே போகிறது. மொபைல் போன் அளவுக்கு கணினிப் பயன்பாடு

இல்லையென்றபோதிலும் ஒப்பீட்டளவில் இதன் வளர்ச்சி அபாரமானதாகவே இருக்கிறது. கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்களும் கூட மின்னஞ்சல் முகவரி ஒன்று வைத்திருக்க வேண்டும் என்பது இன்றைய எதார்த்தமாக மாறியுள்ளது. வேலைக்காக விண்ணப்பிக்கின்ற எவரும் தன்னுடைய 'பயோடேட்டா'வில் இப்போது அஞ்சல் முகவரியோடு மின்னஞ்சலையும், மொபைல் போன் எண்ணையும் தவறாமல் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம்.

கணினி என்றாலே அது இண்டர்நெட்டுடன் இணைந்த ஒன்றுதான் என்று ஆகிவிட்டது. அலுவலகங்களில் உள்ள கணினிகளும் இன்று இணையத்தோடு இணைக்கப்பட்டுள்ளன. இணையப் பயன்பாட்டின் உபவிளைவுதான் பேஸ்புக் போன்ற 'சோஷியல் நெட்வோக்கிங்' இணைய தளங்களின் பெருக்கம். 'மைஸ்பேஸ்,' 'ஆர்குட்' என இப்படியான இணையதளங்கள் பல இருந்தாலும் பேஸ்புக்தான் இன்று எல்லாவற்றிலும் முதலிடம் பிடித்திருக்கிறது. உலகம் முழுவதும் சுமார் 40 கோடி மக்கள் இதைப் பயன்படுத்துகிறார்கள். இந்தியாவை எடுத்துக்கொண்டால் 2009-ம் ஆண்டு இறுதியில் இதைப் பயன்படுத்துகிறவர்களின் எண்ணிக்கை சுமார் 80 லட்சமாக இருந்தது.

ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த மாணவர் மார்க் ஸுக்கர் பெர்க் என்பவரால் யதேச்சையாக உருவாக்கப்பட்டதுதான் இந்த பேஸ்புக். தன்னை கைவிட்டுப்போன காதலியின் நினைவிலிருந்து மீள்வது எப்படி என்று ஒரு நாள் இரவு யோசித்துக் கொண்டிருந்தபோதுதான் இந்த எண்ணம் அவருக்கு வந்தது. ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் ஒரு வழக்கம் உண்டு. அங்கு பயிலும் மாணவர்கள், வேலை செய்யும் ஆசிரியர்கள் தொடர்பான விவரங்கள் அச்சிடப்பட்ட புத்தகம் ஒன்றை மாணவர்களுக்கு அந்தப் பல்கலைக்கழக நிர்வாகம் கொடுத்து வந்தது. அந்தப் புத்தகத்தை மாணவர்கள் பேஸ்புக் என்று குறிப்பிடுவது வழக்கம். இந்த ஐடியாவைத்தான் ஸுக்கர்பெர்க் எடுத்துக் கொண்டார். தனது சக மாணவர்களான எட்வர் டோ சவேரின், டஸ்டின் மொஸ்கோவிட்ஜ், கிறிஸ் ஹ்யூக்ஸ் ஆகியோரை சேர்த்துக் கொண்டு இணைய தளம் ஒன்றை அவர் உருவாக்கினார். முதலில் ஹவார்ட் பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமே அதில் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பிறகு மற்ற கல்லூரி மாணவர்களும் அனுமதிக்கப்பட்டனர். அதற்குக் கிடைத்த வரவேற்பைத் தொடர்ந்து கல்லூரி மாணவர்களையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இப்போதோ 13 வயதுக்கும் மேற்பட்ட எவரும் இதில் உறுப்பினராக முடியும். அவர்களுக்கு ஒரு மின்னஞ்சல் முகவரி மட்டும் இருந்தால் போதும்.

காதலில் மனம் உடைந்த இளைஞனால் விளையாட்டாக உருவாக்கப்பட்ட இந்த இணைய தளம், இப்போது அவனை உலகின் முக்கியமான பணக்காரர்களில் ஒருவனாக ஆக்கி இருக்கிறது. அது நம் காலத்தின் (காதலின்?) அதிசயம் என்றுதான் சொல்ல வேண்டும். அதுவும் ஆறே வருடங்களில் இந்த பிரமாண்ட அதிசயம் நடந்திருக்கிறது. இன்று இந்த இணைய தளத்தை வாங்குவதற்கு உலகின் மிகப் பெரிய நிறுவனங்கள் எல்லாம் போட்டி போடுகின்றன. வணிகரீதியில் மதிப்பு வாய்ந்த எம்.டி.வி. நிறுவனத்துக்கு இணையாக வாங்குவதற்கு போட்டி போடப்படும் கம்பெனிகளில் ஒன்றாக பேஸ்புக் இருக்கிறது. இதில் உலகப்புகழ் பெற்ற மைக்ரோசொப்ட் நிறுவனம் முதலீடு செய்திருக்கிறது. இவ்வளவுக்கும் பேஸ்புக் லாபம் குவிக்கும் நிறுவனமாக இல்லை. 2009-ஆம் ஆண்டில் தான் முதன்முதலாக அது லாபம் ஈட்டும் நிறுவனமாக மாறியது. ஆனால், அதற்கு முன்பிருந்தே இவ்வளவு போட்டி!

பேஸ்புக் போன்ற சோஷியல் நெட்வோர்கிங் தளங்களை மக்கள் ஏன் விரும்புகிறார்கள்? மனித உறவுகள் பலவீனம் அடைந்து வரும் இன்றைய உலகில் மனிதர்கள் தீவுகளாக மாறிக்கொண்டு இருக்கிறார்கள். பழைய காலத்தைப்போல குடும்பம் என்பது வலுவான அமைப்பாக இப்போது இல்லை. குடும்ப உறவுகள் சிதைந்து கொண்டிருக்கின்றன. இதனால், தனித்து விடப்பட்ட மனிதர்கள் உறவுகளைத் தேடி அலைகிறார்கள். உறவின் பொறுப்புகளை எடுத்துக்கொள்ளாமல், பயன்களை மட்டுமே அனுபவிக்க வேண்டும் என்று விரும்புகிற நவீன மனிதர்களுக்குக் கிடைத்திருக்கும் வரப்பிரசாதம்தான் இத்தகைய இணைய தளங்கள். இவற்றில் நீங்கள் உங்களது உணர்வுகளை நினைத்த நேரத்தில், நினைத்த விதமாக வெளிப்படுத்தலாம். புதிய நண்பர்களைத் தேடிக்கொள்ளலாம். அவர்களோடு அரட்டை அடிக்கலாம், ஆவேசப்படலாம். புகைப் படங்களைப் பரிமாறிக் கொள்ளலாம்.

'எனக்கு இன்று மனசு சரியில்லை' என்று ஒரு செய்தியை இதில் போட்டால் போதும்... குறைந்தது 10 நண்பர்களிடம் இருந்தாவது உங்களுக்கு ஆறுதல் செய்தி வந்துவிடும். நமது பிறந்த நாளை நாமே மறந்துவிட்டாலும் கூட அதை நினைவில் வைத்திருந்து வாழ்த்து சொல்கிற நண்பர்களை பேஸ்புக்கில் பார்க்கலாம்.

மனிதர்களுக்குப் பணம் மட்டுமே எல்லா மகிழ்ச்சியையும் கொடுத்து விடுவதில்லை. ஒரு மனிதனின் ஆளுமையை வடிவமைப்பதில் 'சமூக மூலதனம்' எனச் சொல்லப்படுகிற சமூக உறவுகளுக்கு முக்கியப் பங்கு இருக்கிறது. பணத்தை சம்பாதிக்க பல்வேறு வழிகளைக் கண்டறிந்துள்ள மனிதன், ஒரு பக்கம் அந்த மூலதனத்தை குவித்துக் கொண்டு இன்னொரு பக்கம் சமூக மூலதனத்தை இழந்து கொண்டிருக்கிறான். அதை சரி செய்து கொள்வதற்கு அவனுக்குக் கிடைத்துள்ள வாய்ப்பு என்றும் இத்தகைய இணைய தளங்களைச் சொல்லலாம். கூட்டுச் செயல்பாட்டிலிருந்து விலகிப்போய்விட்ட மனிதன் தனக்கென ஒரு சமூகக் குழுவை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறான். அந்த விருப்பத்தை இத்தகைய இணைய தளங்கள் நிறைவு செய்கின்றன. தனிப்பட்ட பிரச்சினைகளை மட்டுமின்றி, சமூகப் பிரச்சினைகளையும் இத்தகைய தளங்களில் பகிர்ந்துகொள்ள முடிகிறது.

பேஸ்புக் என்பது பல்வேறு நிகழ்வுகள் குறித்த அறிவிப்பை வெளியிடுவதற்கும் பயன்படுகிறது. அதன்மூலம் எளிதில் உங்கள் நண்பர்களை ஒரு நிகழ்வுக்கு அழைத்துவிடலாம். தமிழ்த் திரைப்பட இயக்குனர்கள் பலர் தங்களது திரைப்படங்கள் பற்றிய செய்திகளை பேஸ்புக்கில் வெளியிட்டு விளம்பரப் படுத்தி வருகிறார்கள். தாங்கள் படிக்கும் நல்ல பல கட்டுரைகளை மற்ற நண்பர்களின் பார்வைக்காக பேஸ்புக்கில் போடுவது இப்போது அதிகரித்துவருகிறது. அதற்கேற்ப பத்திரிகைகள் தங்களது இணைய தளங்கலை வடிவமைத்துவருகின்றன. பேஸ்புக்கில் நண்பர்களாக இருப்பவர்கள் இப்போது ஏதேனும் ஓர் இடத்தில் கூடிக் குறிப்பிட்ட பிரச்சினைகள் பற்றி விவாதிக்கிறார்கள். இப்படியான சந்திப்புகள் இளம் தொழில் முனைவோருக்குப் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகின்றன.

பேஸ்புக் போன்ற தளங்களால் நன்மைகள் மட்டுமின்றி, தொந்தரவுகளும் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. பேஸ்புக்கில் நாம் பகிர்ந்துகொள்கிற விவரங்களை யார் யார் பார்க்கலாம் என நாமே வரையறுத்துக்கொள்கிற வசதி இருக்கிறது, நம்முடைய 'அந்தரங்கம்' பாதுகாக்கப்படுகிறது என சொல்லப்பட்டாலும் நாம் அதில் வெளிப்படுத்துகிற விவரங்களை மற்றவர்கள் துஷ்பிரயோகம் செய்யவும் வாய்ப்பிருக்கிறது. அது மட்டுமின்றி, பேஸ்புக்கிலிருந்து நாம் விலகிவிட்டாலும் நாம் வெளியிட்ட தகவல்கள் இணையத்தில் இருந்துகொண்டுதான் இருக்கும். அவற்றை நீக்குவதற்கான வழிமுறைகள் எளிதானவையாக இல்லை. ஆனால், இத்தகைய குறைபாடுகள் பேஸ்புக்கின் பயன்பாட்டை எந்த விதத்திலும் குறைத்துவிடவில்லை. 'அதனால் ஆபத்து... இதனால் தொந்தரவு!' என்று பேசி நம்மை நாமே முடக்கிக் கொள்வதைவிட தொழில்நுட்பம் தரும் அனுகூலங்களையும் சுதந்திரத்தையும் அனுபவிப்பதே புத்திசாலித் தனம்.

வாருங்களேன், பேஸ்புக்கில் சந்திப்போம்!

***நன்றி: இணையம்***

# நரியும் சிங்கமும் 3

புத்தாக்கம்
கே.கான்







## விடைகள்

1. பல்பு.
2. தேங்காய்.
3. கண், கைவிரல், வாய்.
4. பட்டாணி.
5. நாக்கு.
6. தண்ணீர்.



## வா, வா சீக்கிரம் வந்து பார்



சின்னப் பாப்பா இங்கே வா
சிறகை விரித்த மயிலைப்பார்!
வண்ணம் எத்தனை எண்ணிப்பார்!
வா வா சீக்கிரம் வந்துபார்!

வான வில்லைப் போலவே
வர்ண ஜாலம் காட்டுதே!
கான மயிலும் ஆடுதே
காண நீயும் ஓடிவா!

ஆடும் அழகை நின்று பார்
அதனுடன் நீயும் ஆடிப்பார்!
ஓடும் மேகம் மேலே பார்
ஒயிலாய் ஆடும் மயிலைப் பார்!

நீல மயிலை நேரில் பார்
நீண்ட தோகை அழகைப் பார்!
கோலம் நிறைந்த நடனம் பார்
குதித்து நீயும் ஆடிப்பார்!

கவிஞர் வானம்பாடி

## விடுகதைகள்

1. ஒரு நெல் குத்தினா வீடெல்லாம் உமி. அது என்ன?

2. குயவன் செய்யாத பாண்டம். வண்ணான் வெளுக்காத வெண்மை. மழையில்லாத நீர். அது என்ன?


3. பார்த்தவன் ரெண்டு பேர். எடுத்தவன் அஞ்சு பேர். சாப்பிட்டவன் ஒருவன். இவை என்ன?

4. மொட்டைத் தாத்தாவுக்குத் தலையில் இரட்டைப் பிளவு. அது என்ன?

5. அரண்மனைக்குள் நாட்டியக் காரி. அன்றாடம் ஆடுவாள். அவள் யார்?

6. ஓடோடும் சங்கிலி. உருண்டோடும் சங்கிலி. பள்ளத்தைக் கண்டால் பாய்ந்தோடும் சங்கிலி. அது என்ன சங்கிலி?

## சிறுவர் கைவண்ணம்





# தரையில் வாழ விரும்பிய மீன்

அந்த அழகிய மீனுக்கு கடல் வாழ்க்கை கசந்து விட்டது. அலைகளின் அசைவுகளுக்கு ஏற்ப நடனமாடும் கடல் தாவரங்கள்! பல வடிவங்களிலான முருகைக் கற்கள்! அவற்றிடையே ஒளிந்து கொண்டிருக்கும் விலாங்கு மீன்கள்! கீழே போகப் போக இருட்டு! இவற்றோடு, பார்க்கும் இடமெல்லாம் நீந்திக் கொண்டிருக்கும் வகை வகையான மீன்கள். பார்த்துப் பார்த்தே சலித்து விட்டது.

''சே, இது தான் வாழ்க்கையா? பெரிய மீன்களிடமிருந்து உயிர் தப்புவது எவ்வளவு கஷ்டம்? பயந்து பயந்தே வாழ வேண்டியிருக்கிறது.''

அது அடிக்கடி கடல் மேற்பரப்புக்கு வரும்; அப்போதெல்லாம் ஏக்கத்தோடு கரையைப் பார்த்துக் கொண்டிருக்கும்.

''ஆஹா! தரை எவ்வளவு வெளிச்சமாக இருக்கிறது!''

பசுமை போர்த்திய நிலம். உலாவித் திரியும் மனிதர்கள். ஓடிவிளையாடும் சிறுபிள்ளைகள்! 'புர்' என்று ஒலி எழுப்பிய படி ஓடி மறையும் வாகனங்கள். நெடிய தென்னை மரங்கள்- எல்லாவற்றையும் ஆச்சரியக் கண்ணோடு, கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்கும். பிறகு கண்ணீர் வழியும் கண்களோடு தண்ணீருக்குள் மூழ்கிவிடும்.

"நிலத்திலே சென்று வாழ முடிந்தால்!"

''ஒரே ஆவல்! ஒரே ஆசை! ஒரே வெறி!

கடல் மட்டத்துக்கு மேல் தலையைத் தூக்கிப் பார்க்கும் போதெல்லாம் அதற்குப் பைத்தியம் பிடிப்பது போலிருக்கும். எவ்வளவு காலத்துக்குத் தான் ஆசையை அடக்கி வைப்பது?

ஒரு நாள் தரைக்குப் போகத் துணிந்து விட்டது.


அம்மாவிடமும் சொல்லவில்லை.

அப்பாவிடமும் சொல்லவில்லை.

நண்பர்களிடமும் சொல்லவில்லை.

உடலிலே ஒரு துடிப்பு! உள்ளத்திலே விடாப்பிடியான ஒரு துணிவு.

சமுத்திரத்தில் வந்து கலக்கும் சாக்கடைக் கானைக் கண்ட மீன் அதன் வழியே நிலத்தை நோக்கிய நெடும் பயணத்தை ஆரம்பித்தது.



அதனுடைய துர்நாற்றம் சகிக்க முடியவில்லை. அருவருப்பு தாங்க முடியவில்லை. சில இடங்களில் மண் திட்டிகள்; சில இடங் களில் கூர்மையான உலோகத் துண்டுகள், உடைந்த போத்தல்கள்; நீரற்று வரண்டு போன இடைவெளிகள்.

மேல்நோக்கிச் செல்லும் மீனுக்கு இவை சிறுசிறு காயங்களை ஏற்படுத்தாமல் விடவில்லை.

உடல் வலித்தது; ஆனால், உள்ளம் சோர்ந்துவிடவில்லை.

நீர் இல்லாத சில இடங்களில் சில அடித் தூரம் பாய்ந்தும் ஊர்ந்தும் செல்ல வேண்டியிருந்தது.

அப்போது கண்கள் இருளும்; மூச்சுத் திணறும். பார்வை பறிபோய் விட்டது போலவே உணரும்.

இத்தகைய துன்பங்களுக்கும் இடையூறுகளுக்கும் மத்தியிலும் அது நம்பிக்கை இழக்கவில்லை.

இன்னும் சிறிது தூரம் செல்லும் போது சாக்கடையோடு ஒட்டியதாக இருந்தது ஒரு சதுப்பு நிலம். பார்க்குமிடமெல்லாம் ஒரே பசுமை. அந்தத் தாவரங்கள் தனக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று எண்ணியது மீன்.

உடனே சாக்கடையில்இருந்து சதுப்பு நிலத்தை நோக்கிப் பலமாகத் துள்ளிப் பாய்ந்தது.

முயற்சி வெற்றி!

அற்ப-சொற்ப நீர் இருந்த ஓர் இடத்தில் தங்கிவிட்டது. காலப் போக்கில் இயற்கையும் அதற்கு உதவி புரிந்தது.


அதனுடைய செதிழ்கள் பலமடைந்தன. ஆனால், நிறம் மட்டும் மாறி விட்டது.

சதுப்பு நிலம் துப்பரவு செய்யப் படும்போது மீன்கள் அகப்படுவதாக நீங்கள் கேள்விப் பட்டிருக் கிறீர்கள் அல்லவா!









# ஆற்றங்கரை

குருத்து மணற் கரையிலே
குளு குளுக்கும் காற்றிலே
விருப்பத் துடன் பாடலாம்
விழுந்து புரண்டு ஆடலாம்


நண்டு கரையில் ஓடுது
நதி யலையைத் தேடுது
வண்டு ஒன்று பூக்களை
வளைந்து பறந்து தேடுது

வள்ளம் ஓடும் நதியிலே
வலை களோடு மீனவர்
துள்ளும் மீன்கள் பிடிக்கவே
தூரப் பயணம் போகிறார்

அந்தி இறங்கும் சூரியன்
அழகு காட்டும் இடமிது
வந்து பார்த்துக் களிப்புறு
வாழ்வு முழுக்க மகிழ்ந்திரு

-அஷ்ரப் ஷிஹாப்தீன்

# நாம் வாழும் பிரபஞ்சம்



மேகமறைப்பில்லாத, சந்திர ஒளியுள்ள, இரவிலே வானத்தை அண்ணாந்து பாருங்கள். வானம் தீபாவளி கொண்டாடுவது போல், எண்ணி முடிக்க இயலாத ஒளிப் பொட்டுக்களின் அலங்காரத்தைக் காண்பீர்கள்.

அவற்றுள் சில கண்சிமிட்டுவது போல் விட்டுவிட்டுப் பிரகாசிக்கும். அவற்றை நாம் நட்சத்திரங்கள் என்போம்.

இன்னும் சில, மின்னாது ஒரேயளவான ஒளியுடன் காணப்படும். அவற்றை நாம் கோள்கள் அல்லது கிரகங்கள் என்று கூறுவோம்.

நட்சத்திரங்கள் என்பது சூரியன்களாகும். வானத்திலே பல கோடிக் கணக்கான சூரியன்கள் இருக்கின்றன. அதில் நமக்கு ஒளியையும் வெளிச்சத்தையும் தரும் சூரியனும் ஒன்றாகும். ஆனால், ஏனையவை மிக மிகத் தூரத்தில் இருப்பதால் எமக்குச் சிறியனவாகத் தோன்றுகின்றன. நமது சூரியன் கூட பூமியிலிருந்து 93 கோடி மைல்களுக்கு அப்பால் இருக்கின்றது.

நட்சத்திரங்களோடு வெண்மேகம் போன்றதொரு படலத்தையும் நீங்கள் அவதானிக்கலாம். இது கோடிக் கணக்காக நட்சத்திரகளால் ஆனது. ஆனால், அவை நமது பார்வைக்குப் புலனாவதில்லை. இந்நட்சத்திரங்களும், வெண்மேகம் போன்ற நட்சத்திரப்படலங்களும் கிரகங்களும் அடங்கிய இடம் பால்வீதி அல்லது பால் வழி மண்டலம் எனக் கூறப்படும்.

இந்த நட்சத்திரங்கள் பிரமாண்டமான குவிவில்லை வடிவில் அமைந்துள்ளன. எமது அண்டமான பால்வழி மண்டலத்தின் விட்டம் 3 லட்சம் ஒளி வருடங்களாகும். (ஒளி ஒரு விநாடிக்கு 1,86,300 மைல் பிரயாணம் செய்கிறது. ஒரு வருடத்தில் ஒளி பிரயாணம் செய்யக்கூடிய தூரம் ஓர் ஒளி ஆண்டு எனப்படும்.)

ஆகவே, விநாடிக்கு 1,86,300 மைல் வேகத்தில் இச்சக்கரத்தின் ஒரு முனையில் இருந்து மறுமுனைக்கு ஒளி செல்ல 3லட்சம் ஒளி வருடங்கள் செல்லும்.

நமது சூரியன் இத்தொகுதியின் ஓர் எல்லைப் புறத்தில், அதன் மையத்தில் இருந்து சுமார் 30 ஆயிரம் ஒளி வருட தூரத்தில் இருக் கின்றது.

நமது சூரியன் நடுத்தரமான ஒரு நட்சத்திரமாகும். இதைவிடப் பெரிய நட்சத்திரங்களும் இருக்கின்றன.

நமது பூமி தன்னுடைய அச்சில் சுழல்வதோடு சூரினையும் சுற்றி வருகிறது என்று நீங்கள் படித்திருப்பீர்கள். அதுபோல் இந்த அண்டக் குடும்பம் தனது அச்சில் சுழல்வதோடு தனது சுற்றுப் பாதையிலும் சுற்றி வருகின்றது.

இந்த அண்டம் தனது மையத்தைச் சுற்றிச்சுழலவும், தனது பாதையில் ஒரு முறை சுற்றி வரவும் எத்தனை கோடி வருடங்கள் பிடிக்கும் என்பதை விஞ்ஞானிகளால் கூட திட்டவட்டமாகக் கணித்துக் கூறமுடியவில்லை.

-அபூ முபஸ்ஸிர்

# உறவுகள் உண்மையாகியதே! 3

யுத்தம் நடைபெற்ற நாட்களில் வன்னியில் எவ்வளவோ சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தாங்கள் எதிர்கொண்ட அவலங்களை, தங்களுக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்களை பலர் 'உயிர் வலிக்கும் கணங்கள்' என்ற பகுதியில் எழுதி வருகிறார்கள். அதே போன்று வன்னியில் இடம் பெற்ற சம்பவங்களை பலர் கதை வடிவிலும் எழுதி வருகிறார்கள். இந்த தொடரில் தமிழ் திலகம் எழுதிய 'உறவுகள் உண்மையாகியதே!' என்ற உண்மைக் கதை இந்த இதழுடன் முடிவடைகிறது. அடுத்த வாரம் யோ. புரட்சி எழுதிய 'தண்ணீரில் மூழ்கும் கண்ணீர்கள்' பிரசுரமாகிறது.

அந்த அம்மா தேநீரைக் குடித்து விட்டு ''நல்லாய் இருப்பீங்கள் ஐயா'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டா. என்னவள் சொன்னாள், ''அந்த அம்மாவுக்கு கொடுக்க எனக்கும் விருப்பம் தான்; ஆனால் கனி அழுதால் பார்த்துக் கொண்டு இருப்பீங்களா'' என்று. நானும் ம்... என்றேன். யாரை யார் பார்ப்பது? இப்படி நாட்கள் நகர்ந்தன.

19.04.2009 அன்று அதிகாலை நாங்கள் இருந்த பகுதியில் போர் தொடங்கியது. ஷெல்மழை என்றே சொல்லலாம். அகோரம். எங்கும் புகை மண்டலம். எமது தறப்பாள்தான் எமக்கு பாதுகாப்பு. மூடு பங்கரும் இல்லை. பாதுகாப்பாக பங்கருக்குள் இருந்தவர்களின் பங்கர் வாசலில் ஷெல் ஒன்று விழுந்து வெடித்து அதற்குள் இருந்தவர்கள் உடல் சிதறிப்பலியானார்கள். எப்படியாவது பாதுகாப்பான இடத்துக்குப்போவம் என்று முடிவு செய்தோம். எடுக்கக் கூடியதை எடுத்துக் கொண்டு முள்ளி வாய்க்கால் வந்து ஒரு இடத்தில் நின்றோம். எனக்கு தெரிந்த ஒருவரை அங்கு கண்டேன். தான் இருந்த பங்கருக்கு எங்களைக் கொண்டு போனார். அங்கு சாப்பாடும் தந்தார். எம்மிடம் எதுவும் இல்லை. உயிர் மட்டும்தான் அப்போது இருந்தது. அதுக்குத்தானே இந்தப்பாடு.சில நாட்கள் நகர்ந்தன. வட்டுவாகலால் வந்து இராணுவத்திடம் சென்றோம். கொஞ்சம் வித்தியாசமாக முறைத்துக் கொண்டு ''பண்டித்தமிழா எங்கடா கிடந்து இவ்வளவு பேரும் வாறியள்'' என்றான் ஒரு சிப்பாய். ''என்னடாப்பா வரவேற்பே கொஞ்சம் அமோகமாகத்தான் இருக்கு'' என்று பக்கத்தில் வந்தவரிடம் சொன்னேன். அவர் சொன்னார், ''இதிலென்ன இருக்கு'' என்று.

நான் சொன்னேன் ''என்னை யாரும் டேய் என்றால் என்னடா என்று கேட்கிறனான். ஆனால் இப்ப வாயை மூடுவம்'' என்று.

அனைவருக்கும் தண்ணீர்த்தாகம். கனி, ''அப்பா தண்ணி அப்பா தண்ணி'' என்று அழுது கொண்டு என் முகத்தில் அடிக்கிறாள். என்ன செய்யமுடியும்? கிடங்கு ஒன்றில் இருந்த தண்ணீரை அள்ளிக் கொடுத்தேன். மாட்டுக்குக்கூட நல்ல தண்ணீர் வேண்டும். அழுக்குத் தண்ணீர் குடிக்காது. கிடங்கில் இருந்து அள்ளிய தண்ணீரை நாம் குடித்தோம். உணவு இல்லை. வயிற்றை பிய்க்கிற மாதிரி பசி. ஒரு சாப்பாடாவது எடுத்துக்கொடுப்பம் என்று போனேன். சாப்பாடு கொடுக்கும் இடத்தில் சரியான சனம். ஆயிரம் மாடுகளுக்குள் ஏலாத ஒரு மாடுமாதிரி நடுவில மாட்டிக் கொண்டேன். இவ்வளவு தூரம் தப்பிவந்து இதற்குள் செத்திடுவன் போல இருந்தது. ஒரு மாதிரி ஒரு சாப்பாடு எடுத்துக் கொடுத்துவிட்டேன். அதோட கனிக்கு இனி பிரச்சினை இல்லை.

அன்று இரவு ஆனந்த குமாரசுவாமி நலன்புரி நிலையத்துக்கு போய்ச் சேர்ந்தோம். அங்கும் பிரச்சினை. தண்ணீர், சாப்பாடு உட்பட எல்லாமே பிரச்சினைதான். ஏதோ ஒருவகையில் எனக்கு தெரிந்தவர் ஒருவர் அங்கு வந்தார். ''உங்களுக்கு சாப்பாடு பிரச்சினையாக இருக்கும் எங்கட முகாமுக்கு வாங்கோ சாப்பாடு ஏற்பாடு செய்துதாறன்'' - என்றார். சொப்பிங் பையுடன் பிச்சை எடுக்கப் போறமாதிரி இராமநாதன் முகாமுக்குப் போகிறேன். இடையில் வேலி. பொலிஸ், ஆமி நிற்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாமல்தான் போக வேண்டும். கண்டால் அடிப்பார்கள் என்றும் சொன்னார்கள் களவாக அங்கால போய் சாப்பாடு வாங்கிக் கொண்டு வந்து என் குடும்பத்துக்குக் கொடுத்தேன்.

எட்டு நாட்கள் கழிந்தன. பவள் வாகனத்தில் ஒலி பெருக்கி அறிவிப்பு வருகிறது. 'விடுதலைப்புலிகள் அமைப்பில் ஒருநாளரவது இருந்திருந்தால் அல்லது ஒரு நாளரவது வேலை செய்திருந்தால் பதிவு செய்யுங்கள். பதிவு செய்யாமல் இருந்து பிடிபட்டால் 20 வருடச் சிறை' என்று அறிவித்தனர். இதைக் கேட்டதும் எனது நெஞ்சு வெடிக்கும் மாதிரி இருந்தது. என்ன செய்வது, பதியத்தானே வேணும். போய் பதிந்தேன். 'உங்களுக்கு புனர்வாழ்வு இருக்கு பிளேற்றும் கப்பும் கொண்டு வாங்கோ' என்றனர்.நம்பினோம். பதிவு செய்ததும் முகாமுக்கு வந்தேன்.

**தமிழ் திலகம்**

கனிக்கு விளங்கி விட்டது அப்பா தன்னை விட்டிட்டு போகப்போறார் என்று. என் கழுத்தைப்பிடித்துக் கொண்டு அழத்தொடங்கினாள். என்னால் என் கனியை விட்டுச் செல்லவும் முடியவில்லை, செல்லாமல் இருக்கவும் முடியாது. இடைநடுவில் நான் பட்டபாடு எனக்குத் தான் தெரியும். கனியிடம் இருந்து விடுபட முடியவில்லை. அழஅழத்தான் விட்டுவிட்டு புறப்பட்டேன். என்னை எதிர்பார்த்த வண்ணம் இராணுவத்தினரின் பஸ் ஒன்று நிற்கிறது. வந்து ஏறினேன். உடனே பஸ் புறப்பட்டது. பஸ்ஸுக்குள் என்னைப்போல் வேறும் பலர் இருந்தார்கள்.

ஒரு புனர்வாழ்வு மையத்தில் பஸ் எம்மை இறக்கியது. அங்கு எம்மை எதிர்பார்த்தவர்களாய் ஏற்கனவே இருந்தவர்கள் கையசைத்து வரவேற்றனர். அவர்களைப் பார்க்க எனக்கு விளையாட்டுப் போட்டிகளில் மைதானத்தில் வீரர்கள் இறங்கும்போது அவர்களுக்கு சார்பானவர்கள் சந்தோஷத்தில் ஆடிப்பாடி கையசைத்த ஞாபகம் வருகிறது. அட என்ன இது, சரி வந்திட்டம் பார்ப்பம் என்று நினைத்து விட்டு எனது முதலாவது சிறை வாழ்க்கையை 30.05.2009 அன்று ஆரம்பித்தேன்.

சில நாட்களின் பின்பு என் உறவினர்கள் என்னைத் தேடிப்பிடித்தனர். வந்தவுடன் என்னைக் கட்டியணைத்து அழுதனர். நான் சொன்னேன் ''என்னை பற்றி யோசிக்க வேண்டாம். என் மனைவியையும் கனியையும் போய்ப் பாருங்கள் அவர்கள் மிகவும் கஷ்டப் படுவார்கள். அவர்களிடம் உடுக்க உடையும் குறைவு. சாப்பாடும் தட்டுப் பாடு. எப்படியாவது அடிக்கடி போய் பாருங்கள்'' என்றேன். என் குடும்பத்துடன் சேர்ந்திருக்க எவருமே விரும்புகிறார்கள் இல்லை. எப்பதான் சந்தோஷமாக இருக்க போறேனோ தெரியாது என்று என் மனதுக்குள் அழுதுவிட்டேன்.

மனைவியிடம் கேட்டேன் ''எப்படி போகுது உங்கள் பாடு'' என்று. ''என்னையும் பிள்ளையையும் நல்லாய்ப் பார்க்கினம். உடுப்பு சாப்பாடு எல்லாம் பரவாயில்லை. நீங்கள் மட்டும் வந்தால் எனக்கு சரி'' என்றாள். சொல்லும் போது அவள் கண்கள் கலங்கின. எனக்கு கவலைதான். என்னால் செய்ய முடியாவிட்டாலும் என் உறவுகள் என் குடும்பத்தை சந்தோஷமாக வைத்திருப்பது எனக்கு சந்தோஷம்தானே!. என்னவள் என் நிலைமையை நினைத்து கண்கலங்கினாள். என்ன செய்வது? நான் சொன்னேன், ''கவலைப்படாதீங்க நான் வந்திடுவன்'' என்று. திடீர் என்று ஒருநாள் இரவு 11 மணி இருக்கும். எமது புனர்வாழ்வு மையத்தில் இருந்த சிலரை இராணுவ அதிகாரி ஒருவர் கூப்பிட்டு உங்களுக்கு நாளைக்கு விடுதலை என்றார். நானும் அவர்களில் ஒருவர். எனக்கோ அளவு கடந்த சந்தோஷம். நீண்ட நாட்களாக பிரிந்திருந்த எம்மை இணைக்கப் போகிறார்கள். அன்று இரவு கற்பனைகள். நித்திரையே வரவில்லை. காலையில் எமக்குரிய கடமைகளை முடித்த நேரம் பஸ் வந்தது. எமது சந்தோஷமான வாழ்கையை ஆரம்பிக்க போறம் என்ற ஆரவாரத்துடன் பஸ்ஸில் ஏறினேன். நீதிமன்றத்தில் இறக்கினார்கள்.



நாட்கள் நகர்கின்றன. சந்திப்புக்களும் நடக்குது. அப்பதான் என் அக்கா வந்து சொன்னா, ''தம்பி வவுனியாவில் சொந்தக்காரர் இருந்தால் பதிந்து எடுக்கலாமாம், நாங்கள் உன் குடும்பத்தை எடுக்கப்போறம்'' என்றார். நான் ''உடனடியாக அந்த வேலையை செய் யுங்கள்'' என்றேன். பதிவு செய்து எடுத்து எனது குடும்பத்தை வவுனியாவுக்கு கொண்டு போய் விட்டினம். இப்பதான் எனக்கு சந்தோஷம். என் உறவுகள் கனபேர் இருக்கினம், என் குடும்பத்தை சந்தோஷமாக வைத்திருப்பினம் என்று சந்தோஷத்தில் இருந்தேன். என் மனைவி, கனி அடிக்கடி என்னை பார்க்க வருவினம், கனி அடிக்கடி வருகிறாள்தான், ஆனால் முதலில் என்னோடு இருந்த பாசம் குறைந்து விட்டது. தங்களை விட்டிட்டு வந்து நான் தனிய இருக்கிறன் என்று அவள் நினைக்கிறாள் போல. ஏன் கம்பி வேலி குள்ள இருந்து வாரார்? இவர் என்ர அப்பா இல்லை என்ற மாதிரி பார்க்கிறாள் கனி. ஆற்ற செல்லம் என்று கேட்டால் மட்டும் அப்பான்ர என்று சொல்கிறாள். என்னுடன் கொஞ்சநேரம் இருந்துவிட்டு இறங்கிப் போயிடுவாள். என் கனியை எப்படி என் பக்கம் எடுப்பது? இப்படி வந்து போகும் போது ஒருநாள் என் குறுகிய நேரத்தில் என்னை விடுதலை செய்தனர். எனது உறவினர் வீடு நீதிமன்றத்துக்கு கிட்டவாக இருந்த படியால் கால்நடையாகப் போய்ச் சேர்ந்தேன். அனைவரும் இருந்தனர். என்னவளையும் கனியையும் மட்டும் காணவில்லை. எங்கே என்று கேட்டேன். 100மீற்றருக்கு அப்பால் உள்ள ஒரு வீட்டைக்காட்டி அங்கே நிற்கினம் என்றனர். வேகமாக அங்கே போனேன். என்னவள் கூலிக்கு மாவு இடிக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்டேன். அப்பதான் என் வாழ்வில் ஒரு பெரிய இடிவிழுந்தது. என்னைக் கண்டதும் அவள் ஓடிவந்து கட்டி அணைத்தாள். ''என்ன செய்யிறியள்'' என்று கேட்டேன். ''கூலிக்கு மாவு இடித்துத்தான் நானும் பிள்ளையும் சாப்பிடுறம்'' என்றாள். ''நீங்கள் கவலைப் படுவீங்கள் என்றதால் தான் உங்களுக்கு இவ்வளவு நாளும் பொய் சொன்னனான்'' என்றும் அவள் கூறினாள். . எனக்கு உயிரே போய்விடும் போல இருந்தது. என் உறவுகள் பற்றி 35 வருடங்கள் நான் அறியாததை, சிறை வாழ்க்கை 35 வாரங்களில் கற்றுத்தந்தது.

(முற்றும்)



# கொப்புளிப்பான் தொற்றுள்ள தாயார் குழந்தைக்கு பால் ஊட்டலாமா?



**கேள்வி:** எனது மனைவி வயது 24. கடந்த வருடம் இரட்டைக் குழந்தைகளுக்கு தாயானார். கடந்த ஒரு வாரமாக அவருக்கு காய்ச்சல். அவரது சகோதரிக்கு இப்பொழுது கொப்புளிப்பான் ஏற்பட்டு குணமாகி வருகிறது. இவருக்கும் கொப்புளிப்பான் ஏற்படுவதற்குத்தான் காய்ச்சல் வந்திருக்கும் என்று சந்தேகமாக இருக்கிறது. இரண்டு குழந்தைகளுக்கு எனது மனைவி தாய்ப்பால் ஊட்டுகின்றார். அவருக்கு கொப்புளிப்பான் (CHICKEN POX) ஏற்பட்டால தொடர்ந்து தாய்ப்பால் ஊட்ட முடியுமா? தாய்ப்பாலூடாக குழந்தைகளுக்கு கொப்புளிப்பான் தொற்று ஏற்படுமா?

**பதில்:** உங்கள் மனைவிக்கு, முன்னர் கொப்புளிப்பான் ஏற்பட்டிருந்தால் அவருக்கு கொப்புளிப்பான் மீண்டும் ஏற்படும் சந்தர்ப்பம் மிக மிக குறைவு. அதே போல் முன்னர் அவருக்கு கொப்புளிப்பான் ஏற்பட்டிருந்தால் கொப்புளிப்பானுக்குரிய ANTIBODIES எதிர்ப்பு சக்தி- கருப்பையில் இருக்கும் போதே குழந்தைகளுக்கு சென்றிருக்கும். இதனால் முதல் 3 மாதங்களுக்கு குழந்தைகளுக்கு கொப்புளிப்பான் தொற்று ஏற்பட வாய்ப்பில்லை. எப்படியிருந்தாலும் தாய்க்கும் குழந்தைகளுக்கும் CHICKEN POX IMMUNOGLOBULIN என்ற எதிர்ப்பு சக்தி மருந்தை கொடுப்பதால்-தொற்று ஏற்படாமல் தடுக்கமுடியும் என்பது மட்டுமல்ல, அப்படி தொற்று ஏற்பட்டாலும் - பாதிப்பை, அகோரத்தை குறைக்கவும் முடியும் என்பதை நான் பரிந்துரைக்கலாம். குழந்தைகள் எந்த வகையிலும் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். தொற்றுள்ள நோயாளியை, தனிமைப்படுத்தி வைத்து பராமரிக்கவும். குழந்தைகளுக்கு இந்த தொற்று சிலவேளைகளில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். தாய்ப்பால் ஊடாக தொற்று பரவ மாட்டாது. ஆனால், தொற்று ஏற்பட்டுள்ள தாயார் பால் கொடுக்கும் போது ஏற்படும் நெருக்கத்தினால் குழந்தைகளுக்கு நோய் பரவ வாய்ப்பு உண்டு. உடனடியாக - உங்கள் மருத்துவரைகண்டு IMMUNOGLO BINS எடுப்பதற்கு ஆயத்தப்படுத்துங்கள்.

**கேள்வி:** எனது மகன் வயது 16 மாதம். பிறந்த போது, பிறந்த நாளிலிருந்து தொடர்ந்து பித்தம் பித்தமாக வாந்தி எடுத்தார். பிறக்கும் போது அவர் நிறை 2 கிலோ 300 கிராம்ஸ். மருத்துவர்கள் பரிசோதனை செய்து - JEJUNALATRESIA என்கின்ற சிறுகுடல் அடைப்பு பிறப்பின் போது ஏற்பட்டிருப்பதாக கண்டறிந்து- உடனேயே சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. ஆறுமாதம் கழித்து, பால் ஊட்டிக் கொண்டிருந்த போது, புரைக் கேறி பால் சுவாசப்பைக்குள் சென்றதால் நியூமோனியா ஏற்பட்டது. இதற்கு சிகிச்சை செய்யும் போது நரலில் சீழ் கட்டி ஏற்பட்டது. இது உறிஞ்சப்பட்டு மருந்துகள் கொடுக்கப்பட்டு சுகமானார். இப் பொழுது எதுவித பிரச்சினையும் இல்லை. ஆனால், கடந்த இரண்டு மாதங்களாக அவரது நிறையில் எதுவித அதிகரிப்பும் காணப்படவில்லை. இப்பொழுது அவர 7கிலோ 7கிராம்ஸ் நிறை. அவரது எடை அதிகரிக்காத காரணம் என்ன?

**பதில்:** கடந்த காலத்தில் உங்கள் குழந்தை அவரது வயதுக்கு இல்லாதவாறு பெரிய கோளாறுகளால் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் இத்தனை கண்டங்களில் இருந்தும் உயிர் தப்பி வாழ்வதே தெய்வத்தின் அருள் என்று தான் கூற வேண்டும். குழந்தைக்கு ஏற்பட்ட கோளாறுகள் குழந்தையின் வளர்ச்சி மற்றும் நிறை அதிகரிப்பை நிச்சயம் பாதிக்கக்கூடியவை. இவருக்கு ஏற்பட்ட கோளாறுகள் ஆண்டவன் கிருபையால் இவருக்கு பாதகமான அல்லது நிரந்தரமான பாதிப்புகளை ஏற்படுத்தவில்லை என்பதே ஆறுதலான விஷயம். என்னைப் பொறுத்தவரையில் உங்கள் குழந்தை சதாரண குழந்தைகள் போல் பசிவந்து உணவருந்தி, நிம்மதியாக படுத்துறங்கி, சிணுங்காமல், எந்த நேரமும் அழாமல்- மனநிலை குழம்பாது (MENTALLY STABLE) இருந்தாலே போதும். ஆகவே எடை அதிகரிக்காத தைப் பற்றி அதிகம் சிந்திக்க தேவையில்லை என்றே எனக்கு தோன்றுகிறது. எனினும் BALANCED DIET என்கின்ற சமநிலை உணவு முறைகளை பின் பற்றுங்கள் பால், பால்சம்பந்தப்பட்ட உணவுகள், ஓரளவு கடிய உணவுகள் (SEMI SOLD FOOD) தினமும் ஐந்து வேளைகள் கொடுத்துவரவும். மூன்று மாதத்துக்கு ஒரு தடவை நிறை-உயரம் என்பவற்றை அளந்து குறிக்கவும். மெல்ல மெல்ல வளர்ச்சியும் நிறையும் அதிகரிப்பதை காண்பீர்கள்; அப்படி செய்தும் மாற்றம் தெரியாவிட்டால்- தகுந்த சிறுகுழந்தை வைத்திய நிபுணரின் ஆலோசனை கட்டாயம் தேவை.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை
> *'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்*
> **டாக்டர்**
> **எஸ். அருள் ராமலிங்கம்**
> நீங்கள் கேள்விகளை
> அனுப்பவேண்டிய முகவரி
> **இலவச மருத்துவ ஆலோசனை**
> **'சுடர் ஒளி'**
> 85, ஜயந்த மல்லிமாராய்ச்சி
> மாவத்தை, கொழும்பு - 14.

**கேள்வி:** வயது 25. அலுவலகம் ஒன்றில நிறைவேற்று அதிகாரியாக பணிபுரிகின்றேன். உணவு உண்பதற்கு நான் நேரம் செலவழிப்பதில்லை. மற்றவர்கள் உணவு நேரம் என்று அரைமணி நேரம் தொடக்கம் ஒரு மணிநேரம் வரை செலவழிப்பார்கள். நானோ எனது உணவை ஐந்து அல்லது பத்து நிமிடங்களில் உட்கொண்டுவிட்டு பணிபுரிய தொடங்கி விடுவேன். இப்படி அவசரப்பட்டு உணவு உண்ணும் பழக்கம்-உடல் நலத்துக்கு தீங்கு விளைவிக்கும் என்று நண்பர்களும், பெற்றோர்களும் கூறுகின்றார்கள்-இது உண்மையா?

**பதில்:** அரக்க பரக்க ஓடி ஓடி பணிபுரியும் இந்த நவீன யுகத்தில்-எதற்கு முன்னுரிமை கொடுப்பதென்று புரியாத மனிதர்களின் பழக்க வழக்கத்தால்தான் நோய்கள் ஏற்படுகின்றன என்று அனுபவம் வாய்ந்த மருத்துவர்கள் கூறுகின்றார்கள். நாங்கள் உழைப்பது உண்பதற்கு; நாங்கள் உண்பது உழைப்பதற்கு என்று தப்பான கொள்கைகள் எம்மை தவறாக வழி நடத்துகின்றன. உணவு உண்ணுதல், தூக்கம், படிப்பு, தியானம் என்பவை அமைதியான சூழ்நிலையில் பதற்றமில்லாத உணர்வுகளுடன் செய்யப்பட வேண்டிய காரியங்களாகும். இதனை நாம் சிந்தித்து பார்ப்பதில்லை.

உங்கள் விஷயத்தில்-உணவு என்பது அன்றாட கடன்களில் ஒன்றாக கருதப்பட்டு வருகிறது.

காலையில் ஆறுமணிக்கு எழவேண்டும் ஆறரைக்கு காலைக் கடன்களை முடித்து ஏழரைக்கு காரியாலயத்துக்கு கிளம்பி விடவேண்டும். அதற்கு முன்னர் கையில் கிடைத்ததை வாய்க்குள் காலை உணவாக திணித்துவிட்டு ஓட வேண்டும். சரியாக மதியம் உணவு வேளையில் பசித்தாலும் பசிக்காவிட்டாலும் எதையாவது உண்ண வேண்டும் உடனே- திரும்பவும் காரியாலய மேசையில் பணியை ஆரம்பிக்க வேண்டும். இந்த ROUTINE எனப்படுகின்ற 'வழக்கம்' உங்களை ஆட்கொண்டுள்ளது. அநேகமாக இப்படியான பழக்க வழக்கம் உள்ளவர்களை 'TYPE-A'மனிதர்' என்று வகைப்படுத்தப்படுகின்றனர். பதைபதைப்பும் படபடப்பும் நிறைந்த மன இறுக்க வாழ்க்கை இந்த 'TYPE - A மனிதரின்' வாழ்வு. தாங்கள் சுறுசுறுப்பாக இருக்கின்றோம் -ஒரு நிமிடத்தையும் வீணாக்க மாட்டோம் -என்று பொய்யான வீம்பம் உள்ள இந்த மனிதர்களுக்கு இரத்த அழுத்தம், நீரிழிவு, இதயநோய் என்பன-தன்னை மதிக்காத மனிதருக்கு- இயற்கை தரும் பரிசுகள்.

நீங்கள் மெல்ல புதிய வாழ்க்கைக்கு திரும்பவேண்டும். பசித்தால் ஒழிய சாப்பிடக்கூடாது. திருவள்ளுவரே 'அருந்தியது அற்றது போற்றி உணின் என்ற குறளில் -முதல் உண்ட உணவு சமிபாடடைந்த பின்னரே அடுத்த உணவை உண்கின்றாரோ அவர்களை நோய் நொடிகள் அணுகாது என்று கூறியுள்ளார். காரியாலயத்தில் பணிபுரியும் உங்களுக்கு இது கஷ்டமாக இருந்தாலும்- உண்ணும் பொழுதிலாவது அமைதியாக இருந்து உண்ணப் பழகுங்கள்.

மூளையில் ஒரு பகுதியில் SATIETY CENTRE என்று ஒன்று உண்டு. எமக்கு பசி உணர்வு ஏற்பட இந்த பகுதியே பணிபுரிகின்றது. உணவு உண்டதும், இரத்தத்தில் சர்க்கரைச் சத்து அதிகரிக்கவும்-இந்த பகுதி 'திருப்தி' பெற்றதும் பசி உணர்வு அடங்கிவிடும். நீங்கள் உங்கள் உணவை அவசரப்பட்டு சாப்பிடும் போது 'திருப்தி' பெறும் இந்த பகுதி-முழுமையாக திருப்தி பெறாததால்- உணவு சமிபாடடைய தேவையான நொதியங்கள், சரியான நேரத்தில், சரியான அளவில் சுரக்காது. இதனால் உணவு முழுமையாக சமிபாடு அடையாது விடும். தொடர்ந்து இப்படி நடைபெற்றுக் கொண்டிருந்தால்-சரியாக சமிபாடடையாத உணவினால்-அஜீரணம், வயிற்று உப்பிசம், வாயுத்தொல்லை ஏற்பட்டு-இரப்பை புண், இரப்பை புற்று நோய் என்பவை ஏற்படலாம். எனவே உங்கள் பழக்கத்தை கட்டாயம் மாற்ற வேண்டும். மேல்நாடுகளில் உங்களைப் போன்ற மேல் நிலை உத்தியோகத்தர்கள் - தங்கள் வர்த்தக பேச்சு வார்த்தைகளை-மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டு தான் நடத்துவார்கள். அவர்களது மதிய உணவு நேரம் என்பது குறைந்தது இரண்டு மணி நேரமாவது எடுக்கும். இப்படி மெல்ல மெல்ல உணவை முற்றாக திருப்தி பெறுவதால்- அதிக உணவை குறைந்த நேரத்தில் உண்ணும் ஆசை வராது. எடையும் போடாது.

**கேள்வி:** வயது 28. நான் ஏழு மாத கர்ப்பமாக இருக்கின்றேன். ஒரு நாள் இரவு முழுவதும் வாந்தி ஏற்பட்டது. அடுத்த நாளிலிருந்து எனது தொண்டையில் தீராத வலி. எதையும் உண்ணுவதற்கோ-குடிப்பதற்கோ முடியவில்லை. இப்படி அடிக்கடி ஏற்படுகிறது. பரிகாரம் கூறவும்.

**பதில்:** நீங்கள் உடனடியாக ஒரு SCAN பரிசோதனை, சிறுநீர் KETONES பரிசோதனை, LIVER FUNCTION TESTS எனப்படும் கல்லீரல் செயல்பாடு பரிசோதனை SERUM ELECTROLYTES பரிசோதனை என்பவை செய்யவேண்டும். இப்படி வாந்தி ஏற்படுவதற்கு பொதுவாக சமிபாடு குறைவு காரணமாக இருந்தாலும் -இரட்டைக் குழந்தைகள், அதிஉயர் இரத்த அழுத்தம், தொப்புள் கொடி கோளாறு இரத்தவகை ஒவ்வா கோளாறு (RH INCOMPATIBILITY) அல்லது பெரிய சிசு என்பவை கூட காரணமாக இருக்கலாம். இப்படி அடிக்கடி வாந்தி ஏற்பட்டால் உடலில் நீர்த்தன்மை இழப்பை ஈடுசெய்ய இரத்த நாளம் மூலம் திரவங்கள் பாய்ச்சப்படவேண்டும் வாந்தியின் காரணமாக -தாகம், தொண்டை வரட்சி என்பவை ஏற்படின் உடனடியாக மருத்துவமனையில் சேர்த்து கவனிக்கப் படவேண்டும். *

> **Pospinor-2**
> மார்ச் 28 ஆம் திகதி வார இதழ் மருத்துவ ஆலோசனைப் பகுதியில் Morning after pills குறித்து டாக்டர் எஸ். அருள் ராமலிங்கம் பிரஸ்தாபித்திருந்தார். இதன் மருத்துவப் பெயர் Pospinor-2 என்று அவரால் தெரிவிக்கப்படுகிறது.



# சந்தோஷி

விஜய் ரி.வியில் 'அனு அளவும் பயமில்லை' என்னும் நிகழ்ச்சியில் பங்குபற்றிய சந்தோஷி பற்றி:-

பெயர் : சந்தோஷி
நடிப்பு அனுபவம் : 10 வருடங்கள்
முதல் சீரியல் : வாழ்க்கை
மொத்த சீரியல்கள் : 40
தற்போது : வாடகை வீடு, இளவரசி.
பிடித்த சீரியல் : அரசி
பிடித்த சீரியல் நடிகை : ராதிகா
கனவு கதாபாத்திரம் : ஆக்ஷன் ஹீரோயின்.

''என்னுடைய கணவர் பெரோஸ் என்னோட நெருங்கிய நண்பர். நாங்க இரண்டுபேரும் 4வருடங்கள் நண்பர்களாக பழகி கல்யாணம் பண்ணிக்கிட்டோம். காதலுடன் நட்பும் இருப்பதால் கல்யாண வாழ்க்கை சந்தோஷமாக செல்கிறது'' - என்கிறார்.

# மகேஸ்வரிக்கு கல்யாணம்!



நட்புடன் நம் மனதைக் கொள்ளை கொண்டிருக்கும் இசையருவி தொகுப்பாளினி மஹேஸ்வரிக்கு கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறது. ஜூன் மாதம் டும்டும்டும்!

இவ்வளவு சீக்கிரம் கல்யாணம் நிச்சயமாகும் என்று நானே நினைக்கலை.சுசு வெட்கப்படுகிறார் மஹி.

நண்பரை கல்யாணம் செய்து கொள்வது தான் இப்போதைய டிரெண்ட். என்னுடைய சிநேகிதி மூலமாக அறிமுகமான வெங்கட், என்னுடைய நண்பன். ஏழு மாதங்களாக நல்ல நண்பர்களாக இருந்தோம். ஒருமுறை இரவுச் சாப்பாட்டுக்காக வெளியே போன போது கல்யாணத்தைப் பற்றி பேசினார். இரண்டு வருஷம் காத்திருக்க வேண்டும் என்று சொன்னேன். அடுத்த மாதமே கல்யாணம் செய்ய வேண்டும் என்று தீர்மானமாகச் சொன்னார். இவருடைய வருங்காலக் கணவர் இவர் தொகுத்து வழங்கிய அசத்தப் போவது யாரு நிகழ்ச்சியின் ரசிகர்.

'இவர்கள் தொகுத்து வழங்கும் ஸ்டைல் பிடிக்கும்... பார்த்துப் பழகியவுடன் கல்யாணம் பண்ணிக்க வேண்டும் என்று நினைத்தேன்' என்று சொல்லும் வெங்கட், சென்னையில் சொந்தமாக தொழில் செய்கிறார். கல்யாணத்திற்குப் பிறகு தனிக் குடித்தனம் நடத்த இப்பவே சொந்தமான வீடும் ரெடி!




# சக்தியின் பட்டுச்சேலை பரிசு

சக்தி தொலைக்காட்சி தன்னை ஒரு சிறந்த தொலைக்காட்சி என்று சொல்லிக் கொள்வதை சில சமயங்களில் ஏற்றுக் கொள்ள முடியாதிருக்கின்றது. அண்மையில் (18.03.2010) பட்டுச்சேலை பரிசு பெறுவதற்காக நான் பன்னிப்பிட்டியில் அமைந்திருக்கும் சக்தி தொலைக்காட்சி நிறுவனத்துக்கு காலை 8.30 மணிக்குச் சென்றிருந்தேன். என்னைப் போல நூற்றுக்கணக்கான பரிசு பெறுபவர்களும் வந்திருந்தார்கள். வெயிலில் காத்திருந்து உள்ளே சென்றோம். நானும் ஏதோ குளிரூட்டப்பட்ட மண்டபத்தில் நிகழ்ச்சி நடக்கு என்றுதான் நினைத்தேன். ஆனால் நிலையத்தின் முன்பாக வாசலில் நாற்காலிகள் போடப்பட்டு நிகழ்ச்சி நடக்க ஏற்பாடு செய்யப்பட்டது. நாங்கள் அமர்ந்திருக்கும் இரு பக்கங்களிலும் வெயில் எங்களைச் சூடாக்கியது. சக்தி என்பது விலாசமான தொலைக்காட்சி நிறுவனமாகும். இந்த நிகழ்ச்சியை ஒரு சிறிய மண்டபத்திலாவது நடாத்திருக்க வேண்டும். அதைவிடுத்து பிச்சை கொடுப்பது போல வாசலில் வைத்து பரிசு கொடுப்பதை, அங்கு வந்த அனைவருமே ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனோதானோ என்று இந்த நிகழ்ச்சியை நடாத்திய சக்தி நிர்வாகத்துக்கு எங்களது கவலையைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சக்தி சுப்பர் ஸ்டார் சீஸன் - 3 ஐ தொகுத்து வழங்கிய சங்கர் ரசிகர்களை வெறுப்பூட்டினார். கஜமுகன் தன் பணியை செவ்வனே செய்தார். அடுத்து நாகவள்ளி நாடகத்தை இடையில் நிறுத்திவிட்டு, அதற்கு பதிலாக சக்தி பெஸ்டிவல் என்ற, ஏற்கனவே மேடையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறார்கள். ஆவலோடு பார்த்து வந்த நாடகத்தை நிறுத்தினால் ரசிகர்கள் என்ன நினைப்பார்கள். சக்தி நிர்வாகம் தாங்கள் நினைத்ததை நடாத்துவதினால் ரசிகர்கள் வெறுப்படைகிறார்கள். ரசிகர்களை சக்தி திருப்த்திப் படுத்தினால் மாத்திரமே சக்தியோடு இணைந்திருப்போம்.

எம். பாலகிருஷ்ணன்
வெள்ளவத்தை





மக்கள் மனமறிந்த மக்கள் வங்கி வடக்கிற்கு
புதிய யுகம் ஒன்றை கொண்டு வருகின்றது...



PEOPLES E-REMITTANCE மற்றும் SWIFT சேவைகளினூடாக வெளிநாட்டு பணத்தை உடனடியாகவும் வேகமாகவும் வடக்கு பிரதேச மக்கள் வங்கிக் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களினூடாக இந்நாட்டிற்கு அனுப்பும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் அதிக கிளைகளை கொண்ட மக்கள் வங்கி வெளிநாட்டு பணப்பரிமாற்ற சேவைகளுடன் இணைந்து மிகவும் இலகுவாகவும், வேகமாகவும், நம்பகரமாகவும் பணப் பரிமாற்றல் சேவையை வடக்கில் மாத்திரமன்றி நாடுமுழுவதும் வழங்கி வருகின்றது.

வெளிநாட்டுப் பணத்தை - அக் கணமே தரும் தோழன்
மக்கள் வங்கியின் ஈ-ரெமிட்டன்ஸ் சேவை
PEOPLE'S REMITTANCE
QUICK & EASY

மக்கள் வங்கி
இல. 59, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10, இலங்கை.
தொலைபேசி: +94 11 2437725
மின்னஞ்சல்: fastcash@peoplesbank.lk
றேணுகா:- +9477 7317936

AA- Brand Finance Rating, A(lka) Fitch Rating
மக்கள் வங்கி
2009 2009
www.peoplesbank.lk




**நோஜிதா,**
**வவுனியா.**

**கேள்வி:-** கடந்தகால வரலாறு மட்டுமே ஓர் இனத்தின் பலமாக அமையுமா?

**பதில்:-** தமிழ், முஸ்லிம்களின் வரலாறு பற்றி எத்தனையோ ஆய்வு நூல்கள் எழுதப்பட்டுள்ளன. இப்போது அவை எல்லாம் கவைக்கு உதவாதவையாகப் போய் விட்டன. வரலாற்றுப் பலத்துக்கு அரசியல் ரீதியான எந்த முக்கியத்துவமும் தற்போது கிடையாது. இலங்கையில் வாழும் சிறுபான்மையினரை இறைவன் தான் காப்பாற்ற வேண்டும்.




**நீருஷா,**
**கண்டி.**

**கேள்வி:-** கவிஞனுக்கும் புலவனுக்கும் வித்தியாசம் என்ன?

**பதில்:-** கவிஞர்கள் கவிதை புனைகிறார்கள்; புலவர்கள் செய்யுள் இயற்றுகிறார்கள்.

**நாதன்,**
**பெரியகல்லாறு.**

**கேள்வி:-** இந்த நாடு ஆக்கப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறதா? அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கிறதா?

**பதில்:-** எக்கட்சி வந்தாலும் பெரும்பான்மை இனத்தவர் ஆக்கப் பாதையில் தான் பயணிப்பார்கள்; சிறுபான்மையினரின் கதி அதோ கதி தான்.

**எஸ்.சிவகுமாரன்,**
**கல்லடி.**

**கேள்வி:-** திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிரா?

**பதில்:-** அது அந்தக் காலம். இப்போது ஐந்து மாதத்தில் கூட கருகக் கூடிய பயிராக மாறிவிட்டது போல் தோன்றுகிறது.

**-ஆர்.ரகுநாதன்,**
**பசறை.**

**கேள்வி:-** உங்கள் மகள் சமையலில் புலியா பித்தரே?

**பதில்:-** ஆமாம். என் மகள் சமையலில் எல்லாம் புளிதான்.

**என்.பரமசிவம்,**
**காரைநகர்.**

**கேள்வி:-** இப்போது டாக்டர்கள் கொள்ளைக்காரர்களைப் போல் மாறி விட்டார்கள் என்று என்னுடைய நண்பன் சொல்கின்றான். இது சரியா?

**பதில்:-** இப்பொழுது நோய் என்று வந்துவிட்டால் இருக்கின்ற கொஞ்ச நஞ்ச செல்வமும் காலியாகிவிடக்கூடிய நிலைமைதான் காணப்படுகிறது. டெஸ்டிங் என்றும் மருந்து என்றும் ஏகப்பட்ட செலவுகள் கையைக் கடிக்கின்றன. இந்தியா, இலங்கை என்றில்லாமல் அமெரிக்காவிலும் இதே நிலைமைதான். மருத்துவத்துக்கு செலவழிக்க முடியாமல் மரணமடைவோர் உலகில் பல கோடிப்பேர் இருக்கிறார்கள். இதற்கு முக்கிய காரணம் மருத்துவம் இலாபம் தரக்கூடிய வியாபாரமாக ஆகிவிட்டதே.

**எஸ்.எம்.ஹனீபா,**
**திஹாரி.**

**கேள்வி:-** இன்றுள்ள மோசமான கலாசாரம் என்று எதைக் கூறலாம்?

**பதில்:-** வயதை மறைக்க மூக்கைத் திருத்தியும் மார்பகங்களைப் பெரிது படுத்தியும் செயற்கையான இளமையை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ளும் கலாசாரத்தைத் தான். முதுமை என்பது ஒரு சாபக்கேடா? மனித வாழ்க்கைக் கட்டங்களில் ஒன்று. அதை மனப்பூர்வமாக வரவேற்பது இழிவானதா?

**சாந்தி,**
**கொழும்பு- 15.**

**கேள்வி:-** பித்தரே உங்கள் வீட்டில் ஏ.ஸி இருக்கிறதா?

**பதில்:-** இல்லவேயில்லை. ஏ.ஸி அறைக்குள் கோடிக்கணக்கான பக்டீரியாக்களும் வைரஸ்களும் இருப்பதால் ஏர்கண்டிசன் எனக்கு வேண்டவே வேண்டாம்.

**என்.ஆறுமுகதாஸ்,**
**திருநெல்வேலி.**

**கேள்வி:-** சீனா இன்னுமும் இரும்புத் திரைக்குள்ளா இருக்கிறது?

**பதில்:-** இந்த இரும்புத்திரை மறைப்பு பொருளாதாரம், தொழில், முதலீடு போன்றவற்றில் விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால், கருத்துச் சுதந்திரத்தின் கதவுகள் நம்நாட்டைப் போல அடைக்கப்பட்டுத் தான் இருக்கின்றன.

**எஸ்.பி.அருளப்பு,**
**நெடுந்தீவு.**


**கேள்வி:-** ஓஹோ என்று சம்பாதிக்கக் கூடிய ஒரு துறையைச் சொல்லுங்கள் பித்தரே.

**பதில்:-** International School ஒன்று ஆரம்பியுங்கள். கல்வித்தரத்தைப் பற்றிக் கவலையே படத்தேவையில்லை.

**பிரதீப்பா,**
**கொழும்பு.**

**கேள்வி:-** தாம்பத்திய வாழ்க்கை எத்தகையது பித்தரே?

**பதில்:-** திருமணமான முதல் ஆண்டில் கணவன் பேசுகிறான்; மனைவி கேட்கிறாள். இரண்டாம் ஆண்டில் மனைவி பேச, கணவன் கேட்கிறான். இடைக்காலத்தில் குழந்தையின் மழலையை இருவரும் கேட்கிறார்கள். நான்காம் ஆண்டிலிருந்து இருவரும் பேசுவதைப் (சண்டை) பக்கத்து வீட்டுக்காறர்கள் கேட்கிறார்கள்.




**தேவிகா,**
**கொழும்பு- 15.**

**கேள்வி:-** பெண்களைப் பொன் என்று ஏன் அழைக்கிறார்கள்?

**பதில்:-** ஒவ்வொரு பெண்ணுமே பல்லாயிரக்கணக்கான ரூபாய் கொடுத்து வாங்கிச் சேர்க்கும் பொன்னுக்கு இணையானவள் என்று கருதப்படுவதால்தான் அப்படி அழைக்கப்படுகிறார்கள்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 413

சொற்சிலம்பம் 411 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் திகதி 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஏப்ரல் 25 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 411 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு- 14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 411

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 பி | ர | 2 மா | 3 த | ம் | ■ | 4 ஊ | 5 வி |
| ர | ■ | 6 த | ரி | ■ | 7 கா | த | ல் |
| 8 சா | 9 ம | ர் | த் | 10 தி | ய | ம் | ■ |
| 11 த | லை | ■ | 12 தி | ட | ம் | ■ | 13 சா |
| ம் | ■ | 14 கு | ர | ல் | ■ | 15 க | ண் |
| ■ | 16 க | ட | ம் | ■ | 17 கா | ண | ■ |
| 18 ம | ன | ம் | ■ | 19 ப | டு | க் | 20 கை |
| 21 து | ம் | பி | க் | கை | ■ | 22 கு | தி |

## சொற்சிலம்பம் போட்டி இல. 411

### பரிசு பெறுவோர்

1. ஆர்.சிவப்பிரியா, 21பி கனகரட்ணம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
2. எம்.பி.அகிலன் 39, கல்லூரி வீதி, திருகோணமலை.
3. எஸ்.என்.மணி 106 மகிந்த மாவத்தை, நுவரெலியா.

## சொற்சிலம்பம் போட்டி இல. 413

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| | ■ | 9 | | | 10 | | |
| 11 | 12 | | | ■ | 13 | | ■ |
| 14 | | | ■ | 15 | | ■ | 16 |
| 17 | | ■ | 18 | | ■ | 19 | |
| | ■ | 20 | | | 21 | | |
| ■ | 22 | | | ■ | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 413

**இடமிருந்து வலம்**

1. செருக்கு/ பெருமை
5. பிழை அல்ல
7. ஒரு திசையின் குறுகிய சொல்
8. கூட்டல் குறி/ சேரு
9. ஒரு பிரபந்த வகை
11. காவன்யன்
13. வேகம்
14. ரகம்
15. தாயிடம் குடிப்பது
17. சிரசு
18. தாண்டு
19. வடிவம்
20. வியாபாரத்துக்கு இது தேவை
22. வேகம்
23. மின்சாரத்துக்கு முந்திய காலத்தில் பாவித்த விளக்கு வகை

**மேலிருந்து கீழ்**

1. நிகழக்கூடாதது
2. எரிந்த பின்னர் மிஞ்சுவது
3. புலவன்
4. தேரிழுக்கும் கயிறு
5. விடாய்
8. சேறு
9. கை
10. வெளிச்ச வேளை
12. சிசு/ சிறுபிள்ளை
15. படிப்பது இதனை
16. இனிப்புத் தாவரம்
18. திருட்டு
19. பசளை
20. விரை (ப் பை)
21. முக்கனிகளில் ஒன்று

## சொற்சிலம்பம் போட்டி இல. 411

### பாராட்டுப் பெறுவோர்

01. திருமதி. பி.கணேஸ் கொழும்பு- 06.
02. ஜெனிட்டா பிரசாந் கெங்கல்ல.
03. ரஞ்சன் தர்ஷினி கொழும்பு- 13.
04. ஆறுமுகம் பிள்ளை குருநெனிய.
05. செபமனி அல்பிறெட் மானிப்பாய்.
06. ஜே.ஏபிரகாம் நுவரெலியா.
07. எம்.ஜே.பெர்னாந்து கொழும்பு- 13.
08. ஆர்.பிரதீபா வவுனியா.
09. எஸ்.பிரகதீஷ் கொழும்பு- 13.
10. பி.வைத்தியநாதன் கொக்குவில்.
11. ஏ.நிருஷா கண்டி.
12. எம்.முருகப்பிரசாத் கேகாலை.
13. எஸ்.உஷா திருகோணமலை.

# கூத்து முடிந்தது இனி...



இத்தனைநாளும் நடந்தேறிய எல்லாக் கூத்துக்களும் ஏப்ரல் 8ஆம் திகதியோடு முடிவுக்கு வந்துவிட்டன. வேட்பாளர்கள் எல்லோரும் ஆடிய ஆட்டங்களும், போட்ட வேஷங்களும் ஓய்ந்துவிட்டன. இனிமேல்தான் அவர்களின் உண்மையான முகங்களை மக்கள் தரிசிக்க முடியும். கொஞ்ச நாள்களாக அவர்கள் ஆடிய தேர்தல் நாடகத்தில் மயங்கி வாக்களித்த மக்களுக்கு அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்ற கேள்விக்கு இனி வரப்போகின்ற நாள்களில் மிகத் தெளிவான பதில்கள் கிடைக்கப் போகின்றன.

எதிர்பார்த்தபடியே ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளாவிய ரீதியில் அமோக வெற்றியீட்டியிருக்கின்றது. அனேக இடங்களில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை விடவும் இரட்டிப்பு மடங்கு ஆசனங்களை சுவீகரிக்க ஆளும் தரப்பால் முடிந்திருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த வாக்குகளை விடவும் பொதுத் தேர்தலின் போது ஆளும் தரப்புக்கு கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை புள்ளிவிவரங்கள் சுட்டி நிற்கின்றன. இத்தகைய படு தோல்வியினை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்க்க வில்லை. ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியிட்டதில் குளறுபடி, எதிர்க்கட்சிகள் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகக் களம் இறங்கிய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை கைது செய்தமை போன்ற திருப்பமான சம்பவங்கள் மக்களிடத்தே அரசு மீதான அதிருப்தி அலைகளையும் எதிர்க்கட்சிகள் மீதான அனுதாபத்தையும் பெரியளவில் உண்டுபண்ணியிருந்ததாகவே ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் எண்ணியிருந்தன. ஆனாலும் இத்தகைய கருதுகோள்கள் எவையும் யதார்த்தத்தில் பொருந்துவதில்லை என்பதை தேர்தல் முடிவுகள் வெட்ட வெளிச்சமாக்கியிருக்கின்றன. அரசியல் உள்நோக்கங்களோடு நிகழ்கின்ற எத்தகைய பாராதூரமான சம்பவங்கள் குறித்தும் அலட்டிக் கொள்ளாதவர்களாகவே இலங்கை மக்களில் பெரும்பாலானோர் மாறியிருக்கின்றனர்.. அடிப்படை வாழ்வுக்கான நிரந்தரமான கட்டமைப்புக்களை உருவாக்குவதிலும், அவற்றினைத் தக்கவைத்துக் கொள்வதிலும் மட்டுமே அக்கறை செலுத்துபவர்களாகவும் புற நடைமுறைகள் பற்றி எவ்வித அக்கறையும் காட்டாதவர்களாகவும் இலங்கை மக்கள் மாறியிருப்பதையே தேர்தல் முடிவுகள் மூலம் அறிய முடிகின்றது. இல்லாவிட்டால் பெரும்பான்மை இன மக்களின் யுத்த நாயகனாக ஒரு மகோன்னத இடத்தில் இருந்த சரத் பொன்சேகாவை நாயை விடக் கேவலமாக இழுத்துச் சென்ற போது பொங்கியெழுந்து, இந்தத் தேர்தலில் ஆளுந்தரப்பை வீட்டுக்கு அனுப்பியிருப்பார்கள். ஆனால் அவ்வாறு நிகழாமல் அரசுக்கு வெகுமதி போல இன்னும் பல ஆசனங்களையே வாக்காளர்கள் வழங்கியிருக்கிறார்கள். இதனால் அரசாங்கம் செய்த அத்தனை செயற்பாடுகளும் மிகச் சரியானவை என்ற அங்கீகாரத்தை மக்கள் வழங்கியிருப்பதாகவே ஆட்சியாளர்கள் எண்ணக் கூடும். ஆனால் உண்மை அதுவன்று.

இன்னும் ஆறு ஏழு வருடங்களுக்கு மஹிந்த குடும்பத்தின் ஆட்சியே இலங்கையில் நீடிக்கப்போகிறது என்பதை ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டிவிட்டன. எனவே விரும்பியோ விரும்பாமலோ மஹிந்த குடும்பத்தின் தயவு அனைவருக்கும் இன்னும் ஆறேழு வருடங்கள் தேவைப் படும். எனவே வேகத்தை மட்டுமே கைக்கொள்ளாமல் விவேகத்தோடும் செயற்படுவதே மிக நிம்மதியான வாழ்வுக்கு உத்தரவாதத்தை அளிக்கக்கூடும் என்பதை மக்கள் மிக நன்றாகவே விளங்கிவிட்டார்கள். எனவே என்னதான் துயரங்கள் துன்பங்கள் போன்றன மஹிந்த சிந்தனையாளர்களால் ஏற்பட்டாலும் கூட அவற்றினையெல்லாம் சகித்துப் போகக்கூடிய தன்மை வாய்ந்தவர்களாக இலங்கைத் திருநாட்டின் பிரஜைகள் தம்மைத் தகவமைத்துக் கொண்டுள்ளனர். இதனால் தான் ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் எவ்வித முன் அறிவித்தலுமின்றி, ஒரு நாட்டின் இராணுவத் தளபதியாக இருந்து பெருவெற்றிகளை ஈட்டிக்கொடுத்த சரத் பொன்சேகா கைது செய்யப்பட்ட போது அது பற்றி மேலதிக போராட்டங்களிலோ, தம்முடைய கருத்துக்களை வெளிப்படுத்துவதிலோ மக்கள் பின்னடித்தனர். அவர்களுக்குத் தேவை மிகச் சிறந்த வாழ்வுக்கான அத்திபாரம் ஒன்றை அமைப்பது மட்டுமே இதற்காக தம்முடைய சுருதியைக் கூட மாற்றிப் பாடும் வல்லமை இவர்களுக்கு வாய்த்திருக்கின்றது. அதுவே இன்றைய யதார்த்தமும் ஆகும். தக்கனப் பிழைத்தல் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தொடர்ச்சியான வாழ்க்கையின் இயங்குதலுக்கு சூழலுக்கேற்ற வாறு தம்மை இசைவாக்கம் செய்து கொள்ளும் உயிரிகள் பற்றி அறிந்திருப்பீர்கள். அத்தகைய உயிரிகள் போலவே இப்போது இலங்கை மக்களும் மாறியிருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்திலும் இத்தகைய நிலையே உருப்பெறத் தொடங்கியிருப்பதை தேர்தல் முடிவுகள் மூலம் அறிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. இம்முறை யாழ்ப்பாணத் தேர்தல் களத்தில் 9 பேரைத் தெரிவு செய்வதற்காக 324 பேர் களத்தில் குதித்தனர். அவர்களில் பெரும்பாலானோருக்கு ஆளும் தரப்பு ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தையும் வழங்கியது. அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் பணம் வாங்கிக்கொண்ட நன்றிக்கடனுக்காக வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர். பின்னர் தேர்தல் நடைபெறுவது தொடர்பாக எவ்வித பிரசார நடவடிக்கைகளிலும் இறங்கவில்லை. ஆயினும் ஒரு சிலர் வாங்கிய காசுக்கு வஞ்சகம் செய்யாமல் பத்திரிகைகளில், நோட்டீஸ்களில் தம்முடைய பிரசார வாசகங்களைப் பொறித்து விளம்பரம் செய்யத் தொடங்கினர். அப்படி பெருமெடுப்பில் பிரசாரத்தை மேற்கொண்ட சுயேச்சைகளும் பிரதான கட்சிகளும் கடைசியில் மண்ணைக் கௌவ வேண்டியிருக்கும் என்பதை ஏற்கனவே உணர்ந்து தான் இருப்பார்கள். எனினும் அவர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்ட உண்மையான நோக்கத்தை மிகக் கச்சிதமாக நிறைவேற்றிவிட்டார்கள் என்பதை தேர்தல் முடிவுகள் சொல்லாமல் சொல்லி நிற்கின்றன.

சுயேச்சைகளும் மற்றும் ஒரு சில கட்சிகளும் இவ்வாறு கச்சையை இறுகக் கட்டிக்கொண்டு ஒன்றையொன்று முட்டித் தள்ளிக்கொண்டு தேர்தல் களத்தில் இறங்காவிட்டால் யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்த ஆசனங்களின் எண்ணிக்கை இன்னமும் அதிகரித்திருக்கும் என்று நண்பர் ஒருவர் கூறினார்.

ஆனாலும் கட்சிகளை விடவும் மிக மோசமான ஏமாற்றத்தை தந்தவர்கள் குடாநாட்டு மக்கள் என்பதையும் மறந்துவிடலாகாது. நாடாளாவிய ரீதியில் ஜனாதிபதித் தேர்தலைவிடவும் பொதுத் தேர்தலின் போது குறைவான வாக்களிப்பு வீதமே இடம்பெற்றிருப்பதாக தேர்தல் திணைக்களத்தின் அறிக்கைகள் கூறுகின்றன. ஆனாலும் இத்தகைய சாட்டுக்களை எல்லாம் தாண்டி மிகத் தெளிவாக உற்றுநோக்கினால் இலங்கையில் அனைத்துப் பகுதிகளை விடவும் - படித்தவர்கள், பண்பானவர்கள் என்று மற்றவர்கள் புளுகுகின்ற - யாழ்ப்பாணத்தில் தான் மிக வறுமையான வாக்களிப்பு வீதத்தை அவதானிக்க முடிகின்றது. இது மக்களின் மனங்களில் ஏற்பட்ட விரக்தியால் கூட விளைந்திருக்கலாம். எப்போதும் தேர்தல், தேர்தல் என்று சொல்லி காசைக்கரியாக்கிறார்களே தவிர உருப்படியாய் ஒன்றும் செய்தபாடில்லை என்பதே அவர்களில் பலரின் ஆதங்கமாகவுள்ளது. அவர்களின் ஆதங்கம் நியாயமானதும் கூட. தேர்தல் காலங்களில் மட்டுமே தலையை நீட்டி இல்லாத வாக்குறுதிகளை எல்லாம் தந்து ஏமாற்றுகின்ற அரசியல் வாதிகளுக்கு தக்கபாடத்தை மக்கள் புகட்டத்தான் வேண்டும். ஆனால் அதற்காக ஒட்டுமொத்தமாக தேர்தலையே புறக்கணித்தல் என்பதோ, அல்லது வாக்களிக்காமல் வீடுகளில் படுத்துறங்குவதோ அரசியல் வாதிகளை திருத்தப் போவதில்லை. மாறாக அத்தகைய சுயநலமிக்க, மக்கள் சேவையில் விருப்பற்ற அரசியல்வாதிகள் இத்தகைய குறைவான வாக்களிப்பு வீதத்தால் இன்னும் நன்மையடையவே செய்வார்கள். ஏனெனில் குறைவான வாக்குகள் அளிக்கப்படும் சமயத்தில் ஒருசில ஆயிரக்கணக்கான வாக்குகளைப் பெற்றாலே நாடாளுமன்றப் பதவியை அடைந்துவிடலாம். இதனால் நாங்கள் தண்டிக்க நினைக்கும் அரசியல் வாதிகளின் நாடாளுமன்றக் கனவை மிகச் சுலபமாக நிறைவேற்றுவதற்கு வாக்களிக்காமல் விடுவதன் மூலம் நாமே வழிசமைத்துக் கொடுக்கின்றோம். எனவே 'குளத்தோடு கோபித்துக் கொண்டு எதையோ கழுவாமல் விடுவது போல ' தவறான அரசியல் வாதிகளைத் தண்டிக்கின்றோம் என்று நினைத்துக்கொண்டு எமது இனத்தின் அரசியல் எதிர்காலத்திற்கே ஆப்பு வைக்கின்ற செயற்பாடாகவே இத்தகைய வாக்களிக்காமல் விடுகின்ற செயல் அமைகின்றது.

இனிமேலாவது தவறுகளைத் திருத்துவோம். எமது இனத்தின் அரசியல் பலத்தினைப் பெருக்குவோம். கட்டாயம் வாக்களிப்போம்.

-பிரமன்-





***

# ராசி பலன்

12-04-2010 முதல் 18-04-2010 வரை

அஸ்வினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்

*எதையும் யதார்த்தமாக செய்யும் மேஷ ராசி அன்பர்களே!*

## மேஷம்



விவேகத்துடன் செயல்பட்டு வெற்றியை அடைய வேண்டிய காலம் இது. பயணங்களையும், கொடுக்கல் - வாங்கலையும் தக்க ஆலோசனையுடன் செய்வது நன்மை தரும். நிதானித்து செய்தால் பிரச்சினையின் போது நண்பர்கள் உறுதுணையாக இருப்பார்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணப்புழக்கம் குறைவாக இருந்தாலும், பாராட்டுக்கும், புகழுக்கும் குறைவு இருக்காது. சுயதொழில் செய்வோர் விறுவிறுப்பாக செயல்பட வேண்டிய நேரம் இது. மனச் சுமைகள் குறையும். போட்டியாளர்களை எளிதில் சமாளிப்பீர்கள். குடும்பத்தில் சிறு சிறு தொல்லைகள் தோன்றி மறையும். வயதானவர்களின் ஆரோக்கியத்திற்கான மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். உடன் பிறந்தவர்கள் தக்க நேரத்தில் உறுதுணையாக இருப்பார்கள்.

கலைஞர்கள் ஓய்வின்றி உழைக்க வேண்டிய சூழ்நிலை உண்டாகும். வெளிர் பயணம் ஒன்று தங்களைத் தேடி வந்து, லாபத்தைத் தரும். திடீர் நண்பர்களை நம்ப வேண்டாம்.

சிறப்புப் பரிகாரம்: திங்கட்கிழமை மகாலட்சுமியை வாசனைப்பூக்களால் அர்ச்சிக்கவும். அதிர்ஷ்ட எண்கள்: 5,8,9, அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நீலம், அதிர்ஷ்டக் கிழமை: சனி

கார்த்திகை 2, 3, 4-ம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2

*தர்மசிந்தனை பெற்றுத் திகழும் ரிஷப ராசி அன்பர்களே!*

## இடபம்



உங்களது முயற்சிகளில் முழு வெற்றி கிடைக்கும். இருப்பினும் ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதை தவிர்ப்பதும், பணப் பரிவர்த்தனைகளில் கவனம் செலுத்துவதும் அவசியம். கடந்த காலத்தில் ஏற்பட்ட சங்கடம் ஒரு பெரிய மனிதரின் சந்திப்பால் தீரும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு, மேலதிகாரியின் போக்கு மனசஞ்சலம் தரும். வேலைப் பளு அதிகரிக்கும். சுயதொழிலில் உள்ளவர்கள் முக்கிய மாற்றங்களை அதிரடியாக செய்ய வேண்டி வரும். எதிர்பார்த்த உதவிகள் சற்று தள்ளிப் போகும்.

குடும்பத்தில் மறைமுகமாக இருந்த மனக்கசப்பு பெரியோர் அறிவுரையால் நீங்கும். தாய் வழி உறவினரால் ஒரு நல்ல செய்தி தங்களை தேடி வர வாய்ப்புண்டு. வேலைக்குச் செல்லும் பெண்களில் சிலர் இடமாற்றத்தை சந்திக்க வேண்டி வரும். கலைஞர்கள் புகழ் பெற்ற நிறுவனங்கள் உதவியால் வருவாயும் பாராட்டும் பெறுவார்கள்.

சிறப்புப் பரிகாரம்: செவ்வாய்க்கிழமை அன்று முருகப்பெருமானை பூஜித்து, சண்முக கவசம் சொல்வது நன்மை தரும். அதிர்ஷ்ட எண்கள்: 3,5,9, அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்டக் கிழமை: வியாழன்

மிருக சீரிடம் 3, 4-ம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம்பாதங்கள்

*உற்சாகமான எண்ணம் கொண்ட மிதுன ராசி அன்பர்களே!*

## மிதுனம்



உங்கள் செயல்களில் நல்ல முன்னேற்றம் தென்படும். இருப்பினும், கடன் விஷயங்களிலும், முக்கிய ஆவணங் களை கையாளுவதிலும் நிதானப்போக்கு அவசியம். திட்ட செயல்கள் தீவிர முயற்சிக்குப் பின் கைகூடும். நண்பர்கள் நல்ல நேரத்தில் உறுதுணை யாக இருப்பார்கள். எதிர்பார்த்தபடி பணம் வந்தாலும், செலவுகள் அதிகரிக் கும். சிறிய மருத்துவ செலவு ஒன்றை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சற்று கடினமாக உழைக்க வேண்டி இருக்கும். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும்போது சிந்தித்து செய்வது நன்மை தரும். எதிர்பாராத பாராட்டு தேடி வரும். என்றாலும், எதிலும் நிதானிப்பது நன்மை தரும்.

சுயதொழில் செய்பவர்கள் வரவுகளால் ஏற்றம் பெறுவார்கள். குடும்பத்தில் சலசலப்பு இருந்தாலும் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. நெருங்கிய சொந்தங்கள் வரவால் பகை மறையும்.

கலைஞர்கள் திறமையுடன் செயல்பட்டு புதிய வாய்ப்பைப் பெறுவார்கள்.

சிறப்புப் பரிகாரம்: செவ்வாய்க்கிழமை அன்று துர்க்கையை சிவப்பு மலர்களால் அர்ச்சிக்கவும். அதிர்ஷ்ட எண்கள்: 2,5,9, அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்டக் கிழமை: செவ்வாய்.

புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்

*கலை உணர்வும் கற்பனை வளமும் மிக்க கடக ராசி அன்பர்களே!*

## கடகம்



பெரிய மனிதர்களின் ஆதரவால் பலன் கிடைக் கும். பணவரவு மட்டும் சிறிது தள்ளிப் போகலாம். உத்தியோகஸ்தர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு இருந்தாலும், செயல்களில் கவனமாக இருப்பது அவசியம். சிறிய மன வருத்தங்கள் மனதுக்கு கவலை தரும். பேச்சுவார்த்தைகளில் நிதானம் தேவை.

சுயதொழில் செய்வோருக்கு பணத்தேவை அதிகரிக்கும். இருப்பினும், நண்பர்கள் உதவியால் இந்தப் பிரச்சினைகள் தீரும். கூட்டுத்தொழில் செய்வோருக்கு சிறிய திருப்பம் பெரிய பலனை தரும். குடும்பத்தில் கடன் விஷயங்கள் சற்று கவலையை ஏற்படுத்தும், சிறிய சேமிப்பு பெரிய லாபமாக அமையும். தாய்வழி உறவுகளால் நல்ல திருப்பம் உண்டு. பெண்கள் மனத் தளர்ச்சி நீங்கி மகிழ்ச்சியை சந்திப்பீர்கள். கலைஞர்கள் தொழிலில் வேகம் காட்டி எதிர்ப்பை சமாளிக்க வேண்டிய நேரம் இது. பொறுமையைக் கையாள்வதால் போட்டிகளை சமாளிக்கலாம். எதிர்பாராத உதவிகள் கிடைப்பதில் தாமதமாகும்.

சிறப்புப் பரிகாரம்: செவ்வாய்க்கிழமை அன்று கந்தசஷ்டி கவசம் சொல்லி முருகப்பெருமானை வணங்கவும். அதிர்ஷ்ட எண்கள்: 1,6,9, அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்டக் கிழமை: வெள்ளி

மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்

*தெளிவான சிந்தனை கொண்ட சிம்ம ராசி அன்பர்களே!*

## சிம்மம்



தடைகளைத் தாண்டி சிகரங்களைத் தொடும் வகையில் இந்த வாரம் அமையும். நல்ல மனிதர்களின் நட்பு திருப்பங்களை ஏற்படுத்தும். பண வரவுகள் தள்ளிப் போனாலும், பொருளாதார நெருக்கடி இருக்காது. மனதிற்கு இனிய செய்தி வெகுதொலைவில் இருந்து வரும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கூடுதல் உழைப்பும் கவனமும் தேவைப்படும். உடன் பணிபுரிபவர்கள் சரியான நேரத்தில் உதவி செய்வார்கள். சுயதொழிலில் வரவு அதிகரிக்கும். வாடிக்கையாளர்களோடு உறவு சுமுகமாக இருக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடல் தள்ளிப்போகலாம்.

குடும்பத்தில் சிறிய மனக்கசப்பு உண்டாகும். சகோதர வழி உறவினர் வருகையால் செலவுகள் அதிகரித்தாலும், சில பிரச்சினைகளுக்குத் தீர்வும் உண்டாகும். சுபவிரயங்கள் ஏற்பட்டாலும், அவை பிரிந்தவர்கள் சேர்வதற்கு ஏற்ற காலமாக அமையும். பெண்களுக்கு மருத்துவச்செலவு ஏற்படக்கூடும்.

கலைஞர்கள் புதிய பணிகளில் பொறுப்பு ஏற்கக் கூடிய வாய்ப்பைப் பெறுவார்கள். ஒப்பந்தங்களில் கவனம் தேவை.

சிறப்புப் பரிகாரம்: திங்கட்கிழமை மகாலட்சுமியை வழிபடுவது நன்மை தரும். அதிர்ஷ்ட எண்கள்: 1,5,7, அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்டக் கிழமை: திங்கள்.

உத்திரம் 2,3,4-ம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2-ம் பாதங்கள்

*மிடுக்கான நடைக்கு சொந்தக்காரரான கன்னி ராசி அன்பர்களே!*

## கன்னி



கடின உழைப்பின் பேரில்தான் இந்த வாரம் வெற்றிகள் பெற முடியும். ஆன்மிக தலங்களுக்கு செல்லும் வாய்ப்புகள் உண்டாகும். தனவரவுகள் மட்டும் சற்று தாமதமாக வரக்கூடும். அதேநேரத்தில் எதிர்பாராத செலவுகள் முன்நின்று வரவேற்கும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சலுகைகள் பெறக்கூடிய வாரமாக இது அமையும். இதுவரை தடைபட்டு வந்த சலுகைகள் தேடிவரும். பதவி உயர்வு மற்றும் இடமாற்றங்களுக்கு திட்டமிடக்கூடிய வாய்ப்பு உண்டாகும். சுயதொழில் செய்வோருக்கு பணிகளில் பரபரப்பு கூடும். வாடிக்கையாளர்களிடம் இதுவரை இருந்து வந்த மனக்கசப்பு மறையும்.

குடும்பத்தில் எதிர்பாராத சுபச்செலவுகள் உண்டு. புதிய பொருட்களை வாங்கிக் குவிக்கும் வாய்ப்புகளும் உண்டு. பெண்களுக்கு பயணத்தால் மகிழ்ச்சி உண்டாகும். கலைஞர்களுக்கு பழைய ஒப்பந்தங்கள் தொல்லை தரும். சிறிய மனக்கசப்புகளை பொறுமையால் வெற்றி கொள்ள வேண்டி இருக்கும். பங்குச்சந்தையில் ஏற்ற இறக்கமான சூழ்நிலை காணப்படும்.

சிறப்புப் பரிகாரம்: இந்த வாரம் முழுக்க ஸ்ரீராம ஜெயம் எழுதி வரலாம். மகாவிஷ்ணு கோவிலுக்கு செல்வதும் நன்மை தரும். அதிர்ஷ்ட எண்கள்: 1, 3, 9, அதிர்ஷ்ட நிறம்: பச்சை, அதிர்ஷ்டக் கிழமை: புதன்

சித்திரை 3, 4-ம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதங்கள்

*திறமையான நண்பர்களை பெற்ற துலாம் ராசி அன்பர்களே!*

## துலாம்



உற்சாகமான செயல்களால் முன்னேற்றம் பெறுவீர்கள். புதிய அறிமுகங்கள் பழைய பிரச்சினைகளை தீர்க்க உதவும். எதிர்பார்த்த ஒரு விஷயம் கடிதம் மூலமாக மகிழ்ச்சி தரும். சொல்வாக்கும், செல்வாக்கும் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கடந்த காலத்தில் ஏற்பட்ட தவறுகளை சரிசெய்யக் கூடிய வாய்ப்பு உண்டாகும். சிந்தித்துச் செய்வதால் திடமான வெற்றியை அடைவீர்கள். சுயதொழில் செய்பவர்கள் எதிர்பார்க்கும் வருமானம் பெற தீவிர முயற்சிகள் செய்யும் நிலை வரும்.

குடும்பத்தில் சிறு சிறு சலசலப்புகள் ஏற்பட்டாலும் பெரிய அளவில் பிரச்சினைகள் வராது. சிலருக்கு குடியிருக்கும் வீட்டை மாற்றவோ, சொந்த வீட்டை புதுப்பிக்கவோ அவசியம் உண்டாகும். பெண்கள் எதிர்பாராத பண வரவால் பழைய பிரச்சினைகளை தீர்ப்பீர்கள். கலைஞர்கள் பொதுமக்கள் மத்தியில் பாராட்டுகள் பெறுவார்கள். பிரபல நிறுவனங்கள் தேடி வருவதால் பொருளாதார வசதி மேம்படும்.

சிறப்புப் பரிகாரம்: சனிக்கிழமை சனிபகவானை வணங்கி எள்ளன்னம் படைத்து வழிபடவும். அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9, அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்டக் கிழமை: புதன்.

விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை

*ஜோதிடத்தில் நம்பிக்கை கொண்ட விருச்சிக ராசி அன்பர்களே!*

## விருச்சிகம்



நீண்டநாள் எதிர்பார்த்த தகவல் கைகூடி வரும். திடீர் பயணத்தை சந்திப்பீர்கள். உறுதியான முடிவுகள் தற்போது உங்களை உயர்த்தி விடும். எதிர்பார்த்த நபர்கள் உங்களைத் தேடிவந்து உதவி செய்வார்கள். தொலைபேசி மூலம் கிடைக்கும் தகவல் மனமகிழ்ச்சியை தரும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, இடம் மற்றும் பதவி மாற்றம் உண்டாகும். நீண்ட நாட்கள் கவனிக்காமல் இருந்த பணி ஒன்றை விரைந்து முடிக்க வேண்டிய நிலை வரும். சுயதொழில் செய்பவர்கள் சற்று கவனத்துடன் செயல்பட வேண்டி இருக்கும். போட்டியாளர்களால் தொல்லை உண்டாகலாம். குடும்பத்தில் பணவரவு அதிகரிப்பதால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும் எதிர்பாராத செலவுகள் ஏமாற்றத்தைத் தரும்.

கலைஞர்கள் புதிய பணிகளில் கவனமாக ஈடுபட வேண்டி இருக்கும். யோசிக்காமல் செய்வதால் மற்றவர்கள் மனவருத்தத்தை சம்பாதித்துக் கொள்வீர்கள். பங்குச்சந்தை முதலீடுகள், எதிர்பார்த்த ஆதாயத்தை தராது. என்றாலும், நஷ்டத்திற்கு பங்குகளை விற்க வேண்டாம்.

சிறப்புப் பரிகாரம்: செவ்வாய்க்கிழமை அன்று நவக்கிரகங்களை வலம் வந்து வணங்குங்கள். அதிர்ஷ்ட எண்கள்: 2,4,9, அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்டக் கிழமை: செவ்வாய்.

மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்

*நல்ல முயற்சியால் வெற்றிகளை அடையும் தனுசு ராசி அன்பர்களே!*

## தனுசு



என்னதான் நல்லது செய்தாலும் நெருங்கியவர்கள் தரும் சங்கடத்தால் மனவருத்தம் அடைவீர்கள். வழக்கம்போல் வரவு செலவு களை திறமையாக சமாளிப்பீர்கள். தென்திசை செய்தி ஒன்று தென்றலாக வரும். மனக்கசப்பு அகலும்.

உத்தியோகஸ்தர்கள் முக்கியமான ஆவணங்களை மறந்து வைத்து தேட வேண்டிய நிலை வரும். உடன் பணியாற்றுபவர்கள் மனஉளைச்சலை ஏற்படுத்துவார்கள்.

குடும்பத்தில் தம்பதிகள் இடையே கருத்து வேற்றுமை மறந்து மகிழ்ச்சி கூடும். நீண்ட காலமாக பிரிந்து இருந்தவர் இல்லம் தேடி வரக் கூடும். பூமி சம்பந்தமாக இருந்து வந்த பிணக்கு தீரும். கடன் சுமைகள் குறையும்.

கலைஞர்கள் உறுதியான உழைப்பால் உள்ளத்தில் சந்தோஷத்தை அடைவார்கள். கூட்டு முயற்சி சகக் கலைஞர்களின் ஒத்துழைப்பால் திருப்தியாக அமையும்.

சிறப்புப் பரிகாரம்: செவ்வாய், வெள்ளி கிழமைகளில் துர்க்காதேவியை வழிபடவும். நெய் தீபமிடுவது நல்ல பலனைத்தரும். அதிர்ஷ்ட எண்கள்: 3,8,9, அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட கிழமை: வெள்ளி

உத்திராடம் 2,3,4-ம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2-ம் பாதங்கள்

*ஆன்மீக சிந்தனை கொண்ட மகர ராசி அன்பர்களே!*

## மகரம்



நீண்ட கால முயற்சி ஒன்று நல்ல முறையில் கைகூடி வரும். முக்கிய பிரமுகர்களின் ஆதரவு உண்டு. திட்டமிட்டபடி சுபகாரியங்களை செய்து முடிப்பீர்கள். பணவரவு தாராளமாக இருக்கும். வில்லங்கமான ஒரு விஷயத்தை வித்தியாசமான முறையில் சரி செய்வீர்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பாராத நல்ல திருப்பங்கள் உண்டாகும். மேலதிகாரிகளின் ஆதரவு எதிர்பார்த்தபடி அமையும். சுயதொழில் செய்வோருக்கு திருப்பங்கள் இருந்தாலும், திட்டங்கள் தீட்டுவதாலும், தொழிலை அபவிருத்தி செய்வதாலும் செலவுகள் அதிகரிக்கும். பணியாட்களை மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும்.

குடும்பத்தில் சீரான போக்கு தென்படும். சிறிய கடன்களால் பாதிப்பு வராது. நல்ல விஷயங்கள் கைகூடி வருவதால் குதூகலம் உண்டாகும். பெண்கள் தேவையற்ற வார்த்தைகளை பேசுவதால் சிறிய சங்கடங்களை சந்திப்பார்கள். கலைஞர்களுக்கு சிறிய மருத்துவச் செலவுகள் உண்டாகும். சிலர் தேவையற்ற வாக்குவாதத்தால் சர்ச்சையில் சிக்கிக் கொள்வார்கள். பங்குச் சந்தையில் முதலீடுகளை அதிகப்படுத்துவீர்கள்.

சிறப்புப் பரிகாரம்: வியாழக்கிழமை அன்று தட்சிணாமூர்த்தி சுவாமியை வில்வத்தால் அர்ச்சிக்கவும். அதிர்ஷ்ட எண்கள்: 2,6,9, அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்டக் கிழமை: செவ்வாய்

அவிட்டம் 3,4-ம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3-ம் பாதங்கள்

*அற்புத எண்ணங்கள் பெற்ற கும்ப ராசி அன்பர்களே!*

## கும்பம்



நீங்கள் மேற்கொண்ட நல்ல முயற்சிகள் வெற்றிகளைத் தரும். எதிர்பார்த்திருந்த இடத்தில் இருந்து உதவி தேடி வரக்கூடும். மருத்துவத்திற்கு செலவு செய்தாலும் தக்க நேரத்தில் அது பயனுள்ளதாக அமையும். பண வரவு தாராளமானதாக இருக்கும். தபால் மூலம் நற்செய்தி வீடு தேடி வரும்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளால் பாராட்டப் படுவார்கள். உண்மையான உழைப்பிற்குரிய பலன் கிடைத்து மகிழ்வீர்கள்.

சுயதொழில் செய்வோருக்கு வரவும், செலவும் சரியாக இருக்கும். பணத்தைக் கையாளுவதில் அதிக கவனம் தேவை.

குடும்பத்தில் முக்கிய பிரச்சினையை பேசி முடிக்க வேண்டி வரும். சகோதர, சகோதரி வழி உறவுகளில் இருந்த சிறு பிரச்சினைகள் தீரும். பெண்களுக்கு நன்மை தரும் வகையில் ஆன்மிக பயணம் அமையும். கலைஞர்கள் வார்த்தைகளை கையாளுவதில் சற்று கவனமாக இருக்க வேண்டும். தொழில் ரீதியான போட்டியை சமாளிக்க வேண்டி இருக்கும்.

பங்குச்சந்தையில் லாபமும், நஷ்டமும் சரிசமமாக அமையும்.

சிறப்புப் பரிகாரம்: ஞாயிற்றுக்கிழமை அன்று சூரிய பகவானை வழிபடுவது நன்மையையும், வளத்தையும் செழிப்பாய்த் தரும். அதிர்ஷ்ட எண்கள்: 3,5,9, அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்டக் கிழமை: வியாழன்

பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

*கலைகளில் ஈடுபாடு கொண்ட மீன ராசி அன்பர்களே!*

## மீனம்



வருமானம் வழக்கம்போல இருந்தாலும், செலவுகள் அதிகரிக்கும். நீங்கள் முக்கிய முடிவுகளை ஆலோசித்து எடுக்கவும். வடதிசை செய்தி ஒன்று உங்கள் வட்டத்தை போக்கி மேன்மையைத் தரும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கூடுதல் பொறுப்புகள் தேடி வரும். பணவரவு சுமாராக இருக்கும். ஆவணங்களை பாதுகாப்பதில் கவனம் தேவை. சுயதொழில் செய்வோர் மூலதனத்தை அதிகப்படுத்த கடன் வாங்க வேண்டி வரும். பணியாளர்களின் ஒத்துழைப்பு சற்று குறைவாக இருக்கும். கூட்டுத்தொழில் செய்பவர்கள், பங்குதாரர்களின் அதிருப்தியை சந்திக்க நேரும். வழக்கம்போல் தங்கள் புன்னகையால் மற்றவர்களின் குறையை போக்க முயற்சிப்பீர்கள்.

குடும்பத்தில் சிறிய மனக்கசப்புகள் இருந்தாலும், பெரிய பிரச்சினைகள் இருக்காது. சிலருக்கு சுபச்செலவுகள் உண்டு. பெண்களுக்கு நீண்ட தூரத்தில் இருந்து வரும் செய்தி மகிழ்ச்சியைத் தரும். கலைஞர்கள் புதிய பரிமாணத்துடன் வெளி வருவீர்கள். பங்குச் சந்தை வழக்கம்போல் செயல்பட்டாலும், முதலீடு விஷயத்தில் மட்டும் கவனம் தேவைப் படும். அதிரடியான முயற்சிகள் வேண்டாம்.

சிறப்புப் பரிகாரம்: சனிக்கிழமை அன்று ஸ்ரீஆஞ்சநேய சுவாமியை வழிபாடு செய்யவும். அதிர்ஷ்ட எண்கள்: 5,8,9 , அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்டக் கிழமை: சனி

# வாக்களித்த கரங்களுக்கு நன்றி!

தமிழர்களின் அரசியற் தலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே என்பதை நிரூபிக்கும் வகையிலும் 25 வருடங்களாக மக்களுக்காக மண்ணில் ஊடகச் சமராடிய 'உதயன்' பத்திரிகை மூலம் நான் செய்த பணிக்காகவும்,

நாடாளுமன்ற உறுப்பினராக என்னைத் தெரிவுசெய்வதற்காக தோளோடு தோள் நின்றுதவிய உள்ளங்களுக்கும் வாக்களித்து என்னை வாகை சூடவைத்த என் இனிய மக்களுக்கும் அவர்களின் கரங்களை இறுகப் பற்றியபடி இந்த மகிழ்ச்சியான தருணத்தில் நன்றிகளைக் கூறுகின்றேன்.

தொடர்ந்தும் எனது பணிகளை முன்னரை விடவும் முழுவீச்சோடு முன்னெடுத்து தமிழ்த்தேசியத்தை வலுப்பெறச்செய்து மக்களுக்கான அரசியல் பாதையில் பயணிப்பேன்.

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்,



நெஞ்சம் நெகிழும் நன்றியுடன்:

**ஈ.சரவணபவன்**

(தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற
வேட்பாளர், தமிழ்த்தேசியக்
கூட்டமைப்பு-யாழ்.மாவட்டம்
நிர்வாக இயக்குநர்
'உதயன் - சுடர் ஒளி')

TIEFSTE PREISE!!







Möbel Ferrari
Kleine Preise
Grosse Auswahl

www.moebel-ferrari.ch

HINWIL Wässeristrasse 28
Tel. 044 931 20 40

Täglich offen von 9.00 bis 20.00 Uhr

Direkt-Kedit
- 6 Monate ohne Zins